விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி


Valampurii

பக்கங்கள்: இருபத்து நான்கு

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 08 புதன்கிழமை (21.03.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 093

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்ட்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இந்தியாவின் ஆதரவைப் பெற போராடும் இலங்கை அரசு!



## கிருஸ்ணாவை சந்தித்தார் பீரிஸ்

(ஜெனிவா), வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஜெனிவாவில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணாவை சந்தித்து நேற்று பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார். ஜெனிவாவில் இடம்பெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19-வது கூட்டத் தொடரில் கொண்டு வரப்பட்டுள்ள இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிப்பதாக இந்தியா அறிவித்துள்ள நிலையிலேயே இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஐ.நா.மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் தனக்கு எதிராக முன் வைக்கப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் புது டில்லி எடுத்துள்ள முடிபால் பெரும் அதிர்ச்சி யடைந்துள்ள இலங்கை அரசாங்கம், இந் தியாவின் ஆதரவை பெற்றுக் கொள்ளும் இறுதி முயற்சிகளை மீண்டும் மேற்கொண் டுள்ளது. (24ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் உறுதிப்படுத்திய இந்தியப் பிரதமர்!

(புதுடில்லி)

ஜெனிவாவில் இடம்பெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் 19ஆவது கூட்டத்தொடரில் கொண்டு வரப்பட்டுள்ள இலங்கைக்கு எதிரான தீர்மா னத்தை இந்தியா முழுமையாக ஆதரிக்கும் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மீண்டும் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

இந்திய ஜனாதிபதியின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நாடாளு மன்ற அமர்வில் கலந்து கொண்டு பதிலளி த்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இதுகுறித்து அவர் தமது உரை யில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் நலனுக்காக இந்திய அரசு பல்வேறு வழிகளி லும் உதவிகளைச் (24ஆம் பக்கம் பார்க்க)

## சுயாதீன விசாரணை நடத்த நட்பு நாட்டின் ஆதரவு!


### மகிழ்ச்சியில் அமெரிக்கா

(ஜெனிவா)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர் மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான விசார ணைகளை நடத்த இலங்கை அரசாங்கத் திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலான தமது முயற்சிகளுக்கு முக்கியமான நட்பு நாடு ஒன்றின் ஆதரவைப் பெற்றுள்ளதாக அமெ ரிக்கா தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 19ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்திற்கு இந்தியா வழங்கி யுள்ள ஆதரவு குறித்தே அமெரிக்க இராஜ தந்திரிகள் இவ்வாறு கூறியதாக அமெரிக்க ஊடகம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

இத்தீர்மானத்தை தோற்கடிப்பதற்கு இல ங்கை அரசாங்கம் கடும் முயற்சிகளை மேற் கொண்டிருந்த போதிலும் இத் தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த வாரம் ஏற்றுக் கொள்ள தயாராகி வருவதாக ஐ.நா. மனித உரிமைகள் (24ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கைக்கு விஜயம் செய்வார் ஆணையாளர் நவநீதம்பிள்ளை




இலங்கைக்கு விஜயம் செய்யத் தயார் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித் துள்ளார்.

இலங்கைக்கு எப்போது விஜயம் செய்வது என்பது பற்றிய திகதிகள் இன்னமும் தீர்மானிக் கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் கலந்து கொண்ட தமிழ் மனித உரிமை செயற்பாட்டாளர் எஸ்.வி.கிருபாகரன் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு ஏற்கெனவே தமக்கு அழைப்பு விடுத்துள்ளதாக நவநீதம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். இலங்கைக்கு (24ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் உறவுகளை மீட்ட சம்பவங்களை கூறுங்கள்

### இராணுவத் தளபதி முழக்கம்

ஜனாதிபதியின் வழிகாட்டலில் இராணு வத்தினரின் மூலம் பிரபாகரனின் தாயார், தமிழ்ச்செல்வனின் குடும்பம், சூசையின் குடும்பம் போன்றோரை காப்பாற்றியதைப் பற்றயெல்லாம் கூறாமல் எமது நாட்டுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுக்களை முன் வைக்க முயல்கின்றார்கள் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜய சூரிய தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனானையில் உள்ள இராணுவத்தின் 23ஆவது படை யணி தலைமைக் காரியாலயத்திற்கு விஜயம் செய்த இராணுவத் தளபதி, அங்குள்ள இரா ணுவ அதிகாரிகள் மத்தியில் உரையாற்றுகை யிலேயே இவ்வாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஜெனிவாவில் தற்போது நடைபெறும் மனித உரிமைகள் மாநாடு தொடர்பிலேயே தற்போது ஊடகங்களில் செய்திகளாகவுள்ளன. யுத்த காலத்தில் (24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு வடக்கில் பெருமளவானோர் ஆதரவு

(கிளிநொச்சி)

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரி மைகள் பேரவையில் கொண்டு வரப்பட்டுள்ள பிரேரணை தொடர்பில் வடக்கில் உள்ள மக் கள் பல வகையான கருத்துக்களை வெளி யிட்டிருக்கின்றார்கள். 3 வருடங்கள் முடிந் திருந்தாலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதை பெரும்பா லான தமிழர்கள் வலியுறுத்துகின்றார்கள். அந்த வகையில் அமெரிக்காவின் பிரேர ணையைத் தாங்கள் வரவேற்பதாக அவர்கள் கூறுகின்றார்கள் என பி.பி.சி. தெரிவித்துள்ளது.

முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளுக்கு அரசு நிச்சயம் பதில் சொல்ல வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டும் என் றும் ஒருவர் தெரிவித்தார். போரின் இறுதிக் காலத்தில் பிணங்களின் மீது தாம் நடந்து வந் ததாக கண்ணீரோடு குறிப்பிட்ட மற்றொருவர், பல பிணங்கள் பதுங்குகுழிகளிலேயே புதைக் கப்பட்டதாகக் கூறினார்.

கட்டாய ஆள்சேர்ப்பு உள்ளிட்ட சில விடய ங்களை விடுதலைப்புலிகள் செய்தார்கள் என்றாலும், அரசு தரப்புதான் அதிக அளவி லான அழிவுகளை ஏற்படுத்தியது என்று தமி ழோசையிடம் தெரிவித்த ஒரு பெண்மணி, இனியாவது மக்களுக்கு ஒரு தீர்வு வேண்டும் என்றார். கடந்த கால சம்பவங்களுக்கு பொறுப்பு சுமத்தப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

போர் முடிந்தும் (24ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு தேர்தல் பிற்போடப்பட்டது

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப் பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் பிற்போடப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலரும், மாவட்ட செயலாள ருமான நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 24ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைத் துறைப்பற்று பிரதேச சபைகளுக்கான உறுப் பினர்களைத் தெரிவு செய்வதற்காக நடைபெற விருந்த தேர்தல்கள் மேன்முறையீட்டு நீதி மன்றத்தால் (24ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முள்ளிவாய்க்கால் மக்களை விரைவில் மீள்குடியமர்த்துங்கள்

## ஜயலத் எம்.பி. அரசிடம் கோரிக்கை

(முல்லைத்தீவு)

வெள்ளமுள்ளிவாய்க்கால் மற்றும் கரையா முள்ளிவாய்க்கால் மக்களை சொந்த இடங்களில் மீள்குடியேற்ற இன்னும் காலம் தாழ்த்தாதீர்கள் என ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன அரசிடம் வற்புறுத்தியுள்ளார்.

அவர் அங்கு சென்றபின் வெளியிட்ட அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கடல் மற்றும் நந்திக்கடல் கலப்பு என்பவற்றுக்கிடையிலுள்ள பகுதிகளான வெள்ளமுள்ளிவாய்க்கால் மற்றும் கரையா முள்ளிவாய்க்கால் ஆகியபிரதேசங்களிலிருந்து சுமார் 400 குடும்பங்கள் இன்னும் தங்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படாமல் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இறுதி யுத்தம் நடைபெற்றபோது அதில் சிக்கி இடம்பெயர்ந்த இந்த அப்பாவி மக்கள் இன்று யுத்தம் நிறைவுபெற்று மூன்று வருடங்களாகியும் இன்னும் விடிவு எட்டவில்லை. அவர்கள் சொந்த இடங்களில் மீள்குடியேறும் உரிமை தொடர்ந்தும் மறுக்கப்பட்டுவருகிறது.

இடம்பெயர் முகாம்களில் தங்கியிருந்த இந்த மக்கள் இன்று புதுக்குடியிருப்பு, தம்பிலுவில்பிரதேசத்தில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். கல்வனைஸில் தயாரிக்கப்பட்டுள்ள கூரைகளைப் பயன்படுத்தி இவர்களுக்கான கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சூழலுக்கு ஒவ்வாத இந்த கல்வனைஸ் கூரைகளினால் அதிக வெப்பம் வெளியேற்றப்படும் என்பதால் அப்பகுதியில் தற்சமயம் அதிக வெப்ப நிலை காணப்படுவதாலும் அம்மக்கள் மேலும் மேலும் அதிக துன்பங்களை இன்றும் அனுபவித்தே வருகின்றனர்.

கடந்தவாரத்தில் ஐக்கியதேசியக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித்தலைவருமான ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்றக் குழு யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தது. இந்த விஜயத்தின்போதே இந்த உண்மைத்தகவல்களை நான் திரட்டினேன் என்றார். (எ-11)

## அரச அதிபருக்கு கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சிறந்த நிர்வாக பெண்மணி என ஜனாதிபதியால் சர்வதேச பெண்கள் தினத்தில் பாராட்டி கௌரவிக்கப்பட்ட யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரை பாராட்டி விருது வழங்கிக் கௌரவிக்கும் விழா யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கலையரங்கில் இன்று பிற்பகல் 3 மணிக்கு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட ஆலோசனை உறுப்பினர் வைத்திய கலாநிதி லயன்ஸ் வை.தியாகராஜா, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், கோப்பாய் பிரதேச செயலாளர் எம்.பிரதீபன் மற்றும் பேராசிரியர், எஸ்.சிவலிங்கராசா, பேராசிரியர் எம்.சின்னத்தம்பி, யாழ்.இந்துக்கல்லூரி அதிபர் எஸ்.கணேசராசா மற்றும் கல்லூரியின் உப பீடாதிபதி, இணைப்பாளர்கள், கல்வியியலாளர்கள் பாராட்டுரைகளை வழங்கவுள்ளன. (எ)

## ஆக்கங்களை அனுப்பலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். எயிட் நிறுவனம் பல்துறை சார்ந்த தற்கால சமுதாயப்பிரச்சினைகள் உள்ளடங்கிய மாத இதழொன்றை வெளியிடவுள்ளது. மேற்படி இதழ் வெளிவருவதற்கு உறுதுணையாக இத்துறை சார்ந்த ஆர்வலர்களிடம் இருந்து சீர்திருத்த கருத்துக்களுடன் அமைந்த சம்பவக்கட்டுரைகள் அல்லது சமூக அவலங்களின் காரணத்தினால் பாதிப்புக்குள்ளாக்கிய அனுபவக் கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி கட்டுரைகளை ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.எயிட் நிறுவனம், 38, கச்சேரி நல்லூர்வீதி என்னும் முகவரிக்கு அல்லது Yarlaid@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தமது ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு திட்ட அலுவலர் அறிவித்துள்ளார். (எ)


தேவை

* போட்டோ சொப் டிசைனர்
* சிட்டை எழுதுநர்கள்(Clerk)

போன்ற பணிகளுக்கு ஆட்கள் தேவை.

தொடர்புகளுக்கு:-
மூர்த்தி டிஜிற்றல் கலர்லாப்
62/20 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-6120)



செல்லா சினிமா-யாழ்ப்பாணம்




EASY ENGLISH
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711
(7379)


## இடமாற்ற மேன்முறையீடு செய்த ஆசிரியர்களுக்கு நேர்முகத் தேர்வு

(கொழும்பு)

இடமாற்றம் சம்பந்தமாக மேன்முறையீடு செய்த 23 ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வு ஒன்று கல்வி அமைச்சு வடமாகாண அலுவலகத்தில் (வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்) நாளை 22ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது. அந்நேர்முகத்தேர்விற்கு அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

முதல் நியமனக் கடிதம் உட்பட சகல ஆவணங்களையும் அவற்றின் நிழற் பிரதிகளையும் தவறாது கொண்டு வருமாறு அவர் அறிவித்துள்ளார்.

அழைக்கப்பட்ட 23 ஆசிரியர்களின் விபரம் வருமாறு,

திருமதி ரி. சிவஞானசீலன் (அச்சுவேலி சென் திரேசா பாடசாலை), நடேசன் சர்மினி (கரணவாய் வேதாரணிய வித்தியாலயம்), சுபாஜினி சுஜீவன் (யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), கனகரட்ணம் கனகேஸ்வரன் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை), திருமதி அகல்யா மணிசேகரம் (அரிவித்தோட்டம் சிவானந்த வித்தி.), நவராசா சூரியகலா (கணேசபுரம் சண் முகானந்தா வித்தி), பி.கிருபைநாயகம் (சென்ஜேம்ஸ்மகளிர் பாடசாலை).

திருமதி யசோதரன் சுகந்தி (அரிவித் தோட்டம் சிவானந்த வித்தி.), திருமதி சுதாஜினி லோகதாஸ் (வரணி மகாவித்தி.), திருமதி விக்னேஸ்வரன் சசிகலாதேவி (வரணி மகாவித்தி.), ஆனந்தராசா பிரியதர்சினி (துட்டாதெரு மெதடிஸ்த த.க.பா.), திருமதி வதனி தினாகர் (அடம்பன் ம.ம.வி.), திருமதி சுபாஜினி சுஜிவன் (யாழ். இந்து பெண் ஆரம்ப பாடசாலை), திருமதி சற்குணேஸ்வரி தபேந்திரன் (கைதடி விக்னேஸ்வரா வித்தி.)

திருமதி விஜயா சனாதனன் (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), காயத்திரி நெல்லி நாதலிங்கம் (ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி), திருமதி வசந்தகுமாரி தவநேசன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), திருமதி சுமேதா ஜெயரூபன் (221/4, கனகசபை அவனியூ, யாழ்ப்பாணம்), திருமதி றஜி சுரேந்திரன் (குமுழமுனை மகா வித்தி.), செல்லையா அன்ரன் செல்ல நாயகம் (பாசையூர் சென் அன்ரனி R.C.M வித்தியாலயம்), திருமதி சசிகலா பிரபாகரன் (இணுவில் மத்திய கல்லூரி), திருமதி சிவனேஸ்வரி ஞானசேகரன் (கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தி.), திருமதி இந்திரா ஜெயநிர்மலன் (தவசிக்குளம் அ.த.க. பாடசாலை). (எ)

## மாணவர் பகிஷ்கரிப்பு இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக 2ஆம் வருட கலைப்பீட மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த பகிஷ்கரிப்பு போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்துடன் நேற்று மாலை மாணவ பிரதிநிதிகள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதையடுத்து பகிஷ்கரிப்பு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் தெரிவித்துள்ளார். அவர்களுக்கான விரிவுரைகள் அனைத்தும் வியாழக்கிழமை ஆரம்பமாகவிருப்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## ஆளுநரின் உதவி பெறாத மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு கௌரவ ஆளுநரின் விசேட நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் கடந்த மாதம் 22ஆம் திகதி கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து உதவு தொகை வழங்கப்பட்டமாணவர்களில், சித்தியடைந்து பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறியமாணவர்கள் தவிர்ந்த ஏனையோருக்கான உதவு தொகை ஏ9 வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஆளுநரின் செயலகத்தில் வைத்து நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஆளுநரினால் உதவி வழங்கப்படவுள்ளது.

மேற்படி நிகழ்விற்கு உதவுதொகையை பெறவுள்ள மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (எ)

## விழிப்புணர்வு. செயலமர்வு

(உரும்பிராய்)

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையில் நாளை வெள்ளிக்கிழமை பெற்றோர்கள், பிள்ளைகளுக்கு கட்டாயக்கல்வி, சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு அதிபர் ஜி.அன்ரன் பிரேமதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ)

## மது போதையில் நின்ற நால்வருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

மது போதையில் வீதியில் நடனமாடிய நால்வர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். இவர்களுக்கு 12 ஆயிரம்ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

றக்காவீதி, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் போன்ற இடங்களில் மதுபோதையில் குறித்த நான்கு நபர்கள் வீதியால் பயணிப் போருக்கு இடையூறு ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

வழக்கினை விசாரணை செய்த யாழ்.நீதவான் மா.கணேசராஜா குறித்த நால்வரில் மூவருக்கு தலா 3ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்ததோடு மற்றையவர்கள் அரச உத்தியோகத்தராக காணப்பட்டமையால் 3 ஆயிரம் ரூபாய் அரச செலவாக விதித்து தீர்ப்பளித்தார். (எ-4)

## நகை கொள்ளையடித்த குற்றச்சாட்டு அநுராதபுரவாசிக்கு ஆறு மாதச் சிறை

(யாழ்ப்பாணம்)

வீட்டினுள் புகுந்து நகைகளினை கொள்ளையடித்த அநுராதபுரவாசிக்கு யாழ்.நீதிமன்றம் 6 மாதகால சிறைத்தண்டனை விதித்துள்ளது.

கடந்தவருடம் தை மாதம் 10ஆம் திகதியன்று மார்ட்டின் வீதியில் உள்ள வீடொன்றில் அநுராதபுரம் கஹட்டகஸ்திரியவினைச் சேர்ந்த ஹென்றி முகமது தபிக் என்பவர் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை திருடியுள்ளார்.

குறித்த நபருக்கு எதிராக வீட்டினுள் அத்துமீறிநுழைந்தமை, நகைகளை களவெடுத்தமை, திருடிய நகைகளை வங்கியொன்றில் அடகு வைத்து பணம்பெற்றமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

குறித்த நபர் சென்றவருடம் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று யாழ்.நீதவான் மா.கணேசராஜா முன்னிலையில் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது குறித்த நபருக்கு ஆறுமாத கால சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

மேலும் இச்சம்பவத்தோடு தொடர்புடைய அநுராதபுரத்தினைச் சேர்ந்த முகமெட் ஜசார் என்பவர் தான் குற்றமற்றவர் என வாதிடுவதனால் சித்திரைமாதம் 20ஆம் திகதி விளக்கத்திற்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (எ-4)

## விளையாட்டு நிகழ்வு

(துணுக்காய்)

துணுக்காய் கல்விவலய மெய்வல்லுநர் விளையாட்டுவிழா இறுதிநாள் நிகழ்வுகள் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல். வெனிற்றா மாலினி தலைமையில் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னைநாள் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இதில் இவ் வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு விளையாட்டுக் குழு அறிவித்துள்ளது. (எ)




கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர பொங்கல் (05.04.2012) விழாவின் போது வாணிபம் மேற்கொள்ளும் வாணியர்களுக்கான நில ஏல விற்பனை அறிவித்தல்

நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா எதிர்வரும் 05.04.2012 வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. விழாவின் போது, வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான நில ஏல விற்பனை எதிர்வரும் 25.03.2012 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

இவ்வண்ணம்
ஆலய பரிபாலன சபை.

(சி/6075)

## இன்று ஒரு தகவல்

# கடவுச்சீட்டு

"இந்த உலகமே எனக்குச் சொந்தம்" இப்படிச் சொல்வது விசாலமான மனதைக் காட்டுகிறது என்பது உண்மைதான். இருந்தாலும் நடைமுறையிலே சற்று சிக்கல் உள்ளது.

இப்போது ஒரு நாட்டிலேயிருந்து இன்னொரு நாட்டுக்குப் போகவேண்டும். நாம் நினைத்தவுடனேயே யாருடைய அனுமதியும் இல்லாமலே போய் வந்துவிட முடியுமா?

இது எமது நாடு. " நீ போகலாம்" என்று சொல்ல வேண்டும். இன்னொரு நாடு " நீ வரலாம்" என்று சொல்ல வேண்டும். அதன் பின்னர்தான் பிரயாணத்தையே ஆரம்பிக்க முடியும்.

நமது நாடு நீ போகலாம் என்று சொல்வது; அதுதான் பாஸ் போர்ட் என்ற கடவுச்சீட்டு.

அந்த நாடு "நீ வரலாம்" என்று சொல்வது அது தான்" விசா".

அந்தக் காலத்திலேயெல்லாம் ஒரு தேசத்து ராஜாவின் தூதர்கள் அல்லது அதிகாரிகள் இன்னொரு தேசத்திற்கு போகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம்.

அந்தச் சமயத்திலே அரசனிடம் இருந்து நன்னடத்தைக் காகிதம் அல்லது முத்திரை மோதிரம் வாங்கிக்கொண்டு போவது வழக்கமாயிருந்தது.

முன்பெல்லாம் வெளிநாடு போவது என்பது விதியோடு விளையாடுவது மாதிரி. எப்போது போய் சேருவார்கள்? கவனமாக வருவார்களா? எதுவுமே தெரியாது.

இப்போதெல்லாம் காலையிலே போய் மாலையிலே திரும்பி வந்து விடுவார்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த ரோமாபுரி மன்னன் அகஸ்டஸ் சீஸர்; அவன் கொடுத்த கடவுச்சீட்டிலே உள்ள வாசகம் என்ன தெரியுமா?

"இதை கொண்டு வருகிற பயணிக்கு பூமியிலோ கடலிலோ எவனாவது துன்பம் செய்விக்க முடிவு செய்தால், அப்படிச் செய்யும் முன் சீஸரை எதிர்த்துப் போரிடும் அளவுக்குத் தனகுப் பலம் இருக்கிறதா என்பதை யோசிப்பானாக" இது தான் அந்த வாக்கியமாகும்.

அதன் பின்னர் 1780 ஆம் ஆண்டிலே தான் முதன் முதலிலே அமெரிக்க கடவுச்சீட்டு வழங்கப்பட்டது. 1780 ஜூலை 7 ஆம் திகதியிட்ட அதிலே காணப்படுகின்ற வாசகம் என்ன தெரியுமா?

"சட்டம் தொடர்பான காரியங்களுக்காக வெளிநாடுகளுக்கு விஜயம் செய்ய விரும்பும் அமெரிக்க ஐக்கி நாடுகளின் பிரஜை" என்று எழுதியிருக்கிறது.

1914 ஆம் ஆண்டிலேதான் முதல் தடவையாகப் புகைப் படம் இணைக்கும் பழக்கம் ஏற்பட்டது.

சிறந்த கடவுச்சீட்டு ஆரம்பமான கதை தான் இது.

கள்ள கடவுச்சீட்டு ஆரம்பமான கதை எப்படி தெரியுமா?

இரண்டாவது உலக மகாயுத்தம் ஆரம்பமாவதற்கு முன்பே கள்ள கடவுச்சீட்டு ஆரம்பமாகி விட்டது.

ஜேர்மனியிலே ஹிட்லர் பிறந்தார். யூதர்களை விரட்டினார். ஜேர்மனியிலே மட்டுமல்ல... ஐரோப்பாவிலும் கூட விரட்டினர்.

அவர்களது கடவுச்சீட்டு அனைத்தும் பறிமுதல் செய்யப் பட்டது. சித்திரவதை கூடங்களுக்குக் கொண்டு போனார்கள். இதில் தப்பிக் கொண்டவர்கள் ஐரோப்பாவிலேயே நாடு நாடாக அலைந்தார்கள்.

அவர்கள் கையிலே கடவுச்சீட்டு இருந்ததால் பயமில்லாமல் வாழலாம். இதனாலேதான் கள்ள கடவுச்சீட்டு வியாபாரம் ஆரம்பமானது.

இறந்துபோன அல்லது காணாமல் போன ஜேர்மன், அவுஸ்திரேலியா, பிரெஞ்சு படைவீரர்களின் கடவுச்சீட்டுகளை திருடிக்கொண்டு வந்து கள்ளச் சந்தையிலே அதிக விலைக்கு விற்க ஆரம்பித்து விட்டார்கள்.

ஏராளமான அகதிகள், இறந்துபோன படைவீரர்கள் பேரிலே வாழ்ந்தார்கள். அவர்கள் மாதிரியே தமது முடிகளை வெட்டிக்கொண்டார்கள்.

இந்தக் காலத்திலேயும் பொய்யான பேரிலே சுற்றித் திரிகிறவர்கள் உலகம் பூராகவும் இருக்கிறார்கள். மாட்டிக் கொள்ளும் போதுதான் உண்மை வெளியிலேயே வரும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நெற் களஞ்சியம் அமைக்க 17 இலட்சம் ரூபா ஒதுக்கீடு

(பூநகரி)

பூநகரி ப.நோ.கூ. சங்கத்தின் வாடியடியில் அமைந்துள்ள நெற் களஞ்சியம் ஐ.எல்.ஓ (I.L.O) நிறுவனத்தின் 17 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது என சங்கத்தின் பொது முகாமையாளர் நடராசா சண்முகலிங்கம் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்நிறுவனத்தினால் ப.நோ.கூ.சங்கத்திற்கு நெல் கொள்வனவு செய்து சந்தைப்படுத்துவற்காக 98 இலட்சம் ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, சங்கமானது கிரமங்கள் தோறும் நேரடியாக சென்று விவசாயிகளிடம் நெற்கொள்ளவனவை மேற்கொண்டு வருவதாகவும், அத்தோடு கொள்வனவு மத்திய நிலையத்திற்கு நேரடியாக விவசாயிகள் தமது நெல்லைக் கொண்டு வந்து கொடுக்க முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-7-84)

# அரசபுரம், செக்காலை பகுதி மக்களுக்கான அறிவித்தல்

(பூநகரி)

பூநகரி பிரதேசத்திற்குட்பட்ட அரசபுரம், செக்காலை ஆகிய பகுதிகளில் வசித்து வந்த காணிப்பதிவுள்ள மக்களுக்கு பூநகரி உதவி அரசாங்க அதிபர் பகிரங்க அறிவித்தலொன்றினை விடுத்துள்ளதாக பூநகரி பிரதேச சபை அறிவித்துள்ளது.

அரசபுரம், செக்காலை ஆகிய பிரதேசங்களில் பொதுமக்களுக்கென வழங்கப்பட்ட அரச காணிகள் தற்போது இராணுவத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேற்படி பிரதேசத்திற்குரிய பங்கீட்டாளர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் தங்கள் காணியின் உரிமையை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களுடன் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பூநகரி பிரதேச செயலகத்திற்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(கரவெட்டி)

மாலுசந்தி- நாவலடி வீதி மிக மோசமான நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுவதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதியானது பல வருடங்களாக புனரமைக்கப்படாமையால் மிக மோசமான நிலையில் காணப்படுகின்றது. அத்துடன் நாவலடி சந்திக்கு முன்பக்கமாகவுள்ள பாலம் மிகவும் உயிர் ஆபத்தை விளைவிக்க கூடிய வகையில் சேதமடைந்துள்ளது. இதனால் அப்பாலத்தால் பயணிக்கும் பயணிகள் அச்சத்துடனேயே பயணிப்பதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வீதி மற்றும் பாலத்தை புனரமைத்து போக்குவரத்திற்கு உதவ உரிய தரப்பினர் முன்வரவேண்டும் என பயணிகளும் அப்பகுதி மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 65 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 35 | 30 | 30 |
| தக்காளி | 15 | 20 | 10 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 15 | 20 | 20 |
| கரட் | 40 | 30 | 40 |
| பூசணி | 30 | 30 | 25 |
| புடோல் | 25 | 40 | 20 |
| வாழைக்காய் | 30 | 20 | 30 |
| சின்ன வெங்காயம் | 60 | 40 | 60 |
| பெரிய வெங்காயம் | 65 | 60 | 75 |
| பாகற்காய் | 90 | 70 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 70 | 45 |
| கருணைக் கிழங்கு | - | 60 | 60 |
| பயற்றங்காய் | 50 | 80 | 70 |
| லீக்ஸ் | 70 | 70 | 60 |
| பீற்றூட் | 15 | 20 | 30 |
| கறிமிளகாய் | 50 | 60 | 45 |
| முருங்கைக்காய் | 200-250 | 350 | 200 |
| போஞ்சி | 40 | 60 | 50 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | - |
| கீரை - 1 பிடி | 5-10 | 20 | 15 |
| தேசிக்காய் | 40 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 25 |
| வெங்காயப்பூ | 50 | 80 | 60 |

# இராசி பலன்

*21.03.2012*
*(பங்குனி 08, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.17 மணிக்கு*
*சதுர்த்தசி முன்னிரவு 7.33 மணிவரை*
*சதயம் முற்பகல் 9.17 மணிவரை*
*இராகுகாலம் 12.17-1.47 மணிவரை*
*சுபநேரம் 4.47-6.17 மணிவரை*
*சித்தாமிர்தம்.*

**மேடம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், நீங்கள் எதிர்பாராத ஒரு பிரமுகர் ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம், எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

**இடபம்** கூட்டுத் தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடருவீர்கள், பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்** உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பார்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், திடீர் பயணங்கள் ஏற்படலாம், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், கட்டுப்பாடான நாள்.

**கடகம்** கொடுத்த வாக்கை காப்பாற்றுவதில் சிரமங்கள் ஏற்படலாம், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, கௌரவக் குன்றவான நாள், எடுத்த காரியங்களில் தாமதம் ஏற்படலாம்.

**சிங்கம்** சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், தொலைபேசி வழித்தகவல்கள் மகிழ்ச்சி தரும், செய் தொழில் மேன்மையும் உயர்வும் கிட்டும், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி** கூட்டு முயற்சி வெற்றி பெறும், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரும், உடல் நலம் சீராகி உட்சாகமடைவீர்கள், காரிய அனுகூலமுண்டு, கௌரவமான நாள்.

**துலாம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறலாம், வியாபார விருத்தியுண்டு, சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மனநின்மதியைக் கொடுக்கும், மக்கட் செல்வங்களால் மகிழ்ச்சியுண்டு.

**விருச்சிகம்** பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்தி தரும், பெற்றோரின் தேவைகளை நிறைவு செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆழ்ந்த சிந்தனையுண்டு, வழிபாடுகளில் நம்பிக்கை வைப்பீர்கள்.

**தனுசு** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடக்கலாம், தொழில் முன்னேற்றமுண்டு, அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கலாம், உடல் நலனில் உற்சாகம் பிறக்கும் நாள்.

**மகரம்** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், சில விவாதங்கள் ஏற்படலாம், எதிர்கால நன்மைகருதி புதிய முடிவெடுப்பீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையலாம்.

**கும்பம்** ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கவனம் எடுக்க வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களால் வேலைச் சுமை அதிகரிக்கலாம், உறவினர் நலன் கருதி புதிய செலவுகள் ஏற்படலாம்.

**மீனம்** ஆன்மீக நாட்டம் ஏற்படும், புதிய பொருட்களில் நாட்டம் காட்டுவீர்கள், கவலைகள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள், வியாபாரத்தில் சிறு மாற்றங்கள் ஏற்படலாம்.

வளவன்

# கலைஞர்கள் வாழும் புனித பூமி யாழ்ப்பாணம்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் எப்பிரதேசங்களிலும் காணப்படாத உன்னத கலைஞர்கள் வாழ்கின்ற புனித பூமி யாழ்ப்பாணம் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

கலைஞர்களுக்கான உதவிக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

இலங்கையின் எப்பாகத்திலுமில்லாத கணக்கிட்டு சொல்ல முடியாத அளவிற்கு யாழ்ப்பாணத்தில் கலைஞர்கள் வாழ்கின்றனர்.

சென்ற காலங்களில் தமிழ் மக்களின் பாரம்பரியத்தை வளர்த்தெடுத்தவர்களாக கலைஞர் காணப்பட்டனர்.

எமது கலைஞர்கள் நாட்டில் ஏற்பட்ட அனர்த்த சூழ் நிலையில் பாதிக்கப்பட்டிருந்தாலும் அவர்களுக்கான உதவிகளை நாம் வழங்கி வருகின்றோம்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களில் 37 ஆயிரம் குடும்பங்களினை குடியமர்த்தி உள்ளோம். இன்னும் 10 ஆயிரம் குடும்பங்கள் குடியமர்த்தப்பட வேண்டியுள்ளன.

28 வருட காலமாக நடைபெற்ற இடப்பெயர்வினை ஒரு சில வருடங்களில் நிவர்த்தி செய்ய முடியாது. படிப்படியாகவே மீள் குடியேற்ற முடியும்.

யுத்தத்தினால் எமது பண்பாடு, கலாசாரம் சீர்குலைந்துள்ளது என விமர்சிக்கப்படுகின்றது. எனினும் அவ்வாறு சீர்குலைகின்ற சமூகத்தினை எமது கலைஞர்கள், கல்விமான்கள் வழிப்படுத்தி நெறிப்படுத்த முடியும்.

யாழ். மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் கலை, கலாசார உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு, அவ் உத்தியோகத்தர்களினூடாக அவ்வப் பிரதேசங்களில் கலை, கலாசார நிகழ்வுகளினை நடத்தி எமது பண்பாட்டினை பேண முடியும்.

இக்கலாசார நிலையங்களை அமைப்பதற்கு தனியே அரசினை நம்பியிராது எமது சமூகத்தினரும் இவற்றினை அமைப்பதற்கு முன் வர வேண்டும்.

சாவகச்சேரி, உரும்பிராய் போன்ற இடங்களில் அப்பிரதேச மக்களின் சொந்த முயற்சியினாலேயே கலை, கலாசார மையங்கள் உருவாக்கப்பட்டு உள்ளன.

போரில் பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வு கலைகளில் நாட்டம் கொள்ள வேண்டும்.

கலையை வளர்க்கின்ற கலைஞர்கள் வாழவேண்டும். கலையும் கலைஞனும் வளரவேண்டும். இவற்றால் சமுதாயம் உயர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

## மைக்கல் வி. கழகத்தின் விளையாட்டு விழா

மாலுசந்தி மைக்கல் விளையாட்டு கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் வடமராட்சிக்கு உட்பட்ட விளையாட்டு கழகங்களின் 32 அணிகள் பங்குபற்றும் அணிக்கு 5 ஓவர் ஆறுபேர் கொண்ட கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் காலை 8 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்கு பற்றும் அணிகள் உரியநேரத்திற்கு சமுகம் தந்து போட்டி அட்டவணை தயாரிப்பதற்கு ஒத்துழைப்பு வழங் குமாறு மைக்கல் விளையாட்டு கழகத்தினர் அறிவித்துள்ளனர். (அ-3-24)


## விளையாட்டு விழா

கோப்பாய் இருபாலைச் சந்தி மழலைகள் பூங்காவின் விளையாட்டு நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிறுவன மைதானத்தில் அதிபர் த. வரதராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் வலி. கிழக்கு பிரதேச செயலர் ம. பிரதீபன், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண ஆரம்பப் பிள்ளை பருவ அபிவிருத்திப் பிரிவு கல்வி அமைச்சின் பணிப்பாளர் செல்வி. ஜெயா தம்பையா, யாழ். கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. விமலநாதன் ஆகியோர் கலந்துகொள்வர்.

பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி ரஜனி பிரதீபன் பரிசில் வழங்கி கௌரவிக்கவுள்ளார். (அ)

## விளம்பரப்பலகையாக மாறும் வரவேற்புப் பலகை



(யாழ்ப்பாணம்)

யாழ். மானிப்பாய் வீதி ஓட்டுமடம் வீதிச் சுற்று வளவில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் வரவேற்கின்றது என்ற பெயர்ப்பலகையில் விளம்பரங்கள் ஒட்டப்பட்டு தற்போது அது வரவேற்புப் பலகையாக இல்லாமல் விளம்பரப்பலகையாக காட்சியளிப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். குறித்த பகுதி யாழ். மாநகர சபைக்குட்பட்டதாக காணப்படுகின்ற போதும் குறித்தவர்களால் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

பழைமைவாய்ந்த குறித்த வரவேற்பு பலகையினை நீண்ட காலமாக தொடர்ச்சியாக விளம்பரப்பலகையாகவே பாவிக்கப்பட்டு வருகின்றது.

குறித்த சுற்று வளைவு மற்றும் வரவேற்புப் பலகை என்பன புனரமைக்கப்படாமல் காணப்படுவதனால் குறித்த பகுதியில் குப்பைகள் மற்றும் பொலித்தீன்கள் காணப்படுகின்றன. தற்போது யாழ். குடாநாட்டின் சில தொன்மைச் சான்றுகள் அழிவடைந்து வரும் நிலையில் இவ் வரவேற்பு பலகையும் கண்டு கொள்ளாமல் விடப்படுமா என மக்கள் கேள்வியெழுப்புகின்றனர். (அ-2-4)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணி வரையும் பின்வரும் பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, தட்டாதெரு, ஓட்டுமடம், ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன் மணல் பிரதேசம், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் அறிவித்துள்ளார். (அ)

## தாக்குதல் வழக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

இலங்கை கடற்படையினருக்கு எதிராக தாக்குதல் நடத்தினார் என குற்றஞ்சாட்டப்பட்டு கைதானவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு வவுனியா செட்டிக்குளம் பகுதியில் வைத்து புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த அதே இடத்தை சேர்ந்த சிவனேஸ்வரராஜா வினோத்குமார் என்பவரின் வழக்குவிசாரணையே நேற்றுமுன்தினம் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜே. விஸ்வநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கை விசாரித்த நீதிபதி வழக்கினை சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (அ-4)

## 5வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத சிறைத்தண்டனை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

பொலிஸாரின் நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுத்திய நபருக்கு யாழ். நீதிமன்றம் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கால சிறைத்தண்டனை விதித்துள்ளது.

அரியாலை சந்தனமாத கோவிற் பகுதியில் நபரொருவரினை கைது செய்வதற்குச் சென்ற போது பொலிஸாரினை இடைமறித்து கைது செய்யவிடாது இடையூறு ஏற்படுத்திய நபரை கடந்த 12 ஆம் திகதி யாழ். பொலிஸார் குறித்த நபரை கைது செய்து மன்றில் ஆஜர்படுத்தினர். பின்னர் இவர் கடந்த 16 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார்.

குறித்த நபருக்கு எதிராக நேற்று குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு மன்றில் முற்படுத்தி ஆயிரம் ரூபா அபராதத்துடன் ஐந்து வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கால சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். (அ-2-4)




## மகாபாரத தொடர்

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தினரால் மகாபாரத தொடர் தொலைக்காட்சியில் சனிக்கிழமை தோறும் காண்பிக்கப்படவுள்ளது.


இதன் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சரசாலை பொதுநூலக மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக நூலகர் இ. தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (அ-3-29)

## நூல் வெளியீட்டு விழா

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் கலைவாணி இராமநாதன் எழுதிய இந்திய மெய்யியற் சிந்தனையில் வேதாந்தம் – சித்தாந்தம் கூறும் கடவுட் கொள்கை, மற்றும் பண்டிதர் த. சுப்பிரமணியம் எழுதிய சைவபுண்ணிய காலம் மறுபதிப்பு ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம், நல்லூர், 211/17 கோவில் வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்ற யாழ். பிராந்திய அலுவலக இந்து ஆராய்ச்சி நிலையத்தில் அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் இந்திய வதிவிட இராஜதந்திர பிரதிநிதி அ. இராஜமாணிக்கம், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி வசந்தி அரசரட்னம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் வெளியீட்டுரையினை யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா ஆகியோர் ஆற்றவுள்ளனர். ஆய்வுரையினை கலாநிதி சைவ ஞானபானு, செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுகன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (அ)





தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு புத்தகம் வழங்குதல் மற்றும் கலைஞர்களுக்கு உதவி வழங்கல் நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் கலை மற்றும் கலாசார அலுவல் அமைச்சர் சி.பி. ஏக்கநாயக்க பெண்ணொருவருக்கு நினைவுப்பரிசில் வழங்குவதையும் பாரம்பரிய முறையிலான உணவுப்பண்டங்கள் நிகழ்வில் பங்கு கொண்டவர்களுக்கு வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ. சாளீன்)

## விபத்தில் காயம்

(கனகபுரம்)

கனரக வாகனம் மோதியதில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த மாணவன் படுகாய மடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருவையாறு கனிஷ்டமகா வித்தியாலயத்தை சேர்ந்த ஆறுமுகம் திவாகரன் (வயது 13) என்ற மாணவனே இச்சம்பவத்தின் போது படுகாயமடைந்தவராவார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் நடைபெற்றது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி பேருந்து வீதியருகே சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது பின்னால் வந்து கனரக வாகனம் மோதியதில் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (2-11-259)

# அரசின் 7 ஆவது ஆண்டில் நாட்டிற்கு ஏழரைச் சனியன்

## ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் 7 ஆவது ஆண்டை பூர்த்தி செய்கையில் நாட்டிற்கு ஏழரைச்சனியன் பிடித்துள்ளது. ஜெனீவாவில் இலங்கை எதிர்கொண்டுள்ள சவால்களுக்கு அமைச்சர்களின் கோமாளித்தனமான நடவடிக்கைகள் நன்மைகளைப் பெற்றுக் கொடுக்காது என ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டின்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் இராஜதந்திர ரீதியில் செயற்பட்டு சர்வதேசத்தில் காணப்படும் இலங்கைக்கு எதிரான பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும். அத்துடன் நாடு எதிர்கொண்டுள்ள பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் ஐ.தே.கவின் பாராளுமன்றக் குழு கூடி ஆராயவுள்ளது என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் 7 ஆவது ஆண்டை பூர்த்தி செய்கையில் நாட்டிற்கு ஏழரைச் சனியன் பிடித்துள்ளது.

வாக்குறுதிகளும் உறுதி மொழிகளும் காற்றோடு போலியாகி நாட்டில் ஊழல் மோசடி, போதைப் பொருள் மற்றும் விபச்சாரம், வறுமையென பல்வேறு சக சீரழிவுகள் மேலோங்கியுள்ளன.

சர்வதேச நாடுகளின் தலையீடுகள் வரலாறு காணாத வகையில் அதிகரித்துள்ளது. இதற்கு அரசாங்கத்தின் தவறான இராஜதந்திர அணுகுமுறைகளே காரணமாகும்.

எவ்வாறாயினும் ஐ.தே.க. அந்நிய நாடுகளின் தலையீட்டை ஒருபோதும் அனுமதிக்காது. ஆனால், இதற்கான சூழலை ஏற்படுத்தும் அரசாங்கத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

நிபுணர் குழுவின் அறிக்கையை கண்டித்து அமைச்சர்கள் உள்நாட்டில் உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தினர். எந்தளவிற்கு சாத்தியப்பட்டது என்று அனைவருக்கும் தெரியும்,

எனவே, நல்லிணக்க ஆணைக்குழுவில் காணப்படும் பரிந்துரைகளில் பொதுவான விடயங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். வீண் பிரச்சினைகளை வளர்த்து நாட்டை மீண்டும் ஆபத்தில் தள்ளிவிடக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-7-2)

# ஜெனீவா பிரேரணைக்கு எதிர்ப்பு; ஆயிரக்கணக்கானோர் திரண்டனர்

(கொழும்பு)

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்வைத்திருக்கும் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து லண்டனிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்னால் ஆயிரக்கணக்கான இலங்கை ஆதரவாளர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாரிய ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

பிரித்தானிய இலங்கை போரம் என்ற அமைப்பு ஏற்பாடு செய்திருந்த அமைதியான பேரணியில் இலங்கையின் தேசியக் கொடியைத்தாங்கியவாறும் அமெரிக்காவுக்கு எதிரான பதாகைகளை ஏந்தியவாறும் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கையின் ஜனநாயகத்தில் அமெரிக்கா கையிடக்கூடாது. அமெரிக்கா இரட்டைவேடம் போடுகிறது போன்ற கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இலங்கையின் உண்மையான நிலையை பிரித்தானிய பிரஜைகள் இலங்கைக்குச் சென்று பார்வையிடவேண்டுமென்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இலங்கையில் பாரியளவிலான அபிவிருத்திப் பணிகள் மீள்கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. எல்.ரீ.ரீ.ஈ.யினரின் கொடிய பிடியிலிருந்து ஆயிரக்கணக்கான மக்களை அரசாங்கம் காப்பாற்றி தற்போது அவர்களை சமாதானச் சூழலில் குடியமர்த்தியிருப்பதாகவும் சர்வதேச ரீதியில் இலங்கைக்கு எதிராக முன்னெடுக்கப்படும் போலி பிரசாரங்களுக்கு செவிமடுத்து அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் இலங்கையின் உள் விவகாரத்தில் தேவையின்றித் தலையிடுவதாக பிரித்தானிய இலங்கை போரம் அமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

இவ்வாறான அரச ஆதரவு ஆர்ப்பாட்டம் ஒன்று கடந்த திங்கட்கிழமை ஜெனீவாவிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-7-2)



பருத்தித்துறை மக்கள் வங்கியில் மகளிர் தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் வனிதா வாசனா தெமிபுச் சான்றிதழை பருத்தித்துறைக் கிளை வர்த்தக மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி. சுகந்தினி தயாபரன், பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செல்வி. சே.செல்வகுணவிற்கு சான்றிதழ் வழங்குவதையும் வங்கி முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தம் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:-பருத்தித்துறை செய்தியாளர்)


## திட்ட முகாமையாளருடைய பிரத்தியேக உதவியாளர் பதவி

திட்ட முகாமையாளருடைய பிரத்தியேக உதவியாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் 25 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட பெண்களிடமிருந்து கோரப்படுகின்றன. புதுப்பிக்கப்படக் கூடிய ஒரு வருட ஒப்பந்த முறையிலான இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர் க.பொ.த.உயர்தர அல்லது அதற்கொப்பான பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் ஆங்கிலத்திலும் தமிழிலும் சரளமாக தொடர்பாடக் கூடியவராகவும் Microsoft Office பாவனையில் தேர்ச்சி பெற்றவராகவும் இருத்தல் அவசியம். அலுவலக நடைமுறைகளில் அனுபவமும் தேர்ச்சியும் பெற்றிருப்பது விரும்பத்தக்கது.

ஏழு தினங்களுக்குள் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி, The General Secretary, YMCA Point Pedro, Kodikamam Road, Kaddaiveli, Karaveddy or email to ymcapointpedro@gmail.com.

D.M.Vethapazanam. GENERAL SECRETARY, Y.M.C.A. Point Pedro. (சி/6119)


## நெல் உத்தரவாத விலையை அதிகரிக்கக்கோரி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

நெல் கொள்வனவிற்கான குறைந்த பட்ச உத்தரவாத விலையினை 28 ரூபாவிலிருந்து 40 ரூபாவாக அதிகரிப்பதற்கான சட்ட மூலத்தினை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க கோரி நாடு முழுவதிலும் உள்ள சுமார் 3 ஆயிரத்து 500 விவசாயிகள் ஒன்றிணைந்து தம்புள்ள பொருளாதார நிலையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினை 100 இற்கு மேற்பட்ட விவசாய இயக்கங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. தம்புள்ள பொருளாதார நிலையத்திலிருந்து தம்புள்ள ரன்தெனிய விகாரைக்கு பாத யாத்திரையாக செல்லும் இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் குறித்த கோரிக்கை அடங்கிய மகஜரை மகாநாயக்க தேரரிடம் கையளித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அம்பாறை, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல், நீர்கொழும்பு, கம்பஹா, பதுளை, மஹியங்கனை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலுள்ள மரக்கறி மற்றும் நெல் விவசாயிகளும் மீனவர்களும் கலந்து கொண்டனர்.

(அ-7-2)


## அன்பான வடமாகாண Nokia வாடிக்கையாளர்களே உங்களுக்கு ஓர் அன்பான அறிவித்தல்

NOKIA Connecting People

Nokia நிறுவனம் வடமாகாணத்தில் காலடி வைத்ததை நினைத்து பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். நீங்கள் கடைகளில் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு Nokia கையடக்கத் தொலைபேசியானது அசலானதா (Original) அல்லது நகல் ஆனதா(Dupplicate) என்பதை நிரூபிப்பதற்கு அதின் உட்பகுதியில் பொறிக்கப்பட்டுள்ள இமி இலக்கங்களை (IMEI Numbers) ஐ வடமாகாணத்தின் Nokia கையடக்க தொலைபேசியின் வடபிராந்திய விநியோகஸ்தரான SVM TECHNOLOGY (PVT)LTD இல.158 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொண்டு அறியமுடியும்.

**மேலதிக தகவல்களிற்கு எங்கள் யாழ்ப்பாண தொலைபேசி இலக்கங்களான:-0212220293, 0214925828, 0773659359, 0777716242 என்ற இலக்கங்களுடனும் வவுனியா பிரதேசமாயின் (வன்னி மாவட்டம்) 0773659360, 0772441681 என்ற இலக்கங்களுடனும் தொடர்பு கொண்டு அறியமுடியும்.**

எமது ஸ்ரீலங்கா (Srilanka) ஏக விநியோகஸ்தரான Softlogic Communication (Pvt)Ltd இன் உயர் அதிகாரிகள் வடமாகாணத்தில் மேற்கொண்ட சந்தை ஆராட்சி மூலம் பின்வரும் போலி விற்பனையாளர்களை கண்டறிந்துள்ளனர். ஒரு சில வியாபாரிகள் Nokia கையடக்க தொலைபேசியின் அசல் (Original) உதிப்பாகங்களை மாற்றி (Battery, Charger, Headset, Memory card) போலியான உதிரிப்பாகங்களை அதனுள் பொருத்தி வாடிக்கையாளர்களிற்கு விற்பதனால் அந்த உதிப்பாகங்கள் 3 மாதங்களில் முற்றாக செயல் இழந்து விடுகிறது. ஆனால் அசல் Nokia (Original Nokia) உதிப்பாகங்கள் நீண்ட காலங்களிற்கு உழைக்கக் கூடியவை. இதனை உறுதி செய்ய மேலே குறிப்பிட்ட ஸ்தாபனத்துடன் தொடர்புகொள்ளவும். அவர்கள் அதனை இலங்கை தொலைத் தொடர்பு ஆணைக்குழுவிற்கு அறிவிப்பார்கள்.

எமது Nokia வாடிக்கையாளர்களே நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு கையடக்க தொலைபேசிக்கும் இலங்கையின் ஏக பிரதிநிதிகளான Softlogic Communication (Pvt)Ltd இனால் வழங்கப்படும் உத்தரவாத அட்டையை கேட்டு வாங்கி (Warrenty Card) மிகவும் கவனமாக வைத்து இருந்தால் உங்களுக்கு என்ன பிரச்சினை வந்தாலும் உத்தரவாத அட்டை உங்கள் கையில் இருக்கும் வரை (Warrenty Card) உங்களுக்கு நாங்கள் அதற்குரிய அட்டையுடன் வந்தால் அதற்கான நடவடிக்கைகளை எடுப்போம் என்பதை அறிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

NOKIA Connecting People | ஏக பிரதிநிதி Softlogic Communication (Pvt)Ltd No 4, Defonseka Road, Colombo-05 T.P:-0777264717

வட பிராந்திய விநியோகஸ்தரான SVM TECHNOLOGY (PVT)LTD 158 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.இல:-0212220293, 0214925828,

# காரைநகர்-மணற்காடு திருவருள் மிகு ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரியம்மன் ஆலய


# தேர்த்திருவிழா சிறப்புமலர்-2012.03.21

## மஹோற்சவ குருவின் அருளாசியுரை



அம்பிகை எவரொருவர்க்கு எது வேண்டுமோ அவற்றை அவரவரது சாதனைகட்குத் தக்க வாறு ''இச்சாமாத்ரம் ப்ரபோஹ சிருஷ்ஷம்'' என்றவாறு விரும்பிய பலன்களை அம்பிகை யின் பாத தரிசனம் மூலம் தருமென்பதை ரிஷி சமூகத்தினர் கண்டு கொண்டனர். யுகங்கள் தோறும் சக்தி வழிபாடு நிலைத்து நின்று வருவதை இருக்குவேதம் எடுத்துரைக்கின்றது. இத்தகு சக்தியின் மகத்துவங்கள் எண்ணில டங்கா. அவளே இன்று காரைநகரெனும் திவ்ய திருநகரில் மணற் காட்டில் ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரியாக விளங்கி மஹோற்சவ சிறப்புக்கள் பெருக்கி தேரில் ஆரோகணித்து அருள் செய்கின்ற திருக்காட்சியில் அனைவரும் கலந்து கொள்ளும் பேறு கிடைத்தது. எல்லோருக்கும் அம்பிகையின் திருவருளாசி பெருக பிரார்த்திக் கின்றேன்.

பிரம்மஸ்ரீ வ.இராஜேஸ்வரக்குருக்கள்
(மஹோற்சவ பிரதமகுரு)




## தேவஸ்தான பிரதம குருவின் ஆசியுரை



"அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்'' உலகமே சக்தியின் வடிவந்தான். சக்தியின் திருவிளையாடல்களை பஞ்சபூதங்களி லும் அணு முதல் அண்டபகிரண்டம் வரையி லான அனைத்திலும் காணலாம். மானுட இயக் கத்துக்கு துணைபுரிந்து எமையெல்லாம் இயக்கிக் கொண்டிருப் பவள் தாய். வேண்டுவார் வேண்டுவதை தந்து காத்து அருள்ப வளும் அவளே!

அந்த பேரழகு வடிவு தாங்கி காரைநகர் மணற்காடு என்னும் திருப்பதியில் கோயில் கொண்டு அருள்பவள் அன்னை ஸ்ரீ கும்ப நாயகி முத்துமாரியம்பாள். அவளை எனது முன்னோரும் யானும் காலாகாலமாக பூஜிப்பதற்கு வழிகாட்டி நிற்கின்றாள். எந்தனை இடர் சூழ்ந்த வேளையிலும் தன் பாதக்கமலங்களில் மலர் வைத்து பூஜிக்க கிடைத்த வாய்ப்பு மாரியின் திருவருளே. எல்லாம் வல்ல அம்பிகையின் திருவருள் எங்கும் பெருக எல்லோருக்கும் கிடைக்க அருளாசி வழங்குகின்றேன்.

தேவி உபாசகர் சிவப்பிரம்மஸ்ரீ நா.ஞானசம்பந்த
சிவாச்சார்யார்
மணற்காடு முத்துமாரியம்மன் தேவஸ்தானம்.



## குவலயம் காத்திடும் கும்பநாயகி தேரேறி வருகிறாள்

*ஆற்றாமுத அருமந்த பிள்ளைக்கு*
*அமுதம் அளித்த தாயே தேரேறி வருக!*
*நோற்றார் மனதில் நினைத்ததையெல்லாம்*
*நொடியில் அளிப்பவளே தேரேறி வருக!*
*மாற்றார் மனதில் மயக்கத்தையறுத்து*
*மாற்றந்தரும் மாரியே தேரேறி வருக!*
*கூற்றாம் வறுமையைக் கொன்று செல்வத்தை தரும்*
*கும்பநாயகியே மணற்காட்டில் தேரேறி வருக!*

செல்விகள்அ.கலாமதுரத்தமிழ்செல்வி

## நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வரின் அருளுரை



எல்லா அடியவர்க்கும் அருள்பாலிக்கும் முக மாக காரைநகர் மணற்காட்டு ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரி அம்பாளின் ஆலயம் அமைந்துள் ளது. சைவத்தமிழ் வாழ்வுக்கு எடுத்துக்காட்டாக அமைந்த திருவூர்களில் காரைநகர் கிராமமும் ஒன்றாகும். ஈழத்து சிதம்பரத்தை தன்னகத்தே கொண்டு விளங்கும் இப்புனித பூமி சைவ கலை கலாசார விழுமியம் சார்ந்த பண்பாட்டு மரபுகளை இன்றும் பேணிவருகின்ற சிறப்பினை காரைநகர் அன்பர்களிடம் பார்க்கலாம். இந்த வகையில் சிவனின் திருவருளாட்சியும் சக்தியின் பேரருட் திறனும் பெருகும் வகையில் தெய்வீகம் கமழும் திருவூரில் மணற்காடு எனும் சக்தியின் அருளாட்சி பெருகும் பதியில் அம்பாள் தேரேறி அருள்பாலிக்கின்ற திருக்காட்சி அற்புதமாக அமைந்து வருகின்றது. கும்பநாயகியின் திருவருள் பெருகும் இவ்வேளையில் எனது நல்லாசிகளையும் அருளுகின்றேன்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞான சம்பந்த பரமாசார்ய
சுவாமிகள்
(நல்லை ஆதீனமுதல்வர்)

## தேச மக்கள் நலன் காக்கும் தேவி கும்பநாயகியின் தேரோட்டம் காண வாரீர்



மணற்காடு அருள்மிகு ஸ்ரீகும்பநாயகி முத்து மாரியம்பாளின் தேர்த்திருவிழா இன்று(2012. 03.21) காரைநகர் திருவிழாவாக பக்திபூர்வமாக நடைபெறுகின்றது.

உலகத்திலுள்ள எல்லா உயிர்களுக்கும் தாயாக இருப்பவள் அன்னை பராசக்தி. எல்லாயு கங்களிலும் அந்தந்த யுக நாயகியாக விளங்கி அந்தந்த யுகத்தை நடத்திச் செல்பவள் சக்தி. அவள் மூவரையும் படைத்து அவர்கள் வழி ஆக்கல், அழித்தல்,காத்தல் ஆகிய அறங்களைப் பரிந்த ருளுகின்றாள்.

சக்தியை முழு முதலாகக் கொண்டது சக்தி சமயமாகும். பஞ்சபூதங்களில் ஒன்றாகிய பூமாதேவி பராசக்தியின் மறுவடி வமாகும். பூமியே அவளது ஆசனம். அதில் நீக்கமற நிற்கும் சத்தியே கல்லாயும், நீராயும், மண்ணாயும், மழையாயும், மரமா யும்,விலங்காயும், மனிதராயும், தேவராயும், மாறுப்பட்ட தன்மை யுடன் உள்ளாள். இத்தகு பெருமையள் காரைநகரில் மணற்காட் டில் அருளாட்சி செய்து அன்பர்களை வழிநடத்துகின்றாள்.

ஆற்றாதழுத அருமந்த பிள்ளைக்கு அமுதம் அளிக்கும் தாயாக இன்று தேரில் ஆரோகணித்து வந்து எம்மையெல்லாம் ஆட்கொள்கின்றாள். சுவாலித்து எரிகின்ற அக்கினியின் வடிவமாக காட்சியளிக்கும் தேரில் அழித்தல் தொழிலை ஆன்மாக்களின் மலங்களைப் போக்க தேவி தேரேறி வருகின்ற திருக்காட்சி அற்புதமாக அமைந்து விடுகின்றது. நலம் தரும் நாயகியை நாமும் வழிபட்டு வாழ்வோமாக.

செந்தமிழ் கலைஞானி, செந்தமிழ் சொல்லருவி,
வர்ணனைக் கலாநிதி
மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தன்
பணிப்பாளர்.சைவத்தமிழ் பண்பாட்டுக்கழகம்

**மலரமைப்பு :- சங்குநாதன்**

அம்மனின் தேர்த்திருவிழா சிறக்க வாழ்த்துவோர்.


**யாழ். காலணியகம்**
YARL TRADES CENTER
Agents for: Bata
11,நவீன சந்தை, ஆஸ்பத்திரிவீதி,
இல17,18,18A,யாழ்ப்பாணம்,
தொ.பே:-021 222 3152

பசுவதை ஒளிப்போம்
**தேனு களஞ்சியம்**
இல 29,நவீனசந்தை உட்புறம்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

**லக்ஷ்மி ரேடர்ஸ்**
316,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 8628

**கிருஷ்ணா நகை மாளிகை**
இல:09 கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 5046
கிருஷ்ணா அடைவு கடை
இல 370, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாண்ம்.

**SIVAKANESAN TEXTILES**
Wholesale & Retail Dealers In Textiles
Specialist in Wedding Sarees
#41,Grand Bazaar
Jaffna.Tel:2222063

**சரவணா ரெக்ஸ்**
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு புத்தம் புதிய தெரிவுகளில் முழு குடும்பத்துக்கும் ஏற்ற ஆடைக்ளை பெற்றுக்கொள்ள
நல்லூர்
சரவணா ரெக்ஸ்
கிளைI
326,529,பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். 021 222 1723
கிளைII .
770,772,கே.கே.எஸ் வீதி,
(குட்டாதெருச்சந்தி)
யாழ்ப்பாணம், 021 222 0421

DHL உள்நாட்டு, வெளிநாட்டு துரித பொதிகள் தபால்கள் சேவை
★ விரைவு ★ பாதுகாப்பு ★ நம்பகத்தன்மை
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள், உணவுப் பொருட்கள், உடுபுடவைக்ள் மற்றும் DVD பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்
TCN EXPRESS
28,Nelsan Place,Colombo-06
**திருமுருகன் கொம்நெற்**
259, கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம். T.P:-2227835 (ஒல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46,ஆடியபாதம் வீதி,திருநெல்வேலி, (ந.ப.நோ.சங்கம் முன்பாக)
பிரதான வீதி ,நெல்லியடி (ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்)
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்.

**ரூபா பன்முக வர்த்தகம்**
104A , ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# உணர்ச்சிகளைக் கையாளுதல்

கவலை அரைவேக்காட்டுத்தனம்- அது பச்சையாகவுமில்லை முழுவதும் வெந்ததாகவும் இல்லை. அது நெருப்பும், புகையும்போன்றது. அவை ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. ஆனால், தீ முழுமையாக நன்றாக எரிந்தால் அங்கு புகையில்லை. நெருப்பு நன்றாக எரியாதபோது புகை வர ஆரம்பிக்கிறது. கவலை அந்தப் புகை போன்றது. அதில் உணர்வுகள் முழு வீச்சிலும் இல்லை, இல்லாமலுமில்லை.


கவலை அன்புக்கு விரோதி. ஒரே நேரத்தில் நீ அன்புடனும் கவலையுடனும் இருக்கமுடியாது. எல்லா நேரங்களிலுமே, உன்னிடம் எந்தவித உணர்வுகளிருந்தாலும் அதைப் பகிரந்துகொள். அதைப்பற்றிக் கவலைப்படாமல் அதனுடன் முழுமையாக ஒன்றியிரு. கவலை என்பது ஏதோ ஒன்றின்மேல் அதீத அக்கறை கொள்வது, நீ எதையோ பிடித்துக் கொண்டிருக்கிறாய். "ஓ... எனக்கு இது வேண்டும். நான் எப்படி பாதுகாப்பேன். நான் எப்படி?" அங்கு தானே கர்த்தா என்ற எண்ணம் வருகிறது. கவலை கர்த்தாவின் நிழல் போன்றது. பக்தியும், கர்த்தா நிலையும் இருவேறு துருவங்கள். நீ பக்தியுடனிருந்தால், எங்கிருந்து கர்த்தா நிலை வருகிறது. அதனால்தான், குழந்தைகள் ஒருபோதும் கவலைப்படுவதில்லை. அங்கே கர்த்தா நிலையுமில்லை. கவலையுமில்லை. குழந்தைகளிடம் முழுமையான உணர்ச்சிகள் உள்ளன. கோபமோ, வெறுப்போ, மகிழ்ச்சியோ எதுவாயிருந்தாலும், அதை 100% முழுமையாக வெளிப்படுத்துகிறார்கள். அடுத்த நொடியே அவற்றிலிருந்து விடுபடுகிறார்கள். அவர்கள் அதையே பிடித்து வைத்துக்கொண்டு ஊசலாடுவதில்லை.



கவலை உன்னைக் கடந்த காலத்திலேயே தேக்கி வைத்துவிடும். ஏனெனில், கவலை தன்னுள் "நான் செய்பவன்" என்ற நிலையைக் கொண்டுள்ளது. பக்திவழி என்பது "நானே" என்ற நினைவை விட்டுவிடுதல் அந்த நொடியில் எந்தவொரு உணர்வு இருக்கிறதோ, அது எதுவாயிருந்தாலும் சரி, அதனுடன் 100% ஒன்றியிரு. அதைத் தெய்வீகத்துடன் பங்கிட்டுக்கொள்.

நீ சரணடையும் போது, எல்லாவற்றுடனும் சரணடை- நீ செய்பவை அனைத்தையும் அர்ப்பணித்துவிடு. சரணடைதல் என்றால், எந்த வேலையும் செய்யாமலிருப்பது- செய்து கொண்டிருப்பதை நிறுத்திவிட்டு, வெறுமனே உட்கார்ந்து இருப்பது- தியானம் செய்வது என மக்கள் நினைக்கிறார்கள். இல்லை. நீ எந்த வேலை செய்தாலும் அதில் ஒருமித்து, நிலையான கவனத்தோடு இரு. நீ வியாபாரம் செய்தால், அதை உனக்காகச் செய்யவில்லை. கடவுளுக்காகத்தான் செய்கிறாய் என்பதை நீ தெரிந்துகொள். நீ வாகனம் ஓட்டினால், கடவுளுக்காகத்தான் ஓட்டுகிறாய். நீ செய்யும் எல்லாமே, உன்முழு வாழ்க்கை, உன் குழந்தைகள், உன் பெற்றோர், உன் சகோதரன் எதையெல்லாம், நீ உன் உலகமெனக் கருதுகிறாயோ, அனைத்தும் கடவுளுடையவை, கடவுளுக்காகத்தான் அவற்றுடன் உனக்கு எந்த பந்தமுமில்லை. நான்- சொல்வது புரிகிறதா?

அப்போதுதான், உன் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் விழிப்புணர்வு ஊடுருவிச் செல்லமுடியும். இல்லையெனில், நீ ஆனந்தத்தைச் சில கணங்களே உணரமுடியும். அடுத்த முறை நீ வேறு ஏதாவது செய்ய



## ஆன்மீகம் 12

வேண்டிவரும்போது நீ முழுவதுமாக ஓய்ந்துபோய் விடுவாய். வாழ்க்கை ரோஜாப்பூக்களால் மட்டுமே நிறைக்கப்பெற்ற காட்சிப்படமல்ல. அங்கே முட்களும் உண்டு. உனக்குப் பிடிக்காத விடயங்களும் உன் வாழ்க்கையிலிருக்கும்.

எனினும், இதில் மோசமான நிலை எதுவென்றால், நீ பக்தியைக் கூட உணரமுடியாத அந்நிலைதான். ஒரு துளி பக்தியை- துளி அன்பை அனுபவித்த பக்தன் ஒருவனுக்கு, அதை தனக்குள்ளிருந்து அது திடீரென மறைவதை உணர்வது மிகக்கொடிய வேதனையைத்தரும். அதுதான் ஒருவன் இந்தக் கிரகத்தில், ஏன் எங்கேயானலும் சரி, அனுபவிக்கக்கூடிய கொடிய வேதனை. இதைத்

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**

தான் பைபிள் "ஆன்மாவின் இருண்ட இரவு" என்று சொல்கிறது. ஜீவன் நோய்வாய்ப்படும்போது அது நடுங்குகிறது. அது ஆட்டங்காண்கிறது. அந்நிலையில் அன்பு கூட உணரப்படுவதில்லை. அன்பைக் கூட அனுபவிக்க முடிவதில்லை. அப்போது உன் இதயத்திலிருந்து உன் இதயத்தின் ஆழத்திலிருந்து அழு- அதுதான் ஆத்ம தாகம்- வேட்கை.

(தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள் 12

### சனி மேடு உச்சநிலை


சனிமேடு எவ்வளவு கம்பீரமாயிருக்கிறதோ, அவ்வளவுக்கு விரல் கனத்தும் நீண்டும் அமைந்திருக்கும். பொதுவாகச் சனி ஆதிக்கமுள்ளவர்களுக்கெல்லாம் இரண்டாவது விரல் நீண்டிருக்கும்; என்றாலும், கிரகத்தின் பலன் ஓரளவாய்த்தான் தோன்றும். கிரக அமைப்பு சரியான படி முன் சொல்லியதுபோல், அமைந்துவிடில், மற்றக்கிரங்கள் தாழ்ந்தப்படியிலிருக்கவேண்டியதே, சனிமேட்டில் நிற்கும் இந்த இரண்டாவது விரல் தனிச் சார்பில் நிற்கிறதா அல்லது முதல் (குரு) விரலையாவது, மூன்றாவது (சூரியன்) விரலையாவது நோக்கிச் சாய்ந்திருக்கிறதா என்று கவனியுங்கள். சார்பில்லாமல் தனியேயிருந்தால், சனியின் ஆதிக்கம் இருக்கிறதென்றறியத்தக்கது. எந்தப் பக்கத்தில் விரல் சாய்ந்திருக்கிறதோ, அந்தக் கிரக ஆதரவில் சனி இருப்பதாய் அறியவேண்டும். மனிதருக்குரிய சக்தியை சனீஸ்வரன் வாழ்க்கையில் அடக்கியாளுகின்றான். குரு, சூரியன், செவ்வாய், சுக்கிரன் முதலானவர்களின் துரித சக்தியையும் அவர்களாலுண்டாகும் பலன்களை

**சக்தி**

யும் சனீஸ்வரன் அடக்கிவிடுகிறான். எனவே, சனீஸ்வரன் பிராப்த கர்மத்துக்கு அதிபதியாயிருந்து வருவது விளங்கும். மேலும், வாழ்வில் உண்டாகும் ஏற்றத்தாழ்வுகளில் அவன் சமநிலையைக் கொடுப்பவனாயுமிருக்கிறான்.

சனி ஆதிக்கமுள்ளவர் ஏழுவகை மனிதர்களில் அளவுக்கு மிஞ்சின சக்தியையுடையவராவார். அவர் தெளிந்த ஞானமும் கூர்மையான புத்தியுமுடையவர். ஆனால், தேகாரோக்கியத்தை முற்றிலும் அலட்சியம் செய்பவர். ஆகையால் எப்பொழுதும் அவர் யாதாவதொரு நோய்க்குட்பட்டிருப்பார்.

முன் எச்சரிக்கையும் எடுத்துக் கொள்ளமாட்டார். நோயைப் பற்றிக் கவலைப்படுவதுமில்லை. சௌகரியப்படும்போது, நோய் தாங்க முடியாததாய்ப்போனால் சிகிச்சைகக்கு ஒப்புக் கொள்வர். அடுக்கடுக்காய் வரும் அலைகளைப்போல் பல வகைப்பட்ட யோசனைகளில் மூழ்கியிருப்பர். முடிவில்லாத விவகாரங்கள் அனேகம் பொதுவாகப்பித்தம் அதிகரித்தே இருக்கும். புருவங்கள் கனத்திருக்கும். கண்கள் குழி விழுந்திருக்கும். பார்வை கூர்மையோடிருக்கும். சந்தேகம், மனக்கலக்கம், கோபம் இவைகள் முகத்தில் விகசிதமாய் விளங்கும். காதுகள் விரிந்து தனித்து கனத்துத் தோன்றும். இவ்வாறு சனி ஆதிக்கம் உள்ளவர்களைப் பார்க்கும்போது அவர்கள் சில வேளைகளில் உலகம் நலம் தருவதாயில்லை எனநினைக்கின்றனர். சுக்கிரன், சூரியன் ஆதிக்கம் உள்ளவர்கள். எவ்வளவுதான் வாழ்க்கையில் சந்தோஷமாயும் திருப்தியாயும் முன்தோன்றினாலும் வாழ்வு தங்கட்கு அவ்வாறு இருப்பதாய் அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால், உலகம் துக்கம் நிறைந்ததெனக்கருதி விசனத்தோடே கைகூப்புவர்



# ரேகைகளும் கிரகங்களும்

தேங்கிநிற்கும். சாதாரணமாய் எல்லோரோடும் பழகியிருக்கமாட்டார். எப்பொழுதும் சமத்துவப் பார்வையோடு இருப்பர்.

ஏழு வகை மனிதர்களில் சனி அதிக்கமுள்ளவர், மற்றவர்களைவிட மிக நெட்டையாயிருப்பர். அதற்குத் தக்கவாறு கையும் விரலும் நீளமாய் அமைந்திருக்கும். முகம் ஒத்தை நாடியாகவும் கன்னம் குழிபட்டு ஒட்டியுமிருக்கும். சருமம் உடலோடு ஒட்டி சற்று மஞ்சல்நிறம் கலந்திருக்கும்.

சனி ஆதிக்கமுள்ளவர் உள்ளத்தில் உலகம் பொய் என்ற அதீத ஞானமிருந்து வருவதாலேயே அவரது தேக ஆரோ்க்கியம் தடைப்படுகிறது. அபிவிருத்தியில் அவருக்கு எண்ணமுண்டாவதில்லை. அற்ப சந்தோசத்தைச் சதமென அவர் கருதுவதில்லை.


இவர்கள் பிறக்கும்போதே சந்தேகம் கொண்டவர்கள். மற்றவர்களோடு நெருங்கி உறவாடுவதில்லை. தனித்திருப்பதில் இச்சைகொண்டவர்கள். பூமியைத் திருத்துவதிலும் சுரங்கங்களில் உற்பத்தியாகும் உலோகங்களிலும் சிந்தையைச் செலுத்துபவர்கள். இரசாயணப் பொருட்களை ஆராய்பவர்கள். சூட்சுமமான விடயங்களைப் பற்றி பேசும் சாஸ்திரங்களில் காலங்கழிப்பவர்கள். கணிதத்திலும் மருந்துகளிலும் இச்சைப்படுபவர்கள்.

எப்பொழுதும் அதிக ஜாக்கிரதையுடையவர்களாய் இருப்பவர்கள். எவரையும் சுலபத்தில் நம்பிவிடமாட்டார்கள்.

(தொடரும்)

# மனித உரிமைகளை பாதுகாத்து சரத்தை விடுதலை செய்யுங்கள்

## சரத் என் சில்வா வலியுறுத்து



(கொழும்பு)

**ஜெனீவாவிலுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் மோதல்களை தவிர்த்துக்கொள்ளுமாறும் மோதல்களுக்கு பதிலாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா உட்பட மக்களின் மனித உரிமைகளை பாதுகாக்குமாறும் அவரை உனடியாக விடுதலை செய்யுமாறும் அரசாங்கத்தை ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் சரத் என் சில்வா வலியுறுத்தியுள்ளார்.**

சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்கான இயக்கத்தின் கருத்தரங்கொன்றில் நேற்று முன்தினம் உரையாற்றும்போதே முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

இந்நாட்டில் மனித உரிமைகளோ சட்டங்களோ முறையாக பின்பற்றப்படவில்லை எனவும் அவர் கூறினார். அனைத்து சட்டங்களுக்கும் முரணான முன்னாள் இராணுவத் தளபதியை தடுத்து வைத்திருப்பது சிவில் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசனங்களுக்கு முரணானது எனவும் இவற்றில் இலங்கையும் கையெழுத்திட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

சரத் பொன்சேகாவின் கைதானது முறைப்படி மேற்கொள்ளப்படாததால் அது சட்ட விரோதமானது. சரத் பொன்சேகாவை கைது செய்வதற்கு சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் உத்தரவிட்டதால் அது சட்ட விரோதமானது. இராணுவ சட்டத்தின்படி கனிஷ்ட அதிகாரியொருவரை சிரேஷ்ட அதிகாரியொருவர் கைது செய்யலாம். சிரேஷ்ட அதிகாரி ஒழுங்கீனமாக செயற்பட்டால் கனிஷ்ட அதிகாரியும் அவரை கைது செய்யலாம். ஆனால், சரத் பொன்சேகா விடயத்தில் இது பொருந்தாது. ஏனெனில் கைது செய்யப்படும்போது அவர் இராணுவத்திலிருந்து விலகியிருந்தார் என கூறினார்.

ஜனாதிபதி கையெழுத்திட்ட இராணுவ நீதிமன்ற உத்தரவு சட்டப்படி செல்லுபடியாகாது எனவும் சில்வா தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் ஐ.தே.க.பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச உரையாற்றுகையில், தற்போதைய நிலையில் சர்வதேச சமூகத்தை எதிர்கொள்வதற்கு மிக சிறப்பான நபராக பொன்சேகா விளங்கியிருப்பார் என்றார். இம் முக்கியமான தருணத்தில் அவரை அரசாங்கம் சிறையில் வைத்திருப்பது ஏன்? என கேள்வி எழுப்பினார்.

(அ-2-7)

# நிர்வாகத் தெரிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அரசசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் இடம்பெற்றது.

தலைவராக அ.கனகரத்தினம், செயலாளராக திருமதி என்.யோகராணி, பொருளாளராக மு.சிவஞான சுந்தரமூர்த்தி, உபதலைவராக நீ.குலேந்திரதாசன், உப செயலாளராக சி.பெருமான் ஆகியோரும் கரைச்சி பிரதேசத்தில் நான்கு பிரதிநிதிகளும் கண்டாவளைப் பிரதேசத்தில் இரண்டு பிரதிநிதிகளும் பூநகரி பிரதேசத்தில் இரண்டு பிரதிநிதிகளும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இரண்டு பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(அ-84)

# வாக்காளர் அட்டை பொதிகளை மீண்டும் பெற்றுக்கொள்ள தீர்மானம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளுக்கு வழங்கப்பட்ட தபால் மூல வாக்காளர் அட்டைகள் அடங்கிய பொதிகளை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு தேர்தல்கள் செயலகம் தீர்மானித்துள்ளது.

இந்தப் பிரதேச சபைகளுக்கான வாக்கெடுப்பு நீதிமன்றத்தினால் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எச். ஏ.எல். ரத்னாயக்க தெரிவித்தார்.

தபால் மூல வாக்காளர் அட்டைகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதே வேளை குறித்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களில் வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள தற்காலிக அடையாள அட்டைகளை மீண்டும் பெற்றுக் கொள்ளவுள்ளதாகவும் வன்னி மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எஸ்.சுதாகரன் தெரிவித்தார்.

கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக இந்த அடையாள அட்டைகள் மீண்டும் சேகரிக்கப்படவுள்ளது.

எவ்வாறாயினும் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேசசபைகளின் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை மீண்டும் பெற்றுக் கொள்வதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

(அ-2-7)

# போரில் கணவனை இழந்த பெண்கள் வாழ்வாதாரத்துக்காக பாலியல் தொழிலில்

## பெண்கள் உரிமை அமைப்புக்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் உள்நாட்டு போரில் கணவனை பறிகொடுத்த பெண்கள் வாழ்வாதாரம் எதுவும் இல்லாத நிலையில் பாலியல் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள் என்று பெண்கள் உரிமைகள் அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

Fisher folk Solidarity Movement என்கிற பெண்கள் அமைப்பை சேர்ந்த கீதா லக்மினி என்பவர் தெரிவிக்கையில், போரில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 85 ஆயிரம் பெண்கள் விதவைகளாகி உள்ளார்கள். மன்னாரில் மடு பிரதேசத்தில் உள்ள கிராமம் ஒன்று பாலியல் தொழிலுக்கு பிரசித்தி பெற்று விளங்குகிறது.

இதன் காரணம் இக்கிராமத்தை சேர்ந்த குடும்பங்களில் ஆண்கள் யாரும் இல்லை, வேலை இல்லை, பிழைக்கின்றமைக்கு வேறு மார்க்கம் இல்லை. குழந்தைகளை வளர்க்கின்றமைக்காக பெண்கள் உடலைவிற்று பாலியல் தொழில் செய்கின்றார்கள்.

இது மாத்திரமே அவர்களின் பிழைப்புக்கான ஒரு வழியாக இருந்து வருகின்றது. மேலும் அரசால் அறிவிக்கப்பட்ட போர் நட்டஈடு அநேக பெண்களுக்கு கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

(அ-2-7)

# விசா முடிந்த பின்னரும் இலங்கையில் தங்கிய ஆயிரத்து 500 பேர் கைது

(கொழும்பு)

இலங்கையில் விசா காலம் முடிந்த பின்னரும் தங்கி இருந்தனர் என்கிற குற்றச்சாட்டில் வெளிநாட்டவர்கள் ஆயிரத்து 500 பேர் இவ்வருடத்தின் முதல் இரு மாதங்களில் மாத்திரம் கைது செய்யப்பட்டு இருக்கின்றார்கள் என குடிவரவு குடியகல்வு திணைக்கள ஆணையாளர் டபிள்யூ. ஏ.சி.பெரேரா வெளியிட்டுள்ளார்.

மார்ச் மாதத்தில் கைது செய்யப்பட்டவர்களையும் சேர்த்துப் பார்க்கின்றபோது இவ்வெண்ணிக்கை ஆயிரத்து 700 ஐயும் தாண்டி விடும் எனவும் கடந்த வருடம் இலங்கைக்கு வந்த வெளிநாட்டவர்கள் 3 ஆயிரம் பேர் வரையானோர் விசா முடிந்த பின்னரும் இலங்கையில் தொடர்ந்து தங்கி இருக்கின்றார்கள் என்று சுட்டிக்காட்டினார்.

விசா முடிந்த பின்னரும் இலங்கையில் தங்கி இருக்கின்ற வெளிநாட்டவர்களை அடையாளம் கண்டு நாட்டை விட்டு வெளியேற்றுகின்றமைக்கு பொதுமக்கள் உதவி வழங்க வேண்டும் என்று குடிவரவு குடியகல்வு திணைக்களம் கோரி இருந்தது.

நாட்டில் சட்டவிரோதமாக தங்கி இருக்கின்ற வெளிநாட்டவர்களை கண்டுபிடித்து வெளியேற்றுகின்ற நடவடிக்கை தொடர்ச்சியாக இடம்பெறுமென்று திணைக்களம் அறிவித்துள்ளது.

(அ-2-7)


# பிறந்த நாள் வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்



## திருமதி விஜயகுணராணி பஞ்சலிங்கம்

வகுதித்தலைவர்-கிளி/கிளிநொச்சி
மத்திய ஆரம்ப வித்தியாலயம்

2012.03.21 ஆம் திகதி தனது
58 ஆவது பிறந்த நாளை
கொண்டாடுவதுடன் தனது ஆசிரிய
சேவையில் இருந்தும் ஓய்வு
பெறும் ஆசிரியரை நீடூழி
காலம் வாழ்கவென
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
கிளி/கிளிநொச்சி மத்திய
ஆரம்ப வித்தியாலயம்.

(சி-6116)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 76


கூர்ஸ்க் அருகே கிடைத்த வெற்றியின் சர்வதேச முக்கியத்துவம் மகத்தானது. பாசிச ஜேர்மனியின் வீழ்ச்சி தவிர்க்க இயலாதது. இது வெகுதொலைவில் இல்லை. என்பதையும் சோவியத் யூனியன் தன் சொந்த சக்தியளாலேயே பாசிசத்தை முறியடிக்கும் என்பதையும் இவ் வெற்றி உலகம் முழுவதற்கும் காட்டியது.

கூர்ஸ்க் அரைவட்டத்தில் பாசிச ஜேர்மனியத் துருப்புகளின் தோல்வி ஹிட்லர் கூட்டின் உள்ளிருந்த முரண்பாடுகளை கடுமையாகக் கூர்மையடையச் செய்தது. ஜேர்மனியின் துணை நாடுகளில் சிக்கல்களைத் தோற்றுவித்தது. இத்தாலியிலிருந்த முசோலினி ஆட்சிக்கு இது மரண அடியாக அமைந்தது. யுத்தத்தின் போக்கில் சோவியத்யூனியனுக்கு ஆதரவாக அடிப்படை மாற்றம் ஏற்பட்டது.


"ஸ்டாலின் கிராட் அருகே நடந்த சமர் பாசிச ஜேர்மனிய இராணுவத்தின் மறைவை முன்னறிவித்தது என்றால், கூர்ஸ்க் அருகே நடந்த சமர் இதை பேரழிவின் முன் வைத்தது."

கூர்ஸ்க் அரைவட்டத்தில் சோவியத் துருப்புகள் அடைந்த வெற்றி இரண்டாம் உலக யுத்தத்தின் போக்கின் மீது பெரும் தாக்கத்தைச் செலுத்தியது. 1943 யூலை ஆரம்பத்தில் இத்தாலியில் பிரிட்டிஷ்-அமெரிக்கத்துருப்புகளை இறக்குவதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன. சோவியத்-ஜேர்மனியப் போர்முனை எதிரியின் எல்லா சேமப் படைகளையும் உட்கொண்டதால், ஸ்வீடனுள் ஹிட்லர் துருப்புகள் நுழைவதைப்பற்றி முன்னர் தீட்டியிருந்த திட்டம் கைவிடப்பட்டது. "சோவியத்யூனியனின் இராணுவ வெற்றிகளின் பயனாகத்தான் சுவீடன் இன்னமும் யுத்தத்திற்கு வெளியே இருக்க முடிகிறது என்பது அதற்கு நன்கு புரிகிறது. இதற்காக சுவீடன் சோவியத் யூனியனுக்கு நன்றி சொல்கிறது. இதுபற்றி நேரடியாகத் தெரிவிக்கிறது" என்று 1943ஆம் ஆண்டு ஜூன் 14 ஆம்திகதி மாஸ்கோவிலிருந்த சுவீடிஸ் தூதுவர் அறிவித்தார்.

கூர்ஸ்க் அருகே ஹிட்லர் துருப்புக்கள் அடைந்த தோல்வி




ஜேர்மனிக்கும் நடுநிலை நாடுகளுக்கும் இடையே இருந்த உறவுகள் மேலும் மோசமடைவதை முன்




நிர்ணயித்தது. இவை மூன்றாம் ரைஹிற்கு மூலப்பொருட்களையும் மற்றைய பொருட்களையும் ஏற்றுமதி செய்வதை நிறுத்தின.

கூர்ஸ்க் அரைவட்டத்தில் சோவியத் இராணுவம் அடைந்த வெற்றி அடிமைப்படுத்தப்பட்ட ஐரோப்பிய மக்கள் தமது சுதந்திரத்திற்காகவும் விடுதலைக்காகவும் நடத்திய போராட்டத்தை பலப்படுத்தியது.

யத்யூனியன் தனது வீரஞ்செறிந்த வெற்றிகளைக் கண்டு நியாயமாகப் பெருமை கொள்ளலாம்."

பிரிட்டிஷ் பிரதமர் வி.சர்ச்சில் ஆகஸ்டு 12 ஆம்திகதி சோவியத் பிரதமருக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் "இப்போர்முனையில் ஜேர்மனிய இராணுவத்தின் தோல்விகள் தமது இறுதி வெற்றியை நோக்கிய பாதையில் மைல்கற்களாகும்." என்று குறிப்பிட்டார். பிரிட்டிஷ் கட்டுரையாளர் *அலெக்சாந்தர் வேர்ட்* இன்னமும் சரியாகக் கூறினார்: "கூர்ஸ்க் சமரை வென்றதன் மூலம் நடைமுறையில் சோவியத் யூனியன் யுத்தத்தை வென்றது."


பூர்ஸ்வா வரலாற்றாசிரியர்கள் சமரின் வரலாற்றை அடிக்கடி திரித்துக் கூறினர். உதாரணமாக கூர்ஸ்க் அரைவட்டத்தில் பாசிச ஜேர்மனியத் துருப்புகளின் தாக்குதல் குறுகிய இலட்சியங்களைத்தான் நோக்கமாகக் கொண்டிருந்தது. த்ஸித்தாதேல் நடவடிக்கையின் தோல்வியை போர்த்தந்திர முக்கியத்துவம் வாய்ந்த



பதுங்கு குழிக்குள் இருக்கும் சோவியத்வீரர்களுக்கு மேலாக கடந்து செல்லும் ஜேர்மன் டைகர்டாங்கி

வைக்கவில்லை என்ற ஜேர்மனியர்களின் கூற்றுக்களை வரலாறு பெரிதும் சந்தேகிக்கிறது. எல்லாமே கூர்ஸ்க் அருகே தீர்மானிக்கப்பட்டது. அங்கே நடந்தது சம்பவங்களின் எதிர்காலப்போக்கை நிர்ணயித்தது" என்று அவர் எழுதினார். இதே சிந்தனைதான் நூலைப்பற்றிய குறிப்புரையிலும் பிரதிபலிக்கிறது. இதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது: கூர்ஸ்க் அருகே நடந்த சமர், "1943 ஆம் ஆண்டு ஜேர்மனிய இராணுவத்தின் முதுகெலும்பை உடைத்தது. இரண்டாம் உலக யுத்தத்தின் போக்கு முழுவதையுமே மாற்றியது... இந்த அதிர்ச்சியூட்டும் மோதலின் பயங்கரம் முழுவதையும்

சோவியத்தின் டைவ் பொம்மர்- ஜேர்மனியின் டைகர் டாங்கிகளை அழிக்கும் தாக்குதல் நடவடிக்கையில்




# யுத்தத்தின் போக்கில் ஏற்பட்ட திருப்புமுனை

ஜேர்மனி உட்பட எல்லா நாடுகளிலும் எதிர்ப்பு இயக்க நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியது.

கூர்ஸ்க் அருகே பாசிச ஜேர்மனியத்துருப்புகள் முறியடிக்கப்பட்டதானது அமெரிக்க, பிரிட்டிஷ் ஆளும் வட்டாரங்களின் நிலைகள் மீது பிரதிபலித்தது. உதாரணமாக கூர்ஸ்க் சமர் மும்முரமாக நடந்து கொண்டிருந்த தருணத்தில் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சோவியத் பிரதமருக்கு அனுப்பிய விஷேட செய்தியில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். "ஒரு மாதமாக நடைபெறும் பிரமாண்டமான சமர்களில் உங்கள் இராணுவ வீரர்கள் தமது திறமையாலும் வீரத்தாலும் தியாகத்தாலும் உறுதியாலும் நீண்ட காலமாகத் திட்டமிடப்பட்ட ஜேர்மனியத் தாக்குதலைத் தடுத்து நிறுத்தியதோடு கூட, ஆழ்ந்த விளைவுகளை ஏற்படுத்த வல்ல எதிர்த்தாக்குதலையும் வெற்றிகரமாகத் தொடுத்துள்ளனர்... சோவி

சிதைந்து அழிந்த நிலையில் ஜேர்மனின் டைகர் டாங்கிகள்



நிகழ்ச்சியாகக் கருதக்கூடாது என்ற ஆய்வு ஆதாரமற்றது. இதைப்பற்றி மேற்கத்திய நாடுகளின் புறவய ரீதியான வரலாற்றாசிரியர் என்ன கூறுகிறார் என்று பார்ப்போம். "*கப்டன் டைகர்கள் எரிகின்றன*" என்ற தனது நூலில் கூர்ஸ்க் சமரை, "வரலாற்றில் இதுவரை நடைபெற்றதிலேயே மிகப்பெரும் தரைப்படைப் போர்" என்று சித்தரித்தார். "தாங்கள் ஏதோ எதிர்காலத்தில் நம்பிக்கை

ருஷ்யாவிற்கு வெளியே ஒரு சிலர் மட்டுமே புரிந்து கொண்டனர். கூர்ஸ்க் அருகே அடைந்த ருஷ்ய பெரு வெற்றியின் முக்கியத்துவத்தை மேலைய நாடுகளின் வரலாற்றாசிரியர்கள் எப்படிக் குறைத்து மதிப்பிடுகின்றனர் என்பதை சோவியத் நாட்டினர் பார்ப்பதால் இன்றுகூட நடைமுறையில் இவர்கள் துயரமடைகின்றனர்."


(தொடரும்)

# 12 இராசிக்காரர்களுக்கு சூரிய தோஷ பரிகாரங்கள்!

**சூரியன் துலாமில் இருந்தால்....**

ஆண் ஆனாலும் பெண் ஆனாலும் வாழ்க்கைத்துணை கௌரவமான குடும்பத்தில் இருந்து வந்துவிடும். சிலர் அளவுக்கு மீறிய நிலையில் வருமானத்தை விட தான தர்மத்தில் வீண் விரயம் செய்யும் சூழ்நிலை ஏற்படும்.

சமசதுர வெள்ளி உலோகத்தை வாசலில் புதைத்து வைக்க வேண்டும். கறுப்பு நிற பசுவுக்கு புல் கொடுக்கலாம். கொம்பில்லா பசுவுக்கு கொடுப்பது அதிக பலனை உருவாக்கும். முக்கிய செயல்களில் ஈடுபடும் முன்பாக சிறிது வெல்லம் அல்லது இனிப்பு, தண்ணீர் பருக வேண்டும்.




**சூரியன் விருச்சிகத்தில் இருந்தால்...**

பாடுபட்டு அதிக வருமானத்தை பெருக்கிக் கொள்ளலாம். ஆண்களுக்கு அதிகமான பெண் நண்பர்கள் கிடைக்கப்பெறுவார்கள். இவர்கள் நேர்மையாக நடந்து கொண்டால் எந்த எதிரிகளாலும் வீழ்த்த முடியாது. சிலர் அந்திமக் காலத்தில் கஷ்டத்தை அனுபவிக்க நேரலாம். உயிருக்கு போராடும் நபர்கள் முன் இவர்கள் வீற்றிருந்தால் அந்த உயிர் சுலபத்தில் வெளியேறாது. எனவே, இவர்கள் அப்படிப்பட்ட சூழ் நிலைகளில் அங்கிருந்து வெளியேறிவிட வேண்டும்.

கறுப்பு கலந்த பிறவுண் நிற பசுவுக்கோ, சுத்தமான வெள்ளை நிறப் பசுவுக்கோ, உணவளிக்கலாம். நீண்ட நாட்கள் கஷ்டங்கள் தொடர்ந்து காணப்பட்டால் 400 கிராம் கோதுமை மா, 400 கிராம் சர்க்கரையுடன் கலந்து ஓடும் நீரில் போட வேண்டும்.

**சூரியன் தனுசில் இருந்தால்...**

மிகப்பெரிய குடும்பத்தில் அண்ணன், தம்பி, அக்கா, தங்கையரோடு பிறக்கும் யோகம் கிடைக்கப் பெறும். அரசு சார்ந்த வேலைகள், காண்டிராக்ட் மற்றும் பதவிகளும் கிடைக்கப் பெறும். சிலர் இளமைப் பருவத்தில் உடல் சார்ந்த பின்னடைவுகளை அனுபவிக்க வேண்டி நேரும். சிலரிடம் பின்னாட்களில் மதம் மாறும் மனப்போக்கு காணப்படும்.

இவர்கள் அரிசி, பால், நெய் போன்றவற்றை தானம் செய்வது நன்மை தரும். அவற்றை தானமாகப் பெறுவது கெடுதலானது. அப்பிள் போன்ற சிவப்புநிற பொருட்களை இலவசமாக பிறருக்குதரலாம்.

**சூரியன் மகரத்தில் இருந்தால்...**

மன்னருக்குரிய மரியாதையுடன் வாழும் சிறப்பு கிடைக்கப் பெறும் தாயாருக்கு இந்த ஜாதகரால் பல பின்னடைவுகள் தெரிய வரும். நல்ல புத்திசாலித்தனத்தால் அரசு நன்மைகள் கிடைக்கப்பெறும். வாழ்க்கைத்துணையால் சில வேதனைகளை அனுபவிக்கும் சூழ்நிலை ஏற்படும். இவர்கள் கறுப்பு மற்றும் நீலநிற துணிகளை தவிர்த்தல் வேண்டும். ஐந்து செம்பு வளையங்களை ஓடும் நீரில் போட வேண்டும். சாம்பல் வண்ண எருமைக்கு புல் வழங்க வேண்டும். சிலருக்கு 34 வயதுக்கு மேல்தான் புத்திர பாக்கியம் ஏற்படும். திருமண நாட்களில் குருவுக்கு மஞ்சள் நிறப் பூக்களால் அர்ச்சனை செய்ய வேண்டும்.

**சூரியன் கும்பத்தில் இருந்தால்....**

நல்ல விதமாக குடும்பத்தை அமைத்துக் கொள்வதோடு சிலருக்கு தரமான மூன்று ஆண்பிள்ளைகள் கிடைக்கப் பெறும். வீடு, வாகனம் என சிறப்பான வாழ்க்கை அமையும். புலால் மறுப்பது இன்னும் அதிர்ஷ்டத்தை மேம்படுத்தச் செய்யும். 42 இலிருந்து 48 வயதுக்குள் புகழ் அடையும் சூழல் உண்டாகும். அது அவர்கள் சார்ந்துள்ள துறையை மேம்படுத்தும். ஞாயிறன்று நல்லவை நடைபெறும்.




கஷ்டங்கள் வரும் போது ஐந்து சிவப்பு முள்ளங்கியைத் தூங்கும் போது தலையணை பக்கத்தில் வைத்து கொண்டு அடுத்த நாள் அவற்றை மாடுகளுக்கு தரலாம். அல்லது நீர்நிலையிலும் போட்டு விடலாம். வசதி படைத்தோர். பலி ஆட்டை விலை கொடுத்து வாங்கி திறந்த வெளியில் விட்டுவிடலாம். மீன் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். அதிலும் குளம் குட்டையிலுள்ள மீன்களை வாஸ்து ரீதியாக உண்ணுதல் கூடாது.

**சூரியன் மீனத்தில் இருந்தால்...**

எந்த சந்தர்ப்பத்திலும் நிம்மதியாக குறட்டை விட்டுத் தூங்கும் யோகம் உள்ளவர்கள். வியாபாரமோ வேலை வாய்ப்போ எப்படியும் உயர்வான வாழ்க்கை பின்னாட்களில் அமைந்து விடும். இவர்கள் மீது அநியாயமாக வீண் பழி, திருட்டுக் குற்றம் சுமத்தப்படலாம். எச்சரிக்கையுடன் வாழ வேண்டும். இவர்களுடைய மாமன்மார்கள் கவலையடையலாம். மாற்றான் மனைவி மீது விருப்பம் ஏற்படலாம். சிலர் வாழ்வில் சில முட்டுக்கட்டைகள் பிற கிரக நாதர்களால் ஏற்படலாம்.

ஆஞ்சநேயரை வணங்குதல் வேண்டும். மாமன், மைத்துனன் போன்ற உறவினருடன் கூட்டு வியாபாரம் வேண்டாம். நஷ்டம் தான் ஏற்படும். பொய்சாட்சி கூறுதல் கூடாது. நாணயம் தவறாதிருப்பது நன்மைக்கு வழிவகுக்கும். வாஸ்து முறையில் கிழக்கு வாசலும், வடகிழக்கு மூலையில் எலுமிச்சை செடியும் இருப்பது துன்பத்தை அகற்றிவிடும். (முற்றும்)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பூக்களும் அவற்றின் மருத்துவ குணங்களும்

**சரக்கொன்றைப் பூ / கொண்டல் பூ**

தாவரவியற்பெயர்-**Cassia fistula**

குடும்பம்- **Leguminosea**

ஒருகைப்பிடியளவு இப்பூக்களை எடுத்து கீழ்க்காய் நெல்லி சாற்றுடன் மைபோல அரைத்து பாக்களவு உருட்டி காலையில் 3 வாரம் சாப்பிட இரத்தக் குறைவு தீரும். கொன்றைப்பூ தனித் தேனும், இதன் கொழுந்துடன் தேனித் தேனும் அரைத்து பாலிற் கலக்கி கொடுக்க வெள்ளை, காமாலை குணமாகும்.

கொண்டல் பூவை தேசிப்புளிச் சாறு சேர்த்து அரைத்து உடம்பில் தோய்துக் குளிக்க தேமல், சொறி, கரப்பான் தீரும்.

இதன் பூக்களை பாலுடன் கலந்து காய்ச்சி உட்கொள்ள உள்ளுறுப்புக்களை வன்மைப்படுத்தும். மெலிந்தோருக்கு மிகப் பலன்தரும்

**இலுப்பைப்பூ**

தாரவியற்பெயர்- **Madhuca longifolia**

குடும்பம்- **Sapotaceae**

சீனிப்பாகில் பூக்களை சேர்த்து உருண்டை செய்து சாப்பிட உடல் வலிமை அடையும். ஒரு கைப்பிடி இலுப்பை பூக்களை ஒரு லீற்றர் நீர் விட்டு அரைவாசி சுண்டும் வரை கொதிக்க வைத்து இறக்கி வடிகட்டி 2 ஆகப் பிரித்து காலை, மாலை அருந்தி வர இருமல் நீங்கும்.




காய்ந்த பூக்களை வதக்கி வீக்கங்களிற்கு வைத்துக் கட்ட வீக்கம் குறையும்.

**பவளமல்லிகைப்பூ**

தாவ்ரவியற்பெயர்- **Nyctanthusarbortriss**

குடும்பம்- **Oleaceae**

இரவு நேரத்தில் இப்பூக்களை கண்ணில் வைத்து கட்டி வந்தால் கண்ணுக்கு குளிர்ச்சி தரும்.





ஒரு பங்கு பவளமல்லிகை பூவுக்கு 4 பங்கு நீர் சேர்த்து 1/4 பங்காக குடிநீராக்கி 30-60 மில்லி தினம் இரு வேளை அருந்த மூலரோகம் குணமாகும்.

**மகிழம்பூ**

தாவரவியற்பெயர்-**Mimusop Elengi**

குடும்பம்- **Sapataceae**

இப்பூக்களை காய வைத்து இடித்து துணியில் மிக மெல்லிய அளவு கலந்து வைத்துக்கொண்டு மூக்குப்பொடி போல் உபயோகித்து வர பீனிசம் நீங்கும்.

பூவை குடிநீரிட்டு குடிக்க உடல் அனல் தணியும். உடல் வன்மை பெறும்.

**தூதுவளைப்பூ**

தாவரவியற்பெயர்-**Solanum trilobatum**

குடும்பம்- **Solanaceae**

இப்பூக்களை பசுப்பாலில் போட்டுக் காய்ச்சி அருந்தி வர இருமல் தணியும்.

சீனிப்பாகில் இப்பூக்களை போட்டுக் கிளறி பாக்களவு உண்டுவர ஆண்மை பெருகும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

**தேள்கொடுக்குப்பூ**

தாவரவியற்பெயர்- **Helitropium indicum**

குடும்பம்-**Boraginaceae**

தேள்கொடுக்கு பூக்களை சிறிதளவு பசுப்பாலில் சேர்த்து அரைத்து புண்ணுக்கு பற்றுப்போட புண் குணமாகும்.


ஒரு பங்கு பூவிற்கு 4 பங்கு நீர் விட்டு காய்ச்சி குடிநீராக்கி வாய்கொப்பளித்து வர தொண்டைப்புண், தொண்டையில் காணும் வலி நீங்கும். (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

46

## சோம்பேறிக்கு எங்கும் மதிப்பில்லை!



சிவராமன் மகாசோம்பறி. படிப்பறிவில்லாதவன். முன்னேற வேண்டும் என்ற ஆர்வமிருந்தாலும் சோம்பேறித்தனத்தால் எதையும் செய்யாமல் காலம் கழித்தான். கிராமத்தார் அனைவரும் தன்னை ஏளனமாகப் பேசுவதால் ஒருநாள் வெறுத்துப் போய் அக்கிராமத்தை விட்டே வெளியேறினான். நமக்கு யாருமே உதவி செய்ய மறுக்கிறார்களே எப்படியாவது பெரும் பணக்காரனாகி அவர்கள் முகத்தில் கரியைப் பூசவேண்டும் என எண்ணிக் கொண்டு பயணித்தான்.


வெகுதூரம் பயணித்த சிவராமன் காட்டு வழியே செல்கையில் ஒரு முரடன் பெரிய மூட்டை மற்றும் அவர்களுடன் தூங்குவதை கண்டான். மெதுவாக அவனிடம் சென்று மூட்டையைப் பிரித்துப் பார்த்து அதில் தங்க நாணயங்கள் இருப்பதைப் பார்த்து அசந்து போனான். படிப்பறிவில்லாததால் தன்னால் அதிகம் சம்பாதிக்க முடியாது என்பதால் அந்த நகைகளை எடுத்துச் சென்று வியாபாரம் செய்யலாமா என யோசித்தான்.

முரடனைப் பார்த்தால் நல்லவனைப் போல் தெரியவில்லை என்பதால் தனது எண்ணத்தை உறுதி செய்து கொண்டு மூட்டையை இழுத்தான். அப்போது திடீரென கண்விழித்துக் கொண்ட அந்த முரடன் சிவராமனை நோக்கி பாய்ந்தான். பயம் காரணமாக கீழே கிடந்த வாளைச் சிவராமன் சுழற்ற அது அந்த முரடனின் கழுத்தில் பாய்ந்தது அவன் இறந்தான்.

உடனே மூட்டையை எடுத்துக் கொண்டு அருகிலிருந்த கிராமத்துக்குச் சென்றான். சிவராமன் அவனது சட்டையில் இரத்தக் கறை படிந்திருப்பதை ஊர் பெரியவர்கள் கண்டு சந்தேகித்தனர். இதைப் பார்த்து சுதாரித்துக் கொண்ட சிவராமன் "நான் ஒரு வியாபாரி. என் கையிலிருக்கும் நாணயங்களை ஒருவன் கொள்ளையடிக்க முயன்றான். அவனை நான் கொன்று விட்டேன். அவனிடமிருந்த இந்தப் பையை எடுத்து காவல் நிலையத்தில் ஒப்படைத்து விடலாம் எனப் புறப்பட்டேன்" என ஒருவாறாக சமாளித்தான்.

உடனே அந்த முரடனின் உடலைச் சென்று பார்த்த மக்கள் அவன் வெகுநாட்களாக ஊர் மக்களை மிரட்டி கொள்ளையடித்து வந்த திருடன் என்றும் நேற்றிரவு சில வீடுகளில் கொள்ளையடித்துச் சென்றதாகவும் கூறினர். நகைகளைப் பறிகொடுத்த சிலர் மட்டும் சிவராமன் கையிலிருந்த மூட்டையிலிருந்து தங்கள் நகைகளை மட்டும் தேடி எடுத்துக் கொண்டனர்.

உடனே அந்த ஊர் மக்களின் கதாநாயகனாக உயர்ந்தான் சிவராமன். "நீங்கள் பெரிய சேவை செய்துள்ளீர்கள். நீங்கள்தான் இனி எங்கள் காவல் தெய்வம்" எனப் புகழ்ந்த ஊர் மக்கள் பையில் மீதமிருந்த அடையாளம் தெரியாத நகைகளை அவனிடமே திருப்பிக் கொடுத்தனர். இனி வேறு எங்கும் செல்லக்கூடாது என்றும் அன்புக் கட்டளையிட்டனர். அன்று முதல் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் அறுசுவை உணவு சிவராமனுக்கு அளிக்கப்பட்டது. ஊர் மக்களின் அன்பைப் பார்த்து கண்கலங்கிய சிவராமன் யாருக்கும் பயனின்றி சோம்பேறியாக இருப்பதால் இகழப்படுவதையும் மற்றவர்களுக்கு பயன்படும் செயல்களைச் செய்




தால் மதிப்பளிக்கப்படுவதையும் உணர்ந்தான்.

தன்னிடம் இருந்த நகைகளை வைத்து கறவை மாடுகளை வாங்கிய சிவ்ராமன் அன்றுமுதல் சோம்பேறித்தனத்தை கைவிட்டு தினமும் பால் கறந்து குறைந்த விலைக்கு கிராமத்தினருக்கு விற்று நல்ல நிலையை அடைந்தான். இதனால் அவன் மதிப்பு மேலும் கூடியது.

## அம்புலி மாமா கதைகள்

## இலட்சுமணனின் யோகம்



ஒரு கிராமத்தில் இலட்சுமணன் என்ற விவசாயி தன் மனைவியுடனும் மகளுடனும் வசித்து வந்தான். பூர்வீகச் சொத்தான ஐந்து ஏக்கர் நிலத்தில் அவன் பாடுபட்டு விவசாயம் செய்து வந்தான். கிராமத்தின் எல்லையிலிருந்த மலைகளிலிருந்து ஒரு வாய்க்கால் இலட்சுமணனுடைய நிலத்தருகே பாய்ந்து கொண்டிருந்தது. அவன் மட்டுமின்றி அந்த கிராமத்திலிருந்த அத்தனை விவசாயிகளும் அந்த வாய்க்காலேயே நீர்ப்பாசனத்துக்கு நம்பியிருந்தனர்.

ஆனால் நான்கு ஆண்டுகளாக மழை சரிவரப் பெய்யாததால் வாய்க்கால் நீரோட்டமின்றி வற்றிப் போயிற்று. கிராமத்திலிருந்து பலர் பிழைப்பைத் தேடி அந்த கிராமத்தை விட்டு அயலூர் சென்று விட்டனர்.

ஆனால் இலட்சுமணனுக்கு அயலூர் சென்று கூலி வேலை செய்வதில் நாட்டமில்லை. அருகிலிருந்த நகரத்திற்கு ஏதோ வேலையாக சென்ற இலட்சுமணன் ஒரு நாளிரவு நகரத்துச் சத்திரத்தில் தங்கினான். அப்போது அங்கு தங்கியிருந்த சிலர் "தண்டகாரண்ய காட்டில் வைரங்களும் இரத்தினங்களும் கிடைக்கின்றனவாம்! ஆனால் அவற்றை தேடிச் செல்லும் எல்லோருக்கும் பாக்கியம் கிட்டுவதில்லை. என்னுடைய மூன்று உறவினர்கள் வைரக்கற்களைத் தேடி தண்டகாரண்யம் சென்றனர். ஒருவனுக்கு மட்டும் வைரமும் இரத்தினமும் கிடைத்தன. ஏனைய இருவரும் தேடி அலைந்து நோய் வாய்ப்பட்டது தான் மிச்சம்" என்றான் ஒருவன்.

அதற்கு மற்றொருவன் "ஒருவனுக்கு யோகம் உள்ளதா இல்லையா என்று அறியவேண்டுமானால் அவன் தண்டகாரண்யம் சென்று முயற்சி செய்ய வேண்டும்!" என்று விமர்சனம் செய்தான். மற்றவர்கள் அதை ஆமோதித்தனர்.

அவர்கள் சொல்வதைக் கேட்டவுடன்தான் இலட்சுமணனுக்கு தானும் ஏன் தாண்டகாரண்யம் சென்று இரத்தினம் எடுத்து வர முயற்சி செய்யக் கூடாது என்ற யோசனை பிறந்தது. வீட்டை அடைவதற்குள் அவனுடைய அந்த யோசனை தீர்மானமாக மாறியது. அவன் தன் மனைவியிடம் தான் சத்திரத்தில் கேட்டறிந்த தகவலைக் கூறிவிட்டு "நான் தண்டகாரண்யம் செல்வதாக முடிவு செய்து விட்டேன். நீ உன் அண்ணா வீட்டிற்குப் போய் விடு" என்றான்.

தன் கணவனின் பிடிவாத குணத்தையறிந்த அவன் மனைவி உடனே தன் அண்ணனை வரவழைத்தாள். அவனும் இலட்சுமணனிடம் "தண்டகாரண்யம் செல்லும் முடிவை மாற்றிக் கொள். நூற்றில் ஒருவருக்குத்தான் வைரமும் இரத்தினமும் கிடைக்கும். அதனால் உன் முடிவை மாற்றிக் கொள்" என்று கூறினான்.

ஆனால் அதையெல்லாம் கேட்காமல் இலட்சுமணன் தண்டகாரண்யத்திற்குச் சென்று ஆறு மாதங்களாக தன் அதிர்ஷ்டத்தை தேடி அலைந்தான். வைரம் ஒன்றும் கிடைக்கவில்லை. இறுதியில் நோய் வாய்ப்பட்டு வீடு திரும்பி வந்தான்.

அந்த ஆண்டு பலமாக மழை பெய்து வாய்க்காலில் வெள்ளம் கரைபுரண்டு ஓடி இலட்சுமணனின் வயலை மூழ்கடித்துவிட்டது. தவிர மலைகளிலிருந்து வெள்ளத்தில் அடித்து வந்த ஏராளமான கற்கள் அவன் வயலில் தங்கிவிட்டன. இலட்சுமணன் தேங்கியிருந்த நீரை வெளியேற்றி வயலில் நிரம்பியிருந்த கற்களை அப்புறப் படுத்தினான். அவ்வாறு செய்யும் போது அந்தக் கற்களில் இரண்டு பளபளவென்று மின்னுவதைக் கவனித்தான். உடனே எடுத்துப் போய் தன் மைத்துனனிடம் காட்டினான். அதைப் பார்த்த அவன் "இலட்சுமணா! இவை அசல் வைரக் கற்கள் பார்த்தாயா உன் அதிர்ஷ்டம் உன் வயலிலேயே இருந்திருக்கிறது" என்றான்.



# இந்தியா துண்டுதுண்டாகப் பிரியும்; அமெரிக்கா முயற்சியை கைவிடாது!

## ஆருடம் கூறுகிறார் குணதாச

ஜெனீவாவில் அமெரிக்கா வெற்றி பெறும் என்றால் இந்தியா அமெரிக்காவிற்கு எதிராக வாக்களிக்கும். தோல்வி அடையுமென்றால் ஆதரவாக வாக்களிக்கும். இதுவே இந்தியாவின் சித்தாந்தம் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

இந்தியா என்றுமே இலங்கைக்கு எதிராகவே செயற்படும். தமது நலனுக்கே முன்னுரிமை வழங்கும். எனவே, மேற்கண்ட சித்தாந்தத்தையே கடைப்பிடித்து வருகின்றது.

அதேவேளை தமிழ் நாட்டின் அழுத்தங்களுக்கு இந்திய மத்திய அரசாங்கம் அடிபணிந்து எமக்கெதிரான செயற்பாட்டிற்குள் இறங்கியுள்ளது. இது இந்தியாவின் கடைசிக் காலமாகும்.

இந்தியாவின் தலைவிதி எதிர்வரும் 23 ஆம் திகதியோடு மாறிவிடும். அந்நாடு துண்டு துண்டாகப் போகின்றது.

தற்போதைய சூழ்நிலையை பயன்படுத்தி தமிழ் நாட்டை பிரிப்பதற்கான திட்டத்தை அமெரிக்கா நிச்சயம் முடுக்கிவிடும். இதற்கு தமிழ் நாடும் சாதகத் தன்மையோடு இணங்கிச் செயற்படும். இந்த ஆரம்பத்தோடு அந்நாடு துண்டு துண்டாகப்பிரியும்.

ஜெனீவாவில் அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட பிரேரணை தோல்வி கண்டாலும் இலங்கையை பிரிக்கும் தந்திரோபாயத்தை அமெரிக்கா கைவிடாது. வெற்றி பெற்றாலும் இந்த தந்திரோபாயம் தொடரும் என்றார். (அ-2-7)

# இலங்கைக்கு இந்தியா இரகசிய கடிதம் அனுப்பியது

இலங்கை அரசாங்கம் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்கு அப்பாற்பட்ட அரசியல் தீர்வு ஒன்றை எவ்வாறு நடைமுறைப்படுத்தவுள்ளது என்பது தொடர்பாக விளக்கமளிக்குமாறு இலங்கை அரசாங்கத்தை இந்தியா கேட்டுக்கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு இரகசிய கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக கொழும்பு ஊடகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்திய நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்வியை அடுத்தே இலங்கையிடம் இந்தியா இதுபற்றி விளக்கம் கோரியுள்ளது.

எனினும் இந்தக் கடிதத்துக்கு இலங்கை உடனடியாகவே பதில் அனுப்பியுள்ளதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணாவிடம் இனப்பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாற்பட்ட அரசியல் தீர்வு ஒன்றை காண்பதில் உறுதியாக இருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2-7)

# ரயிலின் மிதிபலகையில் குறைபாடு

வெயங்கொடவில் இளைஞர் ஒருவர் கீழே விழுந்து உயிரிழந்த ரயிலின் மிதிபலகையில் குறைபாடு காணப்பட்டதாக ரயில்வே திணைக்களம் தெரிவிக்கின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்ட ரயில்வே பொது முகாமையாளர் பீ.ஏ.பி. ஆரியரத்ன இதனைக் கூறியுள்ளார்.

இதன்போது மிதிபலகை காணப்பட்ட விதத்தைக் குறிக்கும் காணொளி ஒன்றையும் காட்சிப்படுத்தினர். (அ-7)

# நல்லூர் கோட்டமட்ட தமிழ்த்தினப்போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி....

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட தமிழ்மொழித்தினம் 2012 இற்கான போட்டி முடிவுகள் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நல்லூர் கோட்டத்தில் நடைபெற்ற தமிழ் மொழித்தினம்- 2012 இல் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

*கவிதை ஆக்கம்*

பிரிவு-05

ரா. டிலக்சன (கனகரட்னம் மகா வித்தி), சி. றக்சாயினி (கோண்டாவில் இராமகிருஷ்ணா ம.வி), இ. சோபனா (செங்குந்தா இந்துக் கல்லூரி)

*இலக்கணம்*

பிரிவு-04

ஸ்ரீ கார்த்திகா (அரியாலை ஸ்ரீ பாரதி வித்தி), இ. தமயந்தி ( யா/ இந்து மகளிர் கல்லூரி), சு. அனோஜன் ( யா/ இந்துக் கல்லூரி)

*தமிழியற் கட்டுரை வரைதல்*

*இலக்கியம் நயத்தல்*

பிரிவு-05

ஜெ.மதிவதனி (கனகரட்னம் ம.ம வித்தி), இ. வினு (யா/ இந்துக் கல்லூரி), இ. தர்சிகா (செங்குந்தா இந்துக் கல்லூரி)

*சிறுகதை ஆக்கம்*

பிரிவு 4

சி. ரம்ஜிதா (யாழ் இந்து மகளிர் கல்லூரி), செ. ராஜினி ( முத்துத்தம்பி மகா வித்தி, விகௌசிகா (செங்குந்தா இந்துக் கல்லூரி),

*குறுநாடக ஆக்கம்*

பிரிவு-05

ம.மயூரி (முத்துத்தம்பி மகா வித்தி, சா.சாமினி (செங்குந்தா இந்துக் கல்லூரி),கி. கிருஷ்ணமீனன் (கனகரட்னம் மகா வித்தி)

*திறனாய்வு*

பிரிவு-05

வி. சுபாசினி (கனகரட்னம் ம.ம.வித்தி), ம. தர்மினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), பு. மீரா (செங்குந்தா இந்துக் கல்லூரி)

*குறுநாடக ஆக்கம்*

பிரிவு-04

த. வினுசன் (யா/ இந்துக் கல்லூரி), த. டினோசா (முத்துத்தம்பி மகா வித்தி), சி. தமிழினி (அரியாலை ஸ்ரீ பார்வதி

*சிறுகதை ஆக்கம்*

பிரிவு- 05

இ. மனோரதி (முத்துத்தம்பி மகா வித்தி), மு. மௌழிகா (கனகரட்னம் மகா வித்தி), ரா. நிரோஜினி (செங்குந்தா இந்துக் கல்லூரி)

*கட்டுரை வரைதலும் இலக்கியம்*

*நயத்தலும்*

பிரிவு-04

செ. சேந்தன்( யா/ இந்துக் கல்லூரி), ர. திவியா ( கனகரட்னம் ம.ம.வித்தி), சி. கல்பனா (நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை)

*இலக்கணப்போட்டி*

பிரிவு -05

ர. மயூரி (யாழ். இந்து மகளிர் கல்லூரி). த. அம்ஷத்வனி (கனகரட்னம் ம.ம.வித்தி), த. ரூசிகா (கொக்குவில் இந்துக் கல்லூரி)

*எழுத்தாக்கம்*

பிரிவு-01

க. கிரிஸ்ரினா (சென்பெனடிக் றோ.க .த.பா), இ. வைஸ்ணவி ( கல்வியங்காடு இ.த.க. பாட), க. திவ்வியா ( யா/ இந்து ஆரம்பப் பாடசாலை),

*கட்டுரை வரைதல்*

பிரிவு-02

ப. பவதாரகன் ( யா/ இந்துக்கல்லூரி), வி.லக்சிகா (கோண்டாவில் இந்து மகா வித்தி), ச. லஜித்தா(நாயன்மார்கட்டு மகேஸ்வரி)

பிரிவு-03

ஸ்ரீ.ராகுலன் (யா/ இந்துக் கல்லூரி), த. சங்கீதா (கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டிதா), தி. தர்சனா (கோண்டாவில் இராமகிருஷ்ணா)

(முற்றும்)

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## சமாதானம் உயிர்பெற...



சமாதானம் என்பது ஒரு தேடல் அல்ல. அது ஒரு சுயஉணர்வின் தரிசனம் என்றால் மிகையாகாது. அதை மற்றவர்களுக்கு ஏற்படுத்தும் உண்மை நிலையே ஒருமைப்பாடு எனப்படும். ஆனால், இன்று எமது சமுதாயத்தில் சமாதானம் உணர்ந்தறிப்படுவதில்லை. உண்மைகளை பேச முடியாத போலி நிலை. பேசுபவர்கள் தமது உண்மையான மனநிலைக்கு மாறாக தமது கட்சி அரசியலையும் தங்கள் சொந்த எதிர்பார்ப்பையும் நிறைவு செய்வதே சமாதானம் என ஒரு குறுகிய வட்டத்திற்குள் நின்று பேசுகின்றார்கள். இதனால் சமாதானம் எமது நாட்டைப் பொறுத்த வரையில் ஒரு மலிந்து போன பிரசார தொனியாக விளங்கினாலும் அது ஒரு எட்டப்படாத எதிர்நோக்கலாகவே இருக்கின்றது.

யதார்த்த சிந்தனையுடனான தளர்ச்சியற்ற மன வலிமையே உண்மை சமாதானத்துக்கான திறவுகோல். இதற்கு கூட்டு முயற்சியே அதாவது எல்லோரினதும் ஏகமனதான ஒன்றிப்பே அவசியம் என்பதில் ஐயமில்லை. இன்றைய மனிதன்பல வடிவங்களில் தன் திறமைகளை கையாளுவது கண்கூடு. அத்தகைய மனிதன் ஒன்றிணைந்து உலக சமாதானத்தை எண்ணினாலே மனிதர்களில் மனித நேயத்தை புரிந்து கொண்டாலே சமாதானப் பூங்கா உருவெடுக்கும் என்பது உறுதி. எமது நாட்டிலும் பல்லாண்டுகளுக்கு பின்பு ஓர் சமாதான காற்று வீச எத்தனிக்கின்றது.

இந்த வேளையில் அரசியல் பேதங்களை மறந்து அதிகாரப்போட்டிகளையும் ஆன்மீக வாதங்களையும் அகற்றி அடிப்படை விமர்சனங்களையும் வியாபார தந்திரங்களையும் நிர்வாக தடங்கல்களையும் மறந்து வாழ முற்பட வேண்டும். ஒரே சமுதாயமாக நமக்கு முன்னேயுள்ள கடமைகளை சரியாக உணர்ந்து செயற்பட வேண்டும். எங்களுக்குள் தளிர் விடும் ஒருமைப்பாடே சமாதானமாக மிளிரும். இயேசு ஆண்டவர் அருளிய உண்மையான சமாதானம் எமக்கும் கிட்ட அதற்காக எமது வாழ்வை ஆயத்தப்படுத்துவோம்.

அருட் சகோதரர்
றமேஸ் அ.ம.தி

# பதில் சுகாதார உதவியாளர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை

(கொழும்பு)

பதில் சுகாதார உதவியாளர்கள் ஐயாயிரம் பேரை சேவையில் நிரந்தரப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பதில் சுகாதார உதவியாளர்களாக 180 நாட்கள் பணியாற்றி சகலருக்கும் சுகாதார உதவியாளர்கள் என்ற பதவியில் நிரந்தர நியமனம் வழங்கப்படவிருகின்றது.

பதில் சுகாதார உதவியாளர்களாகப் பணியாற்றும் ஐயாயிரம் பேரை சேவையில் நிரப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தை பெறுவதற்கான அமைச்சரவை பத்திரத்தை சுகாதார அமைச்சு அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளது. (அ-7)

## புலம்பெயர் தமிழர்களின் தேவைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி குரல் கொடுக்கிறது

### தென்மாகாண சபை உறுப்பினர் மைத்திரி

(கொழும்பு)

புலம்பெயர் தமிழர்களின் தேவைகளுக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க குரல் கொடுத்து வருவதாக கட்சியின் தென் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரட்ன தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு தேவையான கருத்துக்களையே ரணில் வெளியிடுகின்றார். இவ்வாறான நடவடிக்கைகளினால் ஐக்கிய தேசியக்கட்சியின் வாக்காளர் பலம் மேலும் பலவீனமடையும்.

மேதினக் கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. புலம்பெயர்தமிழர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய எடுக்கும் முயற்சி சிங்கள வாக்காளர்களை விட்டு விலகிச் செல்ல நேரிடும்.

ரணில் விக்ரமசிங்க ஓர் காலாவதியான பண்டமாகவே நோக்கப்பட வேண்டும். அவரை மக்களிடம் விற்பனை செய்ய முடியாது என தெரிவித்துள்ளார்.

போர் பற்றிய ரணில் விக்ரமசிங்கவின் கருத்துக்களே கட்சியிலிருந்து மக்கள் விலகக் காரணமாக அமைந்தது. நாரஹேன்பிட்டியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

(அ-7-2)

## ஜெனீவா அமர்வுகளுக்காக புலிகள் 500 கோடி செலவு

### சிங்கள நாளேடு தகவல்

(கொழும்பு)

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளுக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் 500 கோடி ரூபா பணத்தை செலவிட்டுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்தும் நோக்கில் புலிகளின் சர்வதேச வலையமைப்பு பாரியளவில் பணம் செலவிட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் புலி ஆதரவு அமைப்புகளின் ஊடாக உறுப்பு நாடுகளின் ஆதரவை பெற்றுக் கொள்ள இப்பணம் செலவிடப்பட்டுள்ளது.

புலிகளுக்கு ஆதரவான இலங்கையர்களுக்கும் இவ்வாறு பணம் வழங்கப்பட்டுள்ளதாக புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

புலிகளுக்கு ஆதரவான வகையில் போராட்டங்கள் நடத்துமாறு அரச சார்பற்ற நிறுவனங்களிடம் புலிகளின் வலையமைப்பு கோரியுள்ளதாக குறித்த சிங்கள பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

(அ-7)

## இந்தியா எடுக்கும் முடிவால் இலங்கை ஆதரவை இழக்கும்?

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நேற்று முன்தினம் அறிவித்துள்ளால் ஜெனீவாவில் இலங்கையின் இராஜதந்திர முயற்சிகளுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாக ஜெனீவா தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் விவாதத்திற்கு எடுக்கப்பட்ட இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் தீர்மானத்தை முறியடிக்கும் இலங்கையின் முயற்சிகளுக்கு இந்தியாவின் முடிவு நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவின் அணுகுமுறையை அவதானித்து வாக்கெடுப்பின் போது முடிவைத் தீர்மானிக்க திட்டமிட்டிருந்த பல நாடுகளின் ஆதரவை இப்போது இலங்கை இழக்கும் நிலை உருவாகியுள்ளதாக ஜெனீவா தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தீர்மானத்தை தோற்கடிக்க தேவையான வாக்குகளை பெறும் இலங்கையின் இறுதி நேர முயற்சிகளுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாகவும் ஜெனீவாவில் உள்ள கொழும்பு ஆங்கில ஊடகச் செய்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

(அ-7)

## மஹிந்தவின் இணைப்புச்செயலாளருக்கு உத்தியோகபூர்வமாக பத்து வாகனங்கள்

(கொழும்பு)

ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர்களில் ஒருவரான கித்சிறி அபேகுணவர்தனவிற்கு அரசாங்கத்திலிருந்து 10 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தத் தகவல் ஜனாதிபதி அலுவலகத்தின் ஆவணங்கள் மூலம் உறுதியாகியுள்ளன.

இலங்கை துறைமுக அதிகார சபை, தேசிய லொத்தர்சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகிய நிறுவனங்களிடமிருந்து இந்த வாகனங்கள் சாரதிகளுடன் வழங்கப்பட்டுள்ளன.

இந்த வாகனங்களுக்கான எரிபொருள் வரையறையின்றி அரச செலவில் வழங்கப்படுகின்றது. இவ்வாறு ஜனாதிபதிக்கு மாவட்ட ரீதியாக இணைப்புச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் ஜனாதிபதிக்கு 106 இணைப்புச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளமையும் குறித்த ஆவணங்கள் மூலம் தெரிய வருகிறது.(அ-2-7)

## 2012.03 21 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1413-ஐந்தாம் ஹென்றி இங்கிலாந்தின் மன்னனாக முடி சூடினான்.

★ 1556-கண்டர்பரி பேராயர் தொமஸ் கிரான்மர் ஒக்ஸ்போர்ட் நகரில் எரியூட்டிக் கொல்லப்பட்டார்.

★ 1788-லூசியானாவின் நியூ ஓர்லென்ஸ் நகரில் நிகழ்ந்த பெரும் தீயினால் 25 வீத நகர மக்கள் உயிரிழந்தனர்.

★ 1800-ரோம் நகரில் இடம்பெற்ற கலகங்களை அடுத்து கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர்கள் நகரை விட்டு அகற்றப்பட்டதை அடுத்து வெனிஸ் நகரில் ஏழாம் பயஸ் பாப்பரசராகப் பதவியேற்றார்.

★ 1801-பிரித்தானியா மற்றும் பிரெஞ்சுப் படைகளுக்கிடையில் எகிப்தின் அலெக்சாந்திரியா நகரில் போர் இடம்பெற்றது.

★ 1844-பஹாய் நாள்காட்டி அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் படி இந்நாள் முதலாம் ஆண்டு முதலாம் நாள் ஆகும்.

★ 1857-டோக்கியோவில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

★ 1905-ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் தனது புகழ் பெற்ற சிறப்புச் சார்புக் கோட்பாடு கொள்கையை வெளியிட்டார்.

★ 1913-ஒகைய்யோவில் டேட்டன் என்ற இடத்தில் இடம்பெற்ற பெரும் வெள்ளம் காரணமாக 360 பேர் உயிரிழப்பு 20 ஆயிரம் வீடுகள் அழிந்தன.

★ 1917-டானிஷ் மேற்கிந்தியத் தீவுகள் கன்னித் தீவுகள் எனப் பெயர் மாற்றம் பெற்றது.

★ 1933-டேச்சு வதை முகாம் நாசிகளின் முதலாவது வதை முகாம் ஜேர்மனியில் அமைக்கப்பட்டது.

★ 1935-பேர்சியா நாட்டை ஈரான் (ஆரியரின் நாடு) என அழைக்கும்படி ரெசா ஷா வெளிநாடுகளுக்கு அழைப்பு விடுத்தார்.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: பர்மாவின் மண்டலாய் நகரை பிரித்தானியப் படைகள் விடுவித்தன.

★ 1948-முகமது அலி ஜின்னா உருது மட்டுமே பாகிஸ்தானின் அரசு மொழியாக இருக்கும் என டாக்காவில் வைத்து அறிவித்தார்.

★ 1960-நிறவெறி தென்னாபிரிக்காவில் ஷார்ப்வில் என்ற இடத்தில் கறுப்பின தென்னாபிரிக்க ஆர்ப்பாட்டக்காரரை நோக்கி பொலிஸ் படையினர் சுட்டதில் 69 பேர் உயிரிழந்தனர்.

★ 1970-முதலாவது பூமி நாளுக்கான அழைப்பை சான் பிரான்சிஸ்கோ மேயர் ஜோசப் அலியோட்டோ விடுத்தார்.

★ 1980-ஆப்கானிஸ்தானில் சோவியத் ஆக்கிரமிப்பை எதிர்த்து மொஸ்கோவில் 1980 கோடைகால ஒலிம்பிக் விளையாட்டுக்களைப் பகிஷ்கரிப்பதாக ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் அறிவித்தார்.

★ 1984-மணலாறு பிரதேசத்தைத் தடைவலயமாக்கி இலங்கை அரசு அங்கிருந்த தமிழர்களை அடித்து விரட்டினர்.

★ 1990-75 ஆண்டுகால தென்னாபிரிக்க ஆட்சியிலிருந்து நமீபியா விடுதலை பெற்றது.

★ 1994-ஸ்டீவன் ஸ்பில்பேர்க் இயக்கிய Schindler List ஏழு ஒஸ்கார் விருதுகளை வென்றது.

★ 1998-புனித வெள்ளி உடன்பாடு வடக்கு அயர்லாந்தில் எட்டப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1768-ஜோசப் ஃபூரியே, பிரெஞ்சுக் கணிதவியலாளர் (இ.1830)

★ 1807-சைமன் காசிச்செட்டி, 202 தமிழ்ப் புலவர்களின் வரலாறு கூறும் தமிழ் புளூட்டாக் நூலை எழுதிய ஈழத்தவர்

★ 1916-பிஸ்மில்லா கான், உலகப் புகழ்பெற்ற ஷெனாய் இசை மேதை (இ.2006)

★ 1922-முஜிபுர் ரகுமான், வங்காள தேசப் பிரதமர் (இ.1975)

★ 1932-வால்டர் கில்பேர்ட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர்.

★ 1936-காமினி பொன்சேகா, சிங்களத் திரைப்பட நடிகர் (இ.2004)


### சிறப்பு நாட்கள்

★ உலக வன தினம்

★ நமீபியா- விடுதலை தினம் (1990)

★ தென்னாபிரிக்கா - மனித உரிமைகள் தினம்

★ உலக செய்யுள் தினம்- யுனெஸ்கோ



★ 1923-தமிழகத் தொழிலதிபர் என். மகாலிங்கத்தின் பிறந்த தினம் இன்றாகும்.

# அதிசய உலகம்...

# மனிதனைப் போன்ற விநோத எலும்புக்கூடுகள் கண்டுபிடிப்பு



சீனாவில் யுனான் மாகாணத்தில் உள்ள குவாங்கி ஷுயான் என்ற இடத்தில் உள்ள ஒரு குகையில் கடந்த 1979ஆம் ஆண்டு ஒரு விநோதமான எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டது. அதேபோன்று மெங்காஷி என்ற இடத்தில் மற்றொரு குகையில் கடந்த 1989 ஆம் ஆண்டு 2 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இவை மனித எலும்புக்கூடுகளைப் போன்று இருந்தன. அவற்றை விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது இவை கற்காலத்தில் வாழ்ந்திருக்க வேண்டும் எனக் கணக்கிட்டனர். இந்த எலும்புக்கூடுகள் மனிதனுடையது அல்ல என்பதை உறுதிசெய்த அவர்கள் இவை 11 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருக்க வேண்டும். ஆனால் இவை எந்த இனத்தைச் சேர்ந்தவை எனத் தெரியவில்லை எனத் தெரிவித்துள்ள னர்.

# சிகரெட்டினால் பசியைப் போக்கும் அதிசயச் சிறுவன்



இந்தோனேசியாவில் வசிக்கும் சிறுவன் ஒருவன் நாளொன்றுக்கு 3 பைக்கற் சிகரெட்டினை புகைப் பதற்காகப் பயன்படுத்துகின்றான். இதில் ஆச்சரியப்படத்தக்க விடயம் என்னவென்றால் அவனது வயது வெறும் எட்டு மட்டுமே என்பதுதான்.

உலகின் எந்தவொரு இடத்திலும் இந்த வயதுச் சிறுவர்கள் சிகரெட்டைப் பணம் கொடுத்துக்கூட வாங்கத் தெரியாத சந்தர்ப்பத்தில் மூன்றுவேளை உணவைப்போல் சிகரெட்டைப் பயன்படுத்துவது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இதேநேரம் இந்தோனேசியாவில் சிறுவர்கள் சிகரெட்டை வாங்குவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பற்களுடன் பிறந்த அதிசயக் குழந்தை



குழந்தை ஒன்று பிறக்கும்போது அதற்குப் பற்கள் முளைத்துள்ள அதிசயம் ஒன்று பிரிட்டனில் நடந்துள்ளது. நியூகேசில் பகுதியில் உள்ள வால்சன்ட் வசிக்கும் ஒரு பெண்ணுக்கு பிறந்த குழந்தைக்குத்தான் பற்கள் முளைத்துள்ளன. இது ஒரு பெண் குழந்தையாகும். கடந்த ஆண்டு ஜுலை மாதம் 20ஆம் திகதி இந்தக்குழந்தை பிறந்துள்ளது.

அதுமட்டுமல்லாமல் அந்தப் பற்கள் முழுமையான வளர்ச்சி பெற்றுள்ளதாக அந்தக்குழந்தையின் பெற்றோர்கள் தெரிவித்தனர். அத்துடன் அந்தக் குழந்தைக்கு இரண்டு பற்கள் கீழ்த்தாடையில் காணப்படுகின்றன. குழந்தையின் பெயர் சம்மர் வேலன் என்பதாகும். சாதாரணமாக ஒரு குழந்தை பிறந்து அது 5-12 மாதமளவில்தான் அதற்குப் பற்கள் முளைக்கத் தொடங்கும் என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயம்.

இந்தப் பெண் குழந்தையின் தாய் கரேன். தந்தை அன்ட்டி ஆவார்கள். இந்தக்குழந்தையின் பாட்டியான 76 வயது ஷிர்லே பர்னிட் ஹவுடனில் வசிக்கிறார்.அவர் பிறக்கும் போதும் இரண்டு முன் பற்களுடன் பிறந்தார் என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

# 80 அடி உயரமான நீர்வீழ்ச்சியில் இருந்து பாய்ந்து அசத்தும் மனிதர்கள்



உயரமான இடங்களிலிருந்து தரையை நோக்கி பாய்வது அவ்வளவு எளிதான காரியமல்ல. அதற்கு மனதில் தைரியம் வேண்டும். அத்துடன் உடம்பிற்கு சேதம் ஏற்படலாம் என்ற தூர நோக்கு இருக்க வேண்டும்.

இவ்விரண்டையும் ஒருங்கே கொண்டிருக்கும் சிலர் அபூர்வ மனிதர்கள். 80 அடி உயரமான நீர் வீழ்ச்சியிலிருந்து கீழே குதித்து சாதித்துள்ளனர். குரோஆரியாவிற்கும் பொஸ்னியாவிற்கும் எல்லைப் பகுதியில் காணப்படும் உனா என்ற நீர்வீழ்ச்சியின் உச்சியிலிருந்தே இந்த அதிசய சாகசம் நிகழ்த்தப்பட்டுள்ளது.

# முதன்முறையாக விண்வெளிக்கு பயணிக்கும் பல்லி




உலகில் முதன்முறையாக விண்வெளிக்கு வெப்பத்தைத் தாங்கக்கூடிய பல்லிகளை அனுப்பும் முயற்சியில் ரஷ்யா ஈடுபட்டுள்ளது. இந்த ஆண்டின் இறுதியில் உயிரியல் மருத்துவத்திற்கான ரஷ்ய நிறுவனம் பல்லிகளை விண்வெளிக்கு அனுப்பிவைக்கும்.பல்லிகளின் விண்வெளிப் பயணம் தொடர்பாக செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகையில், விண்வெளிக்கு மனிதர்களை தெரிவுசெய்து பயிற்சியளித்து அனுப்புவது போன்றே பல்லிகளும் அனுப்பப்படுகின்றன என்றார்.

இதற்கு மிக வலிமையற்ற, உடல்நிலை சரியில்லாத மற்றும் கோபம், ஆத்திரம், படபடப்பு போன்ற உணர்ச்சி அதிகமுடைய பல்லிகள் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றார். மேலும் வீட்டிலிருக்கும் பல்லிகளுக்கு சிறப்புப் பயிற்சி அதிகம் தேவைப்படாது. எந்தவெப்பத்தையும் அவற்றால் தாங்கிக்கொள்ள முடியும். எடையற்ற சூழ்நிலை உருவாகும் போதும் புவியீர்ப்பு விசை குறையும் போதும் இவை தரையிலோ, சுவற்றிலோ, கூரையிலோ ஊர்ந்து செல்லும் இயல்புடையது.

இவற்றை வைத்து ஆராய்ச்சி செய்வதால் மனிதர்கள் பயணிக்கும் போது அவர்களுக்கான உடல்நலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். கடந்த 1947ஆம் ஆண்டில் முதன்முறையாக ஈக்கள் விண்வெளிக்கு அனுப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# நீச்சலடிக்க தெரியாதவர்களின் கவலையைப்போக்கும் நவீன செட்டைகள்



நம்மில் பலருக்கு நீர்நிலைகளில் நீச்சலடிப்பது என்பது அறவே இயலாத காரியமாகும். அதற்குத் தகுந்த பயிற்சியும் உடல் வலிமையும் அவசியமாகும்.


எனினும் இவை இரண்டும் இல்லாது நீச்சலடிக்க பிரியப்படுபவர்களின் கவலையைப் போக்க நவீன உப செட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

Subwing என்ற வியாபாரப் பெயருடன் உருவாக்கப்பட்டிருக்கும் இந்தச் செட்டைகளில் கைகளைப் பயன்படுத்தி நீருக்குக் கொடுக்கும் உந்துசக்தியை விட அதிக உந்து வழங்கி இலகுவாகவும் விரைவாகவும் நீந்தமுடியும்.

மேலும் இவற்றின் பெறுமதியானது அவை ஆக்கப்பட்டுள்ள பதார்த்தத்திற்கு ஏற்ப வேறுபடுகின்றன.

இதனடிப்படையில் பைபர் கண்ணாடிகளால் உருவாக்கப்பட்டவை 700 அமெரிக்க டொலர்கள் எனவும் காபன் நார்களால் செய்யப்பட்டவை 850 அமெரிக்க டொலர்கள் எனவும் காபன் கண்ணாடிகளால் செய்யப்பட்டவை 895 அமெரிக்க டொலர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# எழுத்து வேலைகளை செய்யும் பேனா வடிவிலான ரோபோ



படிக்கும் போது அதிகளவு எழுத்து வேலைகளால் நீங்கள் சோர்ந்து போயிருப்பீர்கள். இதனைப்பற்றி வருங்காலங்களில் நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை.

அதாவது மனிதனின் எழுத்து வேலைக்கான பழுவை குறைப்பதற்கு மிகச்சிறிய பேனா வடிவிலான ரோபோ கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.உங்கள் சட்டைப்பையில் எடுத்துச் செல்லக் கூடிய இந்த Piccolo எனப்படும் மிகச் சிறிய ரேபோ லண்டனில் உருவாக்கப்பட்டுள்ளதுடன் முப்பரிமாண, இருபரிமாண உருவங்களை வரைவதற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 70 அமெரிக்க டொலர்களிலும் குறைவாக இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கைக்கு எதிரான விசாரணையை திசை திருப்பும் நோக்கில் மன்மோகன்



## மழுப்பல் பேச்சு எதற்கு என்றார் சீமான்

(தமிழகம்)

**ஐ.நா.மனித உரிமை மன்றத்தில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானம் தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங் அளித்துள்ள பதில் போர்க்குற்ற விசாரணையில் இருந்து திசை திருப்புவதாகவே உள்ளது என சீமான் தெரிவித்துள்ளார். பிரதமர் மன்மோகன் சிங் அந்நாட்டு நாடாளுமன்ற மக்களவையில் ஆற்றிய உரையில் இலங்கை விவகாரம் குறித்து வெளியிட்டுள்ள கருத்து தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

அவ்வறிக்கையின் விபரம் வருமாறு,

இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என்பதுதான் ஒட்டுமொத்த தமிழினத்தின் கோரிக்கையாகும். அதனால்தான் அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் என்று தமிழ் நாட்டின் அரசியல் கட்சிகளும் மக்களும் ஒருமித்த குரலில் மத்திய அரசுக்கு அழுத்தம் அளித்தனர். ஆனால், நாடாளுமன்ற மக்களவையில் அதற்கு பதில் அளித்து பிரதமர் ஆற்றிய உரையில் அமெரிக்காவின் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்குமா இல்லையா என்பது தொடர்பான உறுதியான நிலை தெளிவுபடுத்தப்படவில்லை.

இலங்கைத் தமிழர்களுக்கு சம உரிமையும் கௌரவமான வாழ்க்கையும் நீதியும் சுய மரியாதையும் உறுதிப்படுத்தப்பட்ட எதிர்காலமுமே இந்திய அரசின் இலக்கு என்றும் அதனை உறுதிப்படுத்துவதாக அமெரிக்கத் தீர்மானம் இருக்குமானால் அதனை இந்தியா ஆதரிக்கும் சாத்தியமுள்ளது என்றுதான் பிரதமர் தனது பதிலில் கூறியுள்ளார். இது பிரச்சினையை திட்டமிட்டு திசை திருப்பும் வார்த்தைகளாகும்.

ராஜபக்ஷ அரசை குற்றவாளிக் கூண்டில் நிறுத்த வேண்டும் என்பதுதான் தமிழர்களின் கோரிக்கை. அதற்கான வாய்ப்பு உருவாக வேண்டுமெனில் அங்கு நடந்த போர்க்குற்றங்கள் பற்றி விசாரணை நடத்த வேண்டும்.

அமெரிக்கத் தீர்மானத்தில் விசாரணை நடத்துவதற்கான கோரிக்கை உள்ளது. எனவேதான் அதனை இந்திய அரசு ஆதரிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தோம். இதற்கு நேரடியாக பதிலளிக்காமல் தமிழர்களின் எதிர்காலத்தைப் பற்றியும் இணக்கப்பாடு பற்றியும் பிரதமர் பேசுவதும் அதுபற்றி அமெரிக்கத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டால் மட்டுமே அத்தீர்மானத்தை ஆதரிப்போம் என்று கூறுவதும் ஏமாற்றச் செயலாகும்.

தமிழர்களின் வாழ்விலும் எதிர்காலத்திலும் காங்கிரஸ் அரசுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதை தமிழர்களுக்கு சொல்லித் தெரிய வேண்டியது இல்லை. பிரதமர் கூறிய வார்த்தைகளில் உள்ள உண்மையை புரிந்து கொள்ளாமல் அவர் அளித்த பதிலை ஒரு வெற்றியாக கொண்டாடுகிறது தி.மு.க.. ஆங்கில வார்த்தைகளால் தன் குற்றத்தையும் மறைத்து இலங்கையின் குற்றத்தையும் மறைக்கவே மத்திய காங்கிரஸ் அரசு தொடர்ந்து முயன்று வருகிறது. இதனைப் புரிந்துகொள்ள வக்கற்ற தி.மு.க.தலைமை பிரதமர் அளித்த பதிலில் புளங்காகிதம் அடைந்து பெருமை பாராட்டிக்கொள்கிறது.

இலங்கையில் தமிழர்களுக்கு சம உரிமையும் நீதியும் கௌரவமும் சுய மரியாதையுடன் கூடிய எதிர்காலமும் கிடைக்க வேண்டுமென்றால் அது தனித் தமிழ் ஈழம் அமைந்தால்தான் உறுதியாகுமே தவிர பிரதமர் மன்மோகன் சிங் கூறுவதுபோல் நடக்காது.

புள்ளிவிபரங்களைக்கூறி பொருளாதாரவளர்ச்சி இருப்பதாக ஏமாற்றும் பிரதமர் தமிழர் பிரச்சினையில் எதிர்காலத்தைப் பற்றிப் பேசி ஏமாற்றப் பார்க்கிறார். இதில் தமிழர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று நாம் தமிழர் கட்சி கேட்டுக்கொள்கிறது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-7)



நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள பாகிஸ்தானின் கூட்டுப் படைகளின் தலைவரான ஜெனரல் காலித் சமீம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் நேற்று முன்தினம் சந்தித்தார். இச் சந்திப்பில் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர், ஜனாதிபதியின் பிரத்தியேக செயலர் மற்றும் பாதுகாப்பு படைகளின் தளபதி ஏயார் மார்ஷல், ரொஷான் குணதிலக்க ஆகியோருடன் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலய படையதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## இலங்கையை அகௌரவப்படுத்த அமெரிக்கா தொடர்ந்தும் முயற்சி

### அமைச்சர் றிசாத் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நிறைவேற்றுவதில் தீவிரமாக இருக்கிறது. இத்தகைய சந்தர்ப்பத்தில் அமெரிக்கா இந்த பிரேரணையை ஜெனீவா மனித உரிமை மகாநாட்டில் கொண்டு வந்து எங்கள் நாட்டை அகௌரவப்படுத்த முயற்சி செய்கிறது என்று கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

இந்நாட்டில் சகல இன மக்களும் கடந்த காலத்தில் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். இந்த ஒற்றுமையை சீர்குலைத்தவர்கள் எல்.ரீ.ரீ.ஈ.யினர்தான் எனவும் யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் இருந்த அப்பாவி முஸ்லிம்களை எல்.ரீ.ரீ.ஈ.யினர் விரட்டியடித்தனர். காத்தான்குடி பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நூற்றுக்கணக்கான முஸ்லிம்களை சுட்டுக்கொன்ற போது இன்று மனித உரிமை பேசும் அமெரிக்காவோ வேறு எந்த வல்லரசுகளோ ஒருவார்த்தை கூட கண்டனம் தெரிவிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நாட்டு மக்களின் அபிமானத்தை பெற்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு யதார்த்தபூர்வமான நடவடிக்கை எடுக்கின்றபோது அமெரிக்காவும் ஏனைய வல்லரசுகளும் ஏன் இலங்கையை கொடுமைப் படுத்துகிறதென்றும் இந்நாட்டின் இனப்பிரச்சினையை தீர்த்து வைக்கக்கூடிய ஒரே ஒரு தலைவர் ஜனாதிபதி அவர்கள்தரன். அவருக்கு மாத்திரமே இந்த பிரச்சினையை தீர்த்து வைக்க முடியும். ஜனாதிபதியின் இந்த சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம் தீங்கிழைக்க எத்தனித்தால் நிச்சயம் பல்லாண்டுகளுக்கு இலங்கையில் இந்தப் பிரச்சினை தொடர்ந்து கொண்டே இருக்குமென்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

(அ-7)

## இரட்டை பதிவை தவிர்ப்பது தொடர்பில் கலந்துரையாடல்

(கொழும்பு)

வாக்காளர் பதிவேடுகளை தயாரிக்கும் போது இரட்டை பதிவு இடம்பெறுவதை தவிர்ப்பது தொடர்பான கந்துரையாடல் ஒன்று தேர்தல்கள் செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

கடந்த வருடத்திற்கான வாக்காளர் பதிவேட்டை தயாரிக்கும் போது இரண்டு மாவட்டங்களில் அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களில் தம்மை பதிவு செய்து கொண்ட சுமார் இரண்டு இலட்சம் வாக்காளர்கள் இருக்கின்றமை தெரியவந்துள்ளது.

இத்தகைய குறைபாடுகள் எதிர்கால த்தில் இடம் பெறுவதை தவிர்க்கும் வகையில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து நேற்று தேர்தல்கள் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (அ-7-2)

## துணை மருந்தாளர்கள் வேலை நிறுத்தத்திற்கு கொழும்பு நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு

அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் துணை மருந்தாளர்கள் மேற்கொள்ளும் தொடர்வேலை நிறுத்தத்தை தவிர்க்கும் தடை உத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

துணை மருந்தாளர்கள் சங்கத்தில் அங்கம் வகிக்கும் ஐந்து தொழிற்சங்கங்களுக்கும் அந்த சங்கங்களை உள்ளடக்கி அமைக்கப் பட்டுள்ள துணை மருந்தாளர் தொழிற்சங்க கூட்டு முன்னணியின் எட்டுப் பிரதிநிதிகளுக்கும் இத்தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

தொழிற்சங்க கோரிக்கை என்ற லேபலை ஒட்டிக் கொண்டு நாட்டின் அத்தியாவசிய சேவையை சீர்குலைக்கும் வண்ணம் செயற்பட அரச ஊழியர்களுக்கு சட்டரீதியான அல்லது ஒழுக்க ரீதியான உரிமை இல்லையென குறிப்பிட்டு இரு நோயாளர்கள் தாக்கல் செய்த வழக்கை பரிசீலித்த கொழும்பு பிரதம மாட்ட நீதிபதி தம்மிக்க கனேபொல இத்தடை உத்தரவை பிறப்பித்தார்.

துணை மருந்தாளர்களின் கோரிக்கைகளை தீர்த்து வைப்பதற்கு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உட்பட முக்கிய அதிகாரிகள் முன்வந்துள்ளனர். அவர்களது அந்த தீர்வுகளை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இவ்வேளையில் இவ்வாறு வேலை நிறுத்தம் செய்வது நியாயம் அல்ல.

அரச ஊழியர்கள் என்ற வகையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது சட்டவிரோத செயல் என்றும் முறைப்பாட்டாளர் சார்பில் சட்டத்தரணி குபேரத சொய்ஸா நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த வேலைநிறுத்தம் 1935 ஆம் ஆண்டின் 14 ஆவது இலக்க தொழிற்சங்க கட்டளை சட்டத்தின் 2 ஆவது சரத்தின் கீழ் வரும் கைத்தொழில் தகராறு அல்லது நியாயமான தொழிற்சங்க நடவடிக்கை அல்ல என்றும் இது முறைப்பாட்டாளர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். முறைப்பாட்டாளர்களின் காரணங்களை பரிசீலிக்க மாவட்ட நீதிபதி எதிர்வரும் 30 திகதி வரை இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்ததோடு எதிராளிகளுக்கு அழைப்பாணை பிறப்பித்து அத்தினத்தன்று காரணங்களை தெரிவிக்குமாறு உத்தரவிட்டார்.

துணை மருந்தாளர்கள் சங்கத்தினர் நேற்று ஏழாவது நாளாகவும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் அரசாங்க வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவுகளுக்கு சிகிச்சை பெற வந்த அப்பாவி நோயாளர்கள் வைத்தியர்கள் வழங்கிய மருந்து சிட்டை களுக்கு மருந்து பொருட்களை பெற்றுக் கொள்ள முடியாது பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்ததாக வைத்திய சாலை வட்டாரங்கள் குறிப்பிட்டன. (அ-2-7)

# பங்குனி மாத இராசி பலன்கள்

# 14.03.2012-12.04.2012

**அவிட்டம் 3, 4 பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள்**

**தெய்வ வழிபாடுகளே திருப்தி தரும்! எதற்கும் கவலைப்படாமல் எப்பொழுதும்போல் இயங்கிக் கொண்டிருக்கும் கும்ப இராசி நேயர்களே!**

சுதந்திரப் பிரியர்களாயிருப்பீர்கள். சிறுசிறு குறைகள் உங்களுக்குள் இருந்தாலும், அதை வெளிக்காட்டிக்கொள்ள மாட்டீர்கள். யாசிப்பது உங்களுக்குப் பிடிக்காது. யோசிப்பது உங்களுக்குப்பிடிக்கும். நேசிப்பதும் உங்களுக்குப்பிடிக்கும். மற்றவர்களிடம் யோசனை கேட்டாலும், அவர்கள் சொல்லும் முன் உங்கள் கருத்துக்களை மடமடவென சொல்லி, அவர்கள் சொல்ல வந்ததை மறக்கடித்து விடுவீர்கள். சாதனையாளர்களாகத் திகழ விரும்புவீர்கள்.

உங்களுக்கு இந்த பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, இராசிநாதன் சனியும் வக்ரம், சகாய ஸ்தானாதிபதி செவ்வாயும் வக்ரம், பொன்னான புதனும் உச்சம் பெறபோகிறார். எனவே, இம்மாதம் எடுத்த முடிவுகளை திடீர் திடீரென மாற்றிக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும். அடுத்தடுத்து செய்யும் முயற்சிகளில் தடைகள் வந்துகொண்டு இருக்கிறதே என்று கவலைப்படுவீர்கள். கொடுத்த கடன் வசூலாவதில் தாமதம். கொள்கைப் பிடிப்போடு செயற்படஇயலாத சூழ்நிலை. எடுத்த முயற்சிகளில் எல்லாம் எப்பொழுதுதான் வெற்றி கிடைக்கும் என்ற ஏக்கம்... இவை அனைத்தும் ஏற்படலாம்.

ஆகவே, தெய்வ வழிபாடுகளிலேயே திருப்தி காணவேண்டிய மாதமாக இம்மாதம் அமைகிறது. விலகிய அஷ்டமத்திச்சனி மீண்டும் வக்ரமாகி, அஷ்டமத்துச்சனியாகவே தொடரப்போகிறது. எனவே, ஆரோக்கியத்திலும் அக்கறை காட்டுவீர்கள். அடுத்தவர் நலனில் காட்டும் அக்கறையிலும் வீண்பழி ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுங்கள். குறிப்பாக, சனி கவசம் பாடி சனி பகவானையும் அனுமன் கவசம் பாடி அனுமனையும் வழிபாடு செய்யுங்கள். யோகபலம் பெற்ற நாளில் சிறப்பு வழிபாடுகளைச்செய்தால், யாகம்செய்த பலன் உங்களுக்குகிட்டும். தேக நலனும் சீராகும்.

மார்ச் 26 ஆம் திகதி கன்னி இராசியில் சனி சஞ்சரிக்கிறார். எனவே, மீண்டும் அஷ்டமத்துச்சனி உருவாகிறது. எனவே, சனி மாறும் வரை சில மாதங்கள். பொறுமையோடு செயற்படுவது நல்லது. வாகனங்களில் செல்லும்பொழுது விழிப்புணர்ச்சி தேவை. மற்றவர்களிடம் நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வந்து சேரலாம். தொழில் உத்தியோகத்தில் திடீர் இடமாற்றங்கள் வரும் போது அதை ஏற்றுக் கொள்ளலாமா? வேண்டாமா? என்று யோசிப்பீர்கள்.

மார்ச் 27 ஆம் திகதி சுக்கிரன் இடப இராசியில் சஞ்சரிப்பது யோகம்தான். கடிதம் கனிந்த தகவல்களைத்தரும். குடும்பத்தில் சுபகாரிய பேச்சுக்கள் வந்து கொண்டேஇருக்கும். வீடு வாங்கும் முயற்சிகள் கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும். விலைஉயர்ந்த பொருட்களையும் மின் சாதனங்களையும் வாங்கி மகிழ்வீர்கள்.

ஏப்ரல் 9 ஆம் திகதி புதன் மீன இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். உச்ச புதனாக மாறும் இந்த நேரத்தில் பிள்ளைகள் வழியில் விரயங்கள் ஏற்படும். இழப்புக்களை ஈடுகட்டும் விதத்தில் தொழிலில் புதிய வாய்ப்புகள் கைகூடி வரும். உடல் நலம் சீராகி உற்சாகப் படுத்தும். பணி புரியும் இடங்களில் இருப்பவர்கள் பக்க பலமாக இருப்பார்கள். குடும்பப் பிரச்சினைகள் ஒவ்வொன்றாக நல்ல முடிவுக்கு வரும்.

இம் மாதம் சனீஸ்வர வழிபாட்டில் கவனம் செலுத்துங்கள். காகத்திற்கு அன்னம் இடுங்கள். செவ்வாய் வழிபாடும் உங்களுக்கு சிறப்புகளை வழங்கும்.




இம்மாதம் மீண்டும் அஷ்டமத்துச்சனியின் ஆதிக்கம் இடம்பெறப் போவதால் உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தும் சூழ்நிலை உருவாகும். இடமாற்றம், ஊர்மாற்றம், வீடு மாற்றம் வருவதற்கான அறிகுறிகள் தோன்றும். இல்லத்தில் உள்ளவர்களின் உள்ளத்தில் இடம்பிடிக்க பெரும் பிரியாசை எடுக்கும் சூழ்நிலை அமையும். தம்பதியர்களுக்குள், விட்டுக் கொடுத்துச் செல்வது ஒற்றுமையை பலப்படுத்தும். யோசித்து எடுக்கும் முடிவுகளால் யோகம் ஏற்படும் மாதம் இது.

# சிவல்புரி சிங்காரம்




**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**உடன் பிறப்புக்களை அனுசரிப்பது நல்லது!**

**எதிலும் பிடிகொடுக்காமல் நடந்து கொள்ளும் மீன இராசி நேயர்களே!**

நீங்கள் பிறவியிலேயே புத்திசாலிகள். தெய்வபலம் மிக்கவர்கள். குறைகளையே நிறைவாக்கி வாழ்க்கை நடத்துவீர்கள். குரு உங்கள் இராசிநாதன் என்பதால் அருள்தரும் ஆலயங்களுக்கு சென்றுவரும் பொழுதெல்லாம் அற்புத பலன் உங்களுக்கு கிடைக்கிறது என்பதை அனுபவத்தில் கண்டு கொள்வீர்கள். எதிர்காலத்தை முன்கூட்டியே உணரும் ஆற்றல் உங்களுக்கு உண்டு.

உங்களுக்கு இந்த பங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது இராசிநாதன் குரு சுக்கிரனுடன் இணைந்து எதிர்பாராத திருப்பங்கள் பல வற்றையும் ஏற்படுத்தப் போகிறார். இதற்கிடையில் சப்தம ஸ்தானத்தில் சனியும் சஞ்சரித்து மீண்டும் உங்கள் இராசியில் சனி பார்வை பதியப் போகிறது. எனவே, எதிலும் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டினால்தான் ஏமாற்றத்தை சந்திக்காமல் இருக்கமுடியும்.

மாதத் தொடக்கத்தில் பஞ்சமாதிபதி சந்திரன் ஒன்பதில் உச்சம் பெற்று மாதம் தொடங்குவதால், பிள்ளைகளைக் கவனமுடன் பார்த்துக்கொள்வது நல்லது. அவர்கள் எடுக்கும் முடிவுகள் உங்கள் மன நிம்மதியைக் குறைக்காமல் இருக்க அன்புகாட்டி அரவனைத்துச் செல்லுங்கள். எதிரிகளைக்கூட வசமாக்கிக்கொள்ளும் ஆற்றல் உங்களிடம் இருப்பதால் எதையும் சமாளித்து விடலாம்.

சுபவிரயங்கள் அதிகரிக்கும் இம் மாதத்தில் போதுமான அளவிற்கு பணம் இல்லையே என்று கவலைப் படவேண்டாம். பற்றாக்குறை என்று இருந்தாலும், பணம் கேட்கும் இடத்தில் கிடைக்கும். சப்தம ஸ்தானத்திலும் அஷ்டமஸ்தானத்திலும் சனி உலாவரும் பொழுது, கடன்வாங்கும் சூழ்நிலையே ஒரு சிலருக்கு அமையும். வாங்கும் கடனை திருப்பிச் செலுத்தும் அளவிற்கு வழிவகை செய்வது சனி பகவான்தான். எனவே, அந்த சனி பகவானை வழிபாடு செய்யுங்கள்.

மார்ச் 26 ஆம் திகதி கன்னி இராசியில் சனி சஞ்சரிக்கபோகிறார். இந்த சனியின் வக்ர இயக்கம் அவ்வளவு நல்லதல்ல. எதையும் பொறுமையோடும், நிதானத்தோடும் செய்தால்தான் வெற்றிகிடைக்கும். தொழில், உத்தியோகத்தில் உடன் இருப்பவர்களை அனுசரித்துச் செல்லுங்கள். திடீர் இடமாற்றங்கள் தெய்வ தரிசனங்களால் மாற்றமாகலாம். விரயங்கள் கூடும்.

மார்ச் 27 ஆம் திகதி இடப இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்க போகிறார். சகோதர வழியில் சகாயங்கள் கிடைக்கும். பூமி பிரச்சினை பஞ்சாயத்துக்கள் மூலம் நல்ல முடிவிற்குவரும். பழைய ஆபரணங்களை கொடுத்து விட்டு, புதிய ஆபரணங்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

ஏப்ரல் 9 ஆம் திகதி மீன இராசியில் புதன் உச்சம் பெறப் போகிறார். இது ஓரளவு நன்மையையே வழங்கும். குடும்ப ஒற்றுமைக்கு குந்தகம் விளைவித்தவர்கள் விலகுவர். வரன்கள் வாயில் தேடிவரலாம். மாமன் வழி உறவுகள் மலரும். சேமிப்புகள் அதிகரிக்கும். செயற்பாடுகளில் வெற்றி கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும்.


இம்மாதம் குரு தட்க்ஷணா மூர்த்தியை வழிபட்டு, குதூகலமான வாழ்க்கையை அமைத்து கொள்ளுங்கள்.

இம்மாதம் குடும்ப சுமை கூடும் மாதமாக அமையப் போகிறது. கொடுக்கல், வாங்கல்களில் கவனம்தேவை. உடன் பிறப்புக்களை அனுசரித்துச் சென்றால்தான். உதவிக்கரம் நீட்டுவர். ஊர்மாற்றச் சிந்தனைகள் மீண்டும் தலைதூக்கும். கணவன்- மனைவிக்குள் அனுசரித்துச் செல்வதன் மூலமே அன்பைப் பகிர்ந்துகொள்ள முடியும். நினைத்த மாத்திரத்தில் எதையும் செய்ய முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள். பிள்ளைகளை கவனமுடன் மேற்பார்வை செய்துகொள்வது நல்லது. சனிபகவான் வழிபாடும் தெசாபுத்திக் கேற்ப தெய்வ வழிபாடும் திருப்திதரும்.

(தொடரும்)

# ஏ.கே.தூக்கியவனுக்கு சூளையில் வேலை கே.பி.யின் வாழ்க்கையோ இராஜபோகம்

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் குற்றச்சாட்டு



(கொழும்பு)

**யாழ்ப்பாணத்திலோ கிளிநொச்சியிலோ முல்லைத்தீவிலோ எங்கும் வடக்கின் வசந்தத்தை காண முடியவில்லை. ஆனால், வடக்கின் வசந்தம் எவரது சட்டைப் பைக்கு போகிறதோ தெரியவில்லை.**

**யுத்தத்திற்கு அர்ப்பணிப்பு செய்தோர் இன்று செங்கல் சூளையில் வேலை செய்கின்றனர். கே.பி. இராஜபோகம் அனுபவிக்கின்றாரென்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.**

வெலிஓயா பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பொது மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில தினங்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களுக்கு விஜயம் செய்தோம். ஆனால், எங்கும் வடக்கின் வசந்தத்தை காண முடியவில்லை. ஆனால், வடக்கின் வசந்தம் யாரோ ஒருவரது சட்டைப் பைக்குள் போய்ச் சேருகிறது.

இப்பிரதேசங்களில் யுத்தத்திற்கு முகம் கொடுத்த மக்களும் பாதிக்கப்பட்ட மக்களுமே வாழ்கின்றனர். இவர்களை வாழ வைப்பதற்கோ பாதுகாப்பதற்கோ அரசாங்கத்திடம் எதுவிதமான திட்டமும் இல்லை.

அன்று யுத்தம் செய்த அர்ப்பணிப்புடன் போராடிய எமது இளைஞர்கள் வெலிஓயா பிரதேசங்களில் செங்கல் சூளைகளில் கஷ்டப்படுகின்றனர்.

கே.பி.யையும் இச் சூளைகளில் வேலைக்கு அனுப்பலாம். ஆனால், அரசாங்கம் இராஜ உபசாரத்தை வழங்கி பாதுகாக்கின்றது. அம்பாந்தோட்டையில் கப்பல் வராத துறைமுகமொன்று நிர்மாணிக்கப்பட்டது. ரூபா 2 ஆயிரத்து 160 செலவு செய்து அம்பாந்தோட்டை சூரியவெல காட்டுப்பகுதியில் கிரிக்கெட் மைதானமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

அந்த மைதானத்தை இப் பிரதேசத்தில் அமைத்திருந்தால் நல்ல பயன்களைப் பெற இருந்தது. இப் பிரதேசத்தில் வாழும் இளைஞர்களுக்கு தொழில் இல்லை. பாடசாலைகளில் அபிவிருத்தி இல்லை. சிவில் பாதுகாப்பு பிரிவினருக்கு கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டாமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. அப்பிரதேசத்தில் உள்ளோர் மாதமொன்றுக்கு 2 ஆயிரம் செங்கற்கள் தயாரிக்காவிட்டால் வீட்டை விட்டு வெளியே போக முடியாது.

வடக்கில் பிரதேச சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் அச்சப்படுகின்றது. தேர்தல் நடந்தால் தோல்வி நிச்சயம். இதற்காக றிசாத் பதியுதீனை பயன்படுத்தி அவர் மூலம் இருவரை நியமித்து தேர்தலை ஒத்தி வைப்பதற்காக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவு மூலம் தேர்தலை ஒத்திவைத்து தோல்வியை தவிர்க்க அரசு முயற்சிக்கின்றது என தெரிவித்தார்.

(அ-2-7)

## தரம் 5 விடைத்தாள் மதிப்பீட்டிற்கு திணைக்களத்தால் விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டிற்காக பரீட்சகர்களை தெரிவு செய்வதற்கு இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப்படிவங்கள் பாடசாலைகளுக்கு பரீட்சை திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்காக தரம் 3,4 அல்லது 5 ஆம் தரங்களில் ஏதாவது ஒரு வகுப்பில் முழுநேரம் கற்பிக்கும் ஆசிரிய ஆலாசகர்கள் தேசிய கல்வி நிறுவனத்தின் ஆரம்பக்கல்வி செயற்றிட்ட அதிகாரிகள் ஆகியோரின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பரீட்சகர்களை தெரிவு செய்யும் போது ஆரம்பக்கல்வி பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

மேலும் பட்டதாரி ஆசிரியர்களாயின் அவர்கள் பெற்றுள்ள பாடப்பயிற்சி தொடர்பான விபரங்களை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரியின் பிள்ளைகளோ அல்லது வீட்டில் வசிப்பவரோ அல்லது குடும்ப உறுப்பினரோ இப்பரீட்சைக்கு தோற்றியவராயின் இப்பரீட்சையின் மதிப்பீட்டுக் கடமைக்கு விண்ணப்பிக்க முடியாது என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

(அ-2-7)

# ஆளுநரின் விசேட நிதியுதவிக்கு தெரிவானோர் விபரம்

பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆளுநரின் விசேட நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இதனடிப்படையில் கடந்த பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து உதவித் தொகை வழங்கப்பட்ட மாணவர்களில் சித்தியடைந்து பல்கலைக் கழகத்தை விட்டுவெளியேறிய மாணவர்கள் தவிர்ந்த ஏனைய மாணவர்களுக்கு இந் நிதியுதவி வழங்கப்படுமென வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆளநரின் இல்லத்தில் வழங் கப்படவுள்ளது. இந் நிதியுதவியினை பெறும் மாணவர்களின் பெயர் விபரம் வரமாறு,

தர்சனா தங்கராசா(கலை),சிவராசா சஜந்தா (கலை), சுதர்சினி மோகன்(கலை), மனோகரன் சுவைதா (கலை), றோசிகா ரவிராசா (முகாமைத்துவம்), திருநாவுக்கரசு சபேஸ் மோகன் (முகாமைத்துவம்), பரமானந்தன் குமாரசிங்கம் (முகாமைத்துவம்), பூபாலசிங்கம் சுகிர்தன் (விவசாயம்),தியாகராசா அருள்குமரன் (முகாமைத்துவம்), யாழினி தியாகராஜா(கலை), சிவபாதம் பிருந்தா ( முகாமைத்துவம்), சிவஞானம் ஞானகுமார் (முகாமைத்துவம்),சண்முகவடிவேல் கஜீபன்(முகாமைத்துவம்), முருகன் லோஜினி(கலை), துரைராசா நித்தியானந்தன்(கலை), செல்வராஜா சசிகலா(விவசாயம்), பரமேஸ்வரன் யசிந்தினி(கலை), கணேசன் சிறிசுபாசினி(கலை), தளையசிங்கம் சசிக்குமார்(கலை), வேலுப்பிள்ளை தமிழ்ச் செல்வி (முகாமைத்துவம்), பத்மநாதன் வாசுகி(விவசாயம்), தர்மராஜா குகசாந்தினி(விவசாயம்), சீவரத்தினம் விஜிதா (கலை),கனகசபை ஜெயசுதன்(முகாமைத்துவம்), அல்பேட் பபியோலா(கலை), சரவணபவன் உமைப்பிரியா(கலை), கஜேந்திரன் பிருந்தா (சட்டம்), வைத்திலிங்கம் நவதரன் (கலை), சிவலிங்கம் மயூரன் (முகாமைத்துவம்), சிவசுப்பிரமணியம் கஜேந்திரன் (கலை), தவராசா செல்வகுமார் (கலை), சிவகிளி பிரதிபன் (கலை), கவிதா துரைரட்ணம் (முகாமைத்துவம்), தவநீதன் கோமதி (கலை), மாணிக்கம் சிவரூபன் (கலை), சிவநந்தன் நிசாந்தன் (கலை), தியாகராஜா நிசாந்தன் (முகாமைத்துவம்), மோகன் சுரேசினி (கலை), நடராசா சுஜித்தா(கலை), செல்லத்துரை சாந்தநிரஞ்சனா (கலை), கந்தசாமி அருள்வதனி (கலை), மரியகோனாட் பௌகியா( கலை), குகேந்திரன் விஜயலதா(கலை), கோபால கிருஷ்ணன் அர்ச்சுணா (முகாமைத்துவம்), நடராஜா காண்டீபன் (கலை), வஜீகரன் தீபனா (கலை), சிறிதரன் சுபரஞ்சினி (விஞ்ஞானம்), வடிவேல் ரமேஷ்(விஞ்ஞானம்),மேரி மரிஸ்ரலா அன்ரனிப்பிள்ளை(கலை), பிறேம்நாத் சுதர்கினி (கலை),அன்ரன் பிரமதாஸ் ஜோஜிதன் (அறிவியல் விஞ்ஞானம்), சாந்த மேனன் சமந்தி(மருத்துவம்), தேவராஜா பிரதீபன் (கலை), காகரத்தினம் நிசாந்தினி(கலை), அருணகிரி கோஜலா(கலை), பிரான்சிஸ் பிறின்ஸ்லி சுஜிதரன்(கலை), யூட் சுசிகரன் கனிஸ்ரா( கலை) ,யோகச்சந்திரன் வின்சிகா(கலை) ,கோணேஸ்வரன் சாளினி( கலை), சந்திரன் சுஜித்தா(கலை), கமலதாஸ் பபிதா (நுண்கலை),துரைசிங்கம் காயத்திரி (சித்தமருத்துவம்), வல்லிபுரம் வளர்மதி (கலை), ஆறுமுகம் சத்திய கலா(நுண்கலை), தினேஷ் தவராணி(கலை), ஜெயக்குமார் குயின்ஸி (நுண்கலை), மயூரதன் சங்கீதா(கலை), சசிகலா சதாசிவம்(கலை), பிரதீப்குமார் வைஷ்ணவி (மருத்துவம்),ரதீஸ்குமார் மேகலா (கலை), பிரதீபன் சுவேதா (கலை),ராஜரட்ணம் கிசாந்தி (கலை),ரமணன் விதுஷா(கலை), துவாரகா வில்வராஜன்(விஞ்ஞானம்), கோபாலகிருஷ்ணன் கிருஷ்ணபிரியா (விஞ்ஞானம்) ஜெயபாலன் பிரதீபா(கலை),கனகலிங்கம் விக்னா(கலை),கிருஷ்ணநந்தன் ஐங்கரன் (கலை), நடராசாகிரிசாந்( மருத்துவம்), கந்தசாமி சாரங்கன் (விவசாயம்), பரமசாமி ரகுதரன்(விஞ்ஞானம்),சொர்ணாநந்தன் கஸ்தூரி (கலை),குணசீகரன் விக்னேஸ்வரன் (கலை),கங்காகரன் கிறிஸ்ரினா (கலை), டிஸ்கந்தராசா நிரஞ்சனா (கலை), பஞ்சாட்சரம் அனித்தா (கலை), வன்னியசிங்கம் சிறிகரன்(கலை),ஜெயபாலன் ஜெயகிருஷ்ணா (கலை), மரியதாஸ் சுமன் (முகாமைத்துவம்) அகிலன் மேரி செல்வராகினி (கலை), குகதாசன் தர்சினி (நுண்கலை, தியாகராசா அருள்வேந்தன்(கலை), ரமணி சிவலிங்கம் (கலை), தர்சிகா செல்வராசா(கலை), குணரட்ணம் கௌதமன்(கலை), வீரக்குட்டி தீபன் (விஞ்ஞானம்), சிவராசா சத்தியசீலன் (கலை), பஞ்சநாதன் கமலேஸ்வரன் (கலை), குலசேகரம் சுபராஜ்(கலை), தயாபரன் சுலக்சன் (விஞ்ஞானம்), புனிதராசா மனோராஜ் (முகாமைத்துவம்), செல்வராசா கஜோதிபன் (கலை), பெனடிக் ஸ்ரீபன் (கலை), தர்மகுலசிங்கம் செந்தில்குமார் (கலை), இராசையா கிரிசா (முகாமைத்துவம்), ரஞ்சித்குமார் அனுசுகா (முகாமைத்துவம்),. செபஸ்தியான்பிள்ளை ஜெபோசன்(விஞ்ஞானம்), சுதர்சன் நிசாந்தினி( கலை), சிவகுமார் பிரசாந்தி (கலை), சத்தியேந்திரா அருள்வதனி( கலை), யசோதரன் விமலேஸ்வரி (கலை), ஜயந்தன் மேரி கிருஷா (கலை), தேவராஜா சுரேஸ்குமார் (கலை), ஆனந்தரூபன் நிசாந்தினி (கலை), ரஜனிகாந் துஷ்யந்தினி (கலை), சண்முகநாதன் அனுசியா(முகாமைத்துவம்), சாந்தினி ஆனந்தராசா (கலை), செல்லன் கீரன் (முகாமைத்துவம்), மதிவண்ணன் சியாமளா (கலை) ,குணசிங்கம் புஸ்பகரன்(கலை), சுந்தரலிங்கம் பிரணநந்தன் (கலை), அம்பிகைபாலன் தர்சினி(கலை), யசோதாஸ் சுதர்சினி (கலை),கஜேந்திரன் புஸ்பா (கலை), செல்வரட்ணம் நகுலாதேவி( கலை), சுதர்ஜினி செல்வச்சந்திரன் (கலை),நிதியா நடராஜா (விவசாயம்), ராமுப்பிள்ளை சிவகுமார் (முகாமைத்துவம்), மரியதாஸ் கலிஸ்ரா செரோமி (முகாமைத்துவம்), விஜேந்திரன் நிவேதிகா (நுண்கலை),நல்லதம்பி ஜெய மலர்(கலை), தில்லைநாதன் நந்தா (கலை), சுபாஸ்கரன் கலைவாணி(கலை), விஜயரா கவன் விஜித்தா(கலை),கலெஸ்ரின் அருள் யோகி (கலை) ,ஜெயசிங்கம் மேனகா(கலை), மாணிக்கவாசகம் அபிராமி(கலை), துரைராஜா ரதீபன்( கலை), மயன் சுகந்தன் (உடற்கல்வி), கங்காதரன் மயூரன் (உடற்கல்வி), வேலுசாமி சிவராசா(கலை),தனராஜா தனராஜன்(முகாமைத்துவம்),இராசரத்தினம் பத்மகுமார்(உடற்கல்வி),பெருமாள் புண்ணியராஜா (உடற்கல்வி), சுந்தரமூர்த்தி சர்மிளா (உடற்கல்வி),நாகலிங்கம் சோமசுந்தரராஜன் (கலை), பிருந்தா சிவகுரு (கலை), பரமாநந்தன் சுபத்திரா (நுண்கலை), சுதாகரன் தர்மினி( கலை), செந்தில்வேல் தமிழ்வாசன் (விஞ்ஞானம்), விஜயரத்னம் வசந்தன்(கலை), கணேசன் சிறிகாந்தா(கலை), கெங்காதரன் காஞ்சனா (கலை),செம்பலிங்கம் ஜெகன் (நுண்கலை),சண்முகம் நிருபராஜ் (நுண்கலை),கஜேந்திரபிரசாத் வசந்தினி (கலை), ரஜனிகாந்த் ரோகினி (நுண்கலை), சுசைப்பிள்ளை சுதர்ஜினி (நுண்கலை),அஜந்தன் பாஜினி(கலை),சிவகுமார் நிரஞ்சினி (நுண்கலை),சின்னையா சாந்திமலர் (நுண்கலை), நீலகண்டன் சசிக்குமார் (கலை),வேலாயுதம் வைகுந்தன் (கலை), மகாலிங்கம் சாந்த மேனன் (மருத்துவம்), அனுஜன் சுமித்ரா (விவசாயம்), கருப்பையா பிரபாகரன்( முகாமைத்துவம்),பாலசிங்கம் கஜலினி (நுண்கலை), அரியநாயகம் ரஞ்சிதமலர் (கலை), சிவக்கொழுந்து வினோதினி(கலை), சசிக்குமார் சிவதர்சினி(கலை), விமலேஸ்வரன் கலாவதி (கலை),சுபநந்தன் ஜசித்தா (கலை), ரோனு காந்தன் சுதாஜினி (கலை), விஜயகுமார் மதுரானந்தகி (கலை),கீத்தனந்த் விஜிதா (கலை), சுகந்தன் நிசாந்தி (கலை), விஸ்னு நந்தன் சுவேந்தினி (முகாமைத்துவம்), பாலசிங்கம் சுதாகரன் (கலை), அரவிந்தன் மைதிலி (கலை),காசிலிங்கம் றிகிந்தன் (உடற்கல்வி)

(அ-2-7)

# முன்னர் தமிழர்களின் குரலை செவிமடுக்காத அமெரிக்கா, இன்று தீர்மானத்தில் உறுதி -ஏன்?



### அமெரிக்காவின் நம்பகத்தை இலங்கை எப்படி இழந்தது?

இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா கொண்டுவந்துள்ள தீர்மானம் இலங்கை அரசாங்கத்தைக் கடும் நெருக்கடிக் குள் தள்ளிவிட்டுள்ளது. ஒரு பக்கத் தில் நட்புநாடுகளின் ஆதரவை உறு திப்படுத்தவும், இன்னொரு பக் கத் தில் எதிர்த்து நிற்கும் நாடுகளைச் சமாளித்து- அவற்றின் ஆதரவைப் பெறுவதற்கும் கடுமையான இராஜ தந்திர முயற்சிகளில் மகிந்த அரசு ஈடுபட்டுள்ளது. கொழும்பு, புது டெல்லி, ஜெனிவா போன்ற நகரங் களில் மட்டுமன்றி அதற்கு அப் பாலும் இந்த இராஜதந்திர யுத்தம் விரிந்து நிற்கிறது. வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஓய்வு ஒழிச் சலில்லாமல் தென்னமெரிக்கா, ஆபி ரிக்கா, மத்தியகிழக்கு, ஐரோப்பா என்று உலகெங்கும் பறந்து கொண் டிருக்கிறார். கடந்த ஒரு சில மாதங் களில் அவர் மேற்கொண்ட வெளி நாட்டுப் பயணங்களைப்போல வேறொருவரும் மேற்கொண்டிருக்க முடியாது. அந்த அளவுக்கு இலங்கை அரசுக்கும் இந்த விவகாரம் கடும் அழுத்தங்களைக் கொடுத்துள்ளது.

*இன்னொரு பக்கத்தில் சர்வதேச அளவில் மேற்கொள்ளப்பட்டுவரும் நெருக்கடிகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஆலயங்களில் வழி பாடுகளையும் அரசாங்கம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது.*

இவையெல்லாம் கிட்டத்தட்ட

## இப்போது காட்சி மாறுகிறது!

மூன்றாண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலையை நினைவூட்டுகின்றன. அப்போது தமிழர் தரப்பு போரை நிறுத்துவதற்கு முயற்சி செய்த துடன், வன்னியில் சிக்கியிருந்த தமிழர்களுக்கு ஆசிவேண்டி உல கெங்கும் ஆலய வழிபாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. அப்போது தமிழரின் இராஜதந்திரம் வெற்றி யைத்தரவில்லை. ஆலயங்களில் செய்த வழிபாடுகளும் கைகொடுக்க வில்லை. எல்லோராலும் கைவிடப் பட்ட நிலையில் 3 இலட்சம் மக்கள் அவலத்துக்குள் சிக்கி மறுஜென்மம் எடுத்தார்கள் என்றால், மிகை யில்லை. அப்போது தமிழர்கள் மேற்கொண்ட இராஜதந்திரத்தையும், அதேவழிபாட்டையும் இப்போது அர சாங்கத்தரப்பு கையில் எடுத்துள்ளது.

இப்போது காட்சி மாறியிருக் கிறது. முன்னர் தமிழர்களின் குரலை செவி மடுக்காத சர்வதேச சமூகம் இப்போது அரசின் வாக்குறுதிகளை நம்பமுடி யாது என்கிறது. உலக நாடுகளில் ஒரு பகுதி இப்போது இலங்கையைக் கை விட்டுவிடும் நிலை உருவாகியுள்ளது. இந்த நிலை ஏன் உருவானது-அமெரிக்கா எதற்காக இலங்கை மீது இத்தனை உறுதியோடு தீர்மானத்தைக் கொண்டு வருகிறது என்ற கேள்விகள் இன்னும் பலரிடம் இருக்கவே செய்கிறது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை கையளிக்கப்பட்டு இப் போது தான் இரண்டு, மூன்று மாதங்களா கின்றன. அதற்குள் எப்படிப் பரிந் துரைகள் அனைத்தையும் நிறை வேற்ற முடியும், எமக்கு கால அவகாசம் தாருங்கள் என்று இலங்கை கேட் டுள்ளது. ஒரு பக்கத்தில் இதை நியா யம் என்றுகூட சில நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. ஆனால், அமெரிக்கா



அதை ஏற்கத் தயாரில்லை. அது ஏன் என்பதை இப்போதுதான் விளங்கிக் கொள்ள முடிகிறது. அரசாங் கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக் கையை முழுமையாக ஏற்றுக் கொள் ளவும் இல்லை. அதனை முழுமை யாக நடைமுறைப்படுத்தவும் தயா ரில்லை என்பதே அமெரிக்காவின் இந்த அழுங்குப்பிடிக்கான காரணம்.

ஆணைக்குழுவின் அறிக்கை வெளி யான சில நாட்களின் பின்னர், அதை நடைமுறைப்படுத்துவதற்காக என்ன நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத் துள்ளது என்று கேள்வி எழுப்பிய போது, அமைச்சரவைப் பேச்சாளராக இருந்த *கெஹலிய ரம்புக்வெல*, "அது ஒன்றும் பைபிள் அல்ல வரிக்குவரி படித்து நடைமுறைப்படுத்துவதற்கு" என்று கூறியிருந்தார். அப்போது அர சாங்கம், இதனை முழுமையாக நடை முறைப்படுத்தாது என்ற உண்மை முதல் முறையாக வெளிச்சத்திற்கு வந்தது. அதைவிட நல்லிணக்க ஆணைக் குழு வின் அறிக்கையை நாடாளுமன் றத்தில் ஜனாதிபதி மகிந்தராஜ பக்சவே சமர்ப்பிப்பார் என்று முன் னதாக கூறப்பட்டது. ஆனால், கடை சியில் அதை அவர் நாடாளுமன்றத் தில் சமர்ப்பிக்காமல் ஒதுங்கிக் கொண் டார். அதற்கும் காரணம் உள்ளது.

அந்த அறிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தால், அதனை நிறைவேற்று வதாக வாக்குறுதி அளிக்கவேண்டும். அத்தகைய வாக்குறுதியை நாடாளு மன்றத்தில் கொடுக்க அவர் தயாராக இருக்கவில்லை. அறிக்கை கையளிக் கப்படுவதற்கு முன்னர் அதை நடை முறைப்படுத்துவோம் என்று துணிச் சலுடன் கூறியதுபோல, அறிக்கை வெளி யான பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத் திலும் ஜனாதிபதி கூறவில்லை என்ப தும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்து வதற்கான எந்தவொரு உருப்படியான செயற்திட்டத்தையும் இலங்கை கொண்டிருக்கவில்லை என்று அமெ ரிக்க தொடர்ச்சியாகக் கூறிவருகின் றது. இராஜதந்திர சந்திப்புகளின் மூலம் நன்றாக உறுதி செய்யப்பட்ட பின்னரே அமெரிக்கா இந்த முடிவுக்கு வந்துள்ளது. ஏற்கனவே மூன்று ஆண்டுகள் கொடுக்கப்பட்டுவிட் டது. இனிமேலும் இலங்கைக்கு கால அவகாசம் கொடுக்கமுடியாது என்று அமெரிக்கா முடிவு செய்துவிட்டது.

இதைவிட நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கும் அர சாங்கம் தயாரில்லை. இதனை அமெரிக்காவோ அல்லது வேறு எந்த மேற்குலக நாடுகளோ சொல்ல வில்லை; அரசாங்கத் தரப்புதான் சொல்லியுள்ளது.

அமைச்சர் *நிமால் சிறிபால டி சில்வா* கடந்த வாரம் இரண்டு விடயங்களை வெவ்வேறு சந்தர்ப்பங் களில் கூறியிருந்தார். "போர் வெற் றியைப் பெற்றுத்தந்த படையினரை ஒருபோதும் நாம் காட்டிக் கொடுக் கவோ, பலிகொடுக்கவோ மாட் டோம்" என்பது முதலாவது விடயம்.

இராணுவ விசாரணை என்பது தவறுகள் இடம்பெற்றதா என்பதைக் கண்டறியவே தவிர தண்டிப்பதற் காகாக அல்ல என்றும் அவர் கூறியி ருந்தார்.

இரண்டாவது, "நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் அனைத்தையும் நடைமுறைப்படுத்த முடியாது; பொருத்தமானவற்றை மட்டும்-அதுவும், நன்கு ஆராய்ந்த பின்னர்தான் நடைமுறைப்படுத்தப் படும்" என்பது.

இதைக் கூறியது. ஒன்றும் கெஹ லிய ரம்புக்வெல அல்ல. மஹிந்த அரசாங்கத்தில் இப்போதுள்ள மிக மூத்த தலைவர்களில் ஒருவரான நிமால் சிறபால டி சில்வா தான். இவர் விடுதலைப்புலிளுடன் பேச்சுக் களில் ஈடுபட்டவர். ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் பங்கேற்ற குழுவிலும் இடம்பெற் றவர். ராஜபக்ச குடும்பத்துக்கு அடுத்த நிலையில் அரசின் முடிவு களை தீர்மானிக்கும் அதிகாரம் பெற்ற ஒரு சிலரில் அவரும் ஒருவர். அப் படிப்பட்ட ஒருவரின் கருத்தை எந்த வகையிலும் புறக்கணிக்க முடியாது. அதாவது நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையின் அடிப்படை யிலான பரிந்துரைகளை அரசாங்கம் முழுமையாக நடை முறைப்படுத் தவோ, மீறல்களில் ஈடுபட்ட படை யினரைத் தண்டிக்கவோ அவர்கள் மீதான விசாரணைகளை மேற் கொள்ளவோ அரசாங்கம் தாயாராக இல்லை. இதனை நிமால் சிறிபால டி சில்வாவின் கருத்துகள் உறுதி செய்கின்றன. இங்கே தான் அமெ ரிக்கா கொண்டுள்ள சந்தேகம் புரி கிறது.

அரசாங்கம் நல்லிணக்க ஆணைக் குழுவை வைத்து உலகத்தை நம்ப வைத்தது.

ஆனால், அதே ஆணைக்குழுவை இப்போது முழுமையாக ஏற்க முடியாது என்கிறது.

### நியூஸ் போர்ட்

இந்த நம்பகமற்ற நிலைதான் சர்வதேச சமூகத்தின் ஆதரவை அரசாங்கம் இழப்பதற்கும்-இன் றைய நெருக்கடிக்கும் முக்கிய காரணமாகியுள்ளது.

போர் முடிவுக்கு வந்தபின்னர் அரசாங்கம் எது தனக்குப் பாது காப்பானது என்று கருதியிருந்தோ




அதுவே இப்போது ஆபத்துக்குள் தள்ளிவிட்டுள்ளது. இந்த நெருக் கடியல் இருந்து அரசாங்கம் மீள் வதற்கு உள்ள ஒரேவழி சர்வதேச சமூகத்துடன் ஒன்றித்துப் போவது தான்.

# சனல் 4 காட்டும் கொடூரப் பதிவுகள்



கல்லம் மெக்ரே

உலகத்தின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்பி இருக்கிறது சனல் 4 தொலைக்காட்சி. நெஞ்சில் ஈரம் உள்ளவர்களைக் கண்ணீர் வடிக்கவும், இரத்தம் சூடானவர்களைக் கொதிக்க வைக்கும் அளவுக்கும் ஈழத்துக் காட்சிகளை அந்தத் தொலைக்காட்சி அம்பலப்படுத்தி உள்ளது. இப்போது ஈழத்தில் நடந்த போர்க்குற்றங்களையும் மனித உரிமை மீறல்களையும் ஐக்கிய நாடுகள்சபை விவாதித்துக்கொண்டு இருக்கிறது. ஆனால் இந்த நேரத்திலும் ஈழத்தில் நடந்தது போர்க் குற்றம் தான் என்பதை ஒப்புக் கொள்வதற்குக் கூட பல நாடுகள் யோசிக்கின்றன என்பதுதான் வேதனை.

வியட்நாம் போர் தாக்குதலில் ஒரு சிறுமி பதறியபடி நிர்வாணமாய் ஓடி வந்த புகைப்படம் வெளியானதற்கே இந்த உலகம் பதை பதைத்து துடித்தெழுந்தது. ஆனால், ஈழத் தமிழர்கள் கொத்துக் கொத்தாய் நிர்வாணக் குவியலாய் இலட்சக்கணக்கில் செத்து அழிந்த போதும் கூட ஒரு



புகைப்படத்துக்காக கண்ணீர் வடித்த உலகச் சமூகம் அமைதியாகவே இருக்கின்றது.

இலங்கையின் இனப்படுகொலைகளுக்கு ஆயிரமாயிரம் சாட்சியங்கள் இருந்தும் தீவிரவாதத்துக்கு எதிரான போர் என்று சாயம் பூசியதே தவிர இது மனிதத்துக்கு எதிரான போர். தமிழர்களை அழிக்கும் போர் என்று சிறு முணுமுணுப்பும் எழவில்லை. மூன்று ஆண்டுகளுக்கு முன் நடந்த இலங்கையின் இனப்படுகொலையும் ஈழத் தமிழர்கள் வெந்து துடித்து அனுபவித்த ரணங்களையும் சொற்களால் வர்ணித்துவிட முடியாது.

**உயிர் கொடுத்த சனல் 4**

இறுதிக்கட்டப் போரின் முடிவுக்குப் பின்னர் உலகச் சமூகத்துக்கு பொட்டில் அடித்தது போல் சனல் 4 தொலைக்காட்சி சில காட்சிகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது. இலங்கையின் கொலைக்களங்கள் என்ற காணொளியை வெளியிட்டது. இலங்கைக்கு எதிரான இந்தக் காணொளியைப் பார்த்து இங்கிலாந்து நாடாளுமன்றம் தொடங்கி நோர்வே, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியாவின் செனட் வரை அதிர்ந்தன. அந்தக் காணொளி திரையிடப்படாத நாடே இல்லை என்ற அளவுக்கு உலகெங்கும் அதிர்ச்சியை உருவாக்கியது. இப்போது நீதிக்காகப் போராடும் ஈழத் தமிழர்களுக்கு பக்கபலமாக இருப்பது இந்தக் காணொளிக் காட்சிகள் தான். இப்போது மீண்டும் இலங்கையின் கொலைக்களங்கள்- தண்டிக்கப்படாத குற்றங்கள் என்ற பெயரில் புதிய காணொளியை சனல் 4 கடந்த புதன்கிழமை வெளியிட்டது.

**அதிர வைத்த ஆவணப்படம்**

கடந்த மார்ச் 11 அன்று ஓர் ஆவணப்படம் மனித உரிமைத் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. இலங்கை அரசு பாதுகாப்பான பகுதி என்று அறிவித்த பகுதிகளில் இருந்த அப்பாவி மக்கள் மீது செல் குண்டு தாக்குதல்கள் நடத்தியது. முதல், பெண்புலிகள் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாகி இறந்த பின்னரும் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானது வரை அதில் இருந்தது. இதையே சனல் 4 வெளியிட்ட நேரத்தில் அது பொய்யானது, ஜோடிக்கப்பட்டது என்று இலங்கை அரசு சொன்னது. ஆனால், இப்போது காட்டப்பட்ட ஆவணப்பட்த்தில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் யார் என்பதும் தெளிவாக அடையாளம் காணும் அளவுக்கு இருக்கிறது.

பாதுகாப்பான வலையம் என்று சொல்லப்பட்ட பதுங்கு குழிகள் ஐ.நா. உதவியுடன் அப்பாவி மக்கள் பாதுகாப்புக்காக இலங்கை அரசால் அமைக்கப்பட்டன. அதன் மீதே குண்டுகள் வீசித் தாக்கியுள்ளார்கள். பாதுகாப்பு வலையத்துக்கு வந்த மக்களுக்கு உணவு தரப்படவில்லை. காயப்பட்டவர்கள் மருந்து இல்லாமல் இறந்து போயிருக்கிறார்கள். புதுமாத்தளன் மருத்துவமனை மீது செல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதற்கான அத்தனை ஆதாரங்களும் இந்த ஆவணப்படத்தில் இருக்கின்றன.

**புதன்கிழமை காணொளி**

"ஐயோ இந்தப் பச்சப் பிள்ளையைக் காப்பாத்த முடியலையே'' என்ற மரணத்தை விழி முன்னே நிறுத்தும் தாயின் கதறலின் ஊடே சனல் 4 தொலைக்காட்சியின் புதிய காணொளி கடந்த புதன்கிழமை வெளியானது. சுமார் 53.12 நிமிடங்கள் ஓடும் இந்தக் காணொளிக் காட்சிகளை கல்லம் மெக்ரே இயக்கி உள்ளார்.

"உலக நாடுகள் பலவற்றில் காட்சிப்படுத்தப்பட்டும் உலக சமுதாயமும் ஐக்கிய நாடுகள் சபையும் இலங்கைக்குத் தண்டனை அளிப்பதில் இருந்து ஒதுங்கிக் கொண்டன. இத் தங்கயை தருணத்தில் தான் இந்தக் காட்சிகளை வெளியிடுகிறோம்'' என்ற விளக்கத்துடன் தொடர்கிறார் ஜான் ஸ்னோ.


''சனல் 4 வெளியிட்ட இலங்கைக் கொலைக்களங்கள் வீடியோ



வைப் பார்த்துவிட்டு என் 28 வயது மகன் கதறி அழுதான். இந்தக் கொடூரத்தைக் கண்டுவிட்டு நான் சிங்களவன் இலங்கை பிரஜை என்று சொல்லிக் கொள்ளவே வெட்கமாக இருக்கிறது என்றான்" என்று இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சொல்வது அடுத்து வருகிறது.

**கத்தினால் இராணுவம் சுடும்**

2009 ஜனவரி 23 அன்று பொது மக்களை காப்பதற்காகஐ.நா சார்பில் பதுங்க குழிகள் அமைக்கப்பட்டன. 'பாதுகாப்பு வலையம்' என்று இலங்கை அரசால் முதலில் சொல்லப்பட்ட உடையார்கட்டு பகுதி அருகே பீட்டர் மெக்கே என்ற ஐ.நா. பணியாளர் மேற்பார்வையில் இது அமைக்கப்பட்டது. ஆனால், அடுத்த இரண்டு நாட்களில் ஐ.நாவின் பதுங்கு குழிகள் மீதே எறிகணைகள் விழுந்திட இந்த தகவலை சரத் பொன்சேகா, கோத்தபாய ஆகியோரிடம் பீட்டர் மெக்கே சொல்கிறார். உடனே



பாதுகாப்பு வலையங்களுக்கு கொஞ்சம் தள்ளி எறிகணைகளை வீசியிருக்கிறார்கள்.

பாதுகாப்பு வலையத்திலிருந்து காயங்களுடன் தப்பி வந்த ஆணொருவர் நாங்கள் பட்ட காயங்களுக்கு மருந்து இல்லாமல் கத்திக் கொண்டே கண் சொருகி விழுந்து விடுவோம்.அது தான் எங்களுக்கு வலி நிவாரணி.


**பிரபாகரனின் இளைய மகன் படுகொலை**

மே 17 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகனின் 12 வயது இளையமகன் பாலச்சந்திரன் படுகொலை செய்யப்பட்டது அழுத்தமாக இந்த காணொளியில் பதிவாகியுள்ளது. பாலச்சந்திரனின் மெய்க்காவலர்கள் ஐந்து பேரும் கண்கள் கட்டப்பட்டு கைகள் முதுகின் பின் கட்டப்பட்ட நிர்வாண நிலையில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். பாலச்சந்திரன் உடம்பில் 2 அடி முதல் 3 அடி தூரத்தில் இருந்து சுடப்பட்டதை உறுதிப்பத்தும் வகையில் ஐந்து குண்டுகள் பாய்ந்துள்ளன. இவர் பிரபாகரனின் மகன் என்பதாலேயே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார் என்று சனல் 4 குறிப்பிடுகிறது.

தலைப்பகுதி மோசமாக சிதைக்கப்பட்டு உடலில் சேறு பூசி உடைகளை அகற்றி காட்டப்படுகிறது. புலிகளின் தலைவர் பிரபாகரனின் உடல். இது பிரபாகரன் தான் என்று கருணா உறுதிப்படுத்தியதாக இராணுவம் சொல்கிறது. ஆனால் இதுவரை மருத்துவ சான்றிதழை இந்தியாவுக்கு தராமல் மறைக்கிறது இலங்கை அரசு. சிங்கள இராணுவத்தினரால் காட்டப்பட்ட அதே காட்சிகள் சனல் 4 தொலைக்காட்சியிலும் காட்டப்பட்டன. ஆனால், இவை உண்மையில் பிரபாகரன் தானா என்பதை உறுதிப்படுத்தும் வகையில் எந்த தகவலும் சொல்லப்படவில்லை.

**ஊடகவியலாளர்களுக்கு சுதந்திரம் இல்லை**

இலங்கையில் போர் நடைபெற்ற போதும் அதன் பின்னரும்



ஜான் ஸ்னோ

ஊடகவியலாளர்கள் நிலை குறித்து இலங்கையின் சுதந்திர ஊடகவியலாளர் பாஷன அபயவர்த்தனே பேசியிருக்கிறார். ''இலங்கையில் ஊடகவியலாளர் யாராக இருந்தாலும் அவர் கொல்லப்படவோ அல்லது நாட்டைவிட்டு விரட்டப்படவோ வேண்டும் என்ற நிலையே இப்போதும் தொடர்கிறது. இதுவரை 60 பத்திரிகையாளர்கள் நாட்டை விட்டு விரட்டப்பட்டுள்ளனர். 2005 ஆம் ஆண்டு முதல் இதுவரை சிங்களவர்கள் தமிழர்கள் என்று 26 பத்திரிக்கயளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்'' என்று சொல்கிறார்.

இதனால் ஆவணப்படுத்தப்பட்ட அனைத்து காட்சிகளும் படங்களும் தடையவியல் நிபுணர் டென்ரிக்ஃபவுன்ட்ர் மூலமாக ஆராயப்பட்டுள்ளன. ''இந்த காட்சிகள் அனைத்தும் உண்மை. இதில் சந்தேகத்திற்கு இடமேயில்லை. சோடிக்கப்பட்ட காட்சிகளோ பொய்யானவையோ அல்ல. இராணுவத்தினர் எடுத்த காட்சிகள் தான் இவை. பிரபாகரனின் மகன் படுகொலை செய்யப்பட்டதில் அவ ருக்கு உடலளவில் எந்த கொடு மைகள் செய்யப்பட்டதற்கும் ஆதாரங்கள் இல்லாவிட்டாலும் அவர் மனதளவில் கொடுமைப்படுத்தப்பட்டிருப்பார். என்று சந்தேகிக்க தோன்றுகிறது'' என்கிறார். இசைப்பிரியாவை சீரழித்த முந்தைய காட்சிகள், பெண் போராளி கழுத்தில் கயிறை கட்டி

**ஜூனியர் விகடன்**

இழுத்து செல்வது உயிரற்ற போராளிகளை குப்பைகளை போல் ஆடைகளை அகற்றி டிராக்டரில் தூக்கி வீசும் சிங்களப் படை உயிரைக் காத்துக் கொள்ள கடலிலும் காடுகளிலும் தஞ்சம் புகுந்து தப்பிக்கும் மக்கள் என்று இரத்த சாட்சிகளாய் சிவக்கிறது திரை.

போர் முடிந்ததும் சிங்களப் படையின் கொண்டாட்டங்கள், இந்திய அரசின் சார்பாக சிவசங்கர் மேனன் மஹிந்த ராஜபக்ஷவுடன் நடத்திய சந்திப்புக்கள் போன்ற காட்சிகள் வருகின்றன. 2013 கொமன் வெல்த் கூட்டம் இலங்கையில் நடக்க இருக்கும் சமயத்தில் "40 ஆயிரம் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதை ஐ.நாவும் உலகச் சமூகமும் மறந்து விட வேண்டாம்'' என்று குற்றவாளிகளை அடையாளம் காட்டிய நீதியுடன் இருள்கிறது காட்சிகள். என்ன செய்யப்போகிறது இந்தியா?

**மகா.தமிழ்ப் பிரபாகரன்**

# ஆடம்பர வாழ்க்கையை தவிர்த்து புத்திசாலித்தனமாக வாழ்வோம்

## மூன்று பேருக்கு 7500 ரூபா போதும் என்கிறார் பந்துல

(கொழும்பு)

மூன்று பேரினைக் கொண்ட குடும்ப மொன்று வாழ்வதற்கு மாதாந்தம் ரூபாய் 7 ஆயிரத்து 500 வருமானம் போதுமானதென கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஹோமாகம, முல்லேகமவில் மகப்பேற்று மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையமொன்றை நேற்று முன்தினம் திங்கட்கிழமை திறந்து வைத்து உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் வரவு- செலவுத்திட்ட வரிமூலமான வருமானமாக 1000 பில்லியன் ரூபாவினை மாத்திரமே பெறுகிறது. இது உள்ளூர் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு அரிதாகவே இருக்கும். ஆகையினால் வெளிநாட்டு கடனுதவிகளை நாட வேண்டிய நிர்ப்பந்தத்தில் அரசாங்கம் இருக்கிறது. நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி, விமானநிலையம், வைத்தியசாலை, துறைமுக அபிவிருத்தி போன்றவற்றுக்கு இந்த வெளிநாட்டு கடனுதவிகள் பெரிதும் உதவுகின்றன. வெளிநாட்டு கடனுதவிகளை பெறும் வரையில் உள்நாட்டு அபிவிருத்திகள் சாத்தியமாகாது.

விவசாய அமைப்புக்கள் நெல் விலையை அதிகரிக்கக் கோருகின்றன. நெல் கொள்வனவு விலையினை 5 நிமிடங்களின் அமைச்சரவை தீர்மானத்தினை பெற்று 100 ரூபாயாக அதிகரிப்பது இலகுவானது. ஆனால் நெல் கொள்வனவு விலையினை அதிகரித்தால் அரிசியின் விலை 200 ரூபாவினை தாண்டிவிடும். நிர்வாக திட்டமிடல் என்பது போஸ்டர் ஒட்டுவது போல் இலகுவானதல்ல. அரிசியினால் பல அரசாங்கங்கள் மாறிய வரலாறும் உண்டு.

பொருட்களின் விலையதிகரிப்புக்கு ஏற்ப சம்பளமும் அதிகரித்து வந்துள்ளது. அன்று அரச உத்தியோகத்தரின் சம்பளம் 80 ரூபாவாக இருந்தது. ஆனால் இப்போது அது பல மடங்காக அதிகரித்திருக்கிறது. இது பொருட்களின் விலையேற்றத்தினால் ஏற்படுத்தப்பட்ட மாறுதல் என்பதை உணர வேண்டும்.

கல்வி திணைக்களத்தினால் பல பாடசாலைகளில் மாணவ விடுதிகள் இயங்குகின்றன. இங்குள்ள மாணவர்களுக்கு மூன்று வேளை உணவு கொடுத்து இரண்டு வேளை தேநீரும் கொடுக்கப்படுகின்றது. இதற்கு ஒரு மாணவர்களுக்கு செலவாவது வெறும் 2 ஆயிரத்து 500 ரூபாய் மாத்திரமேயாகும்.

இதனடிப்படையில் மூன்று அங்கத்துவர்களைக் கொண்ட குடும்பமொன்று புத்திசாலித்தனமாக வாழ்வதற்கு 7 ஆயிரத்து 500 ரூபாய் போதுமானதாக இருக்கும்.


ஆனால் பெரும்பாலானவர்கள் ஆடம்பரங்களை விரும்புகின்றார். உணவு விடுதிகளில் சாப்பிடுவதையும் அநாவசியமாக செல்வு செய்வதிலேயுமே பலர் காலம் தள்ளுகின்றனர். அண்மையில் ஒரு நட்சத்திர விடுதி விருந்துபசாரத்திற்கு நான் சென்றிருந்தேன். அங்கு ஒருவருக்கான உணவு 6 ஆயிரத்து 500 ரூபாவாக இருந்தது. அதனால் இது போன்ற அநாவசிய ஆடம்பர செலவுகளை நாம் தவிர்ப்பது சிறந்தது.

தற்போது இலங்கையின் சனத்தொகையினைவிட கைத்தொலைபேசிகள் அதிகமான இருக்கிறது. அதேபோல் ஆடம்பரவாகனங்களும் தாராளமாக இருக்கின்றன. இதனால்தான் வாழ்க்கைசெலவு அதிகம் என பலர் கூச்சலிடுகின்றனர். ஆகையினால் ஆடம்பரங்களையும் படோபகாரங்களையும் தவிர்த்து புத்திசாலித்தனமாக வாழ்ந்தால் நாடும் வளம் பெறும் நாமுழ் வளம் பெறுவோம் என குறிப்பிட்டார். (அ-7-2)

## மௌன ஊர்வலம்

தேவை நாடும் மகளிர் அமைப்பும் மனித உரிமைகள் இல்லமும் இணைந்து சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்களுக்கு எதிரான வன்முறையைக் குறைக்கும் முகமாக மௌன ஊர்வலம் ஒன்றை நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நல்லூர் முருகன் கோவில் முன்றலில் இருந்து யாழ். கச்சேரி வரை நடத்தவுள்ளது.

இதில் தற்போது யாழ். மாவட்டத்தில் பெண்கள் சிறுமிகள் மீதான வன்முறைகள் அதிகரித்து செல்கின்ற காரணத்தினால் குற்றவாளிகளுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்றும் சட்டத்தை வலுவான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதையும் வலியுறுத்தி யாழ். அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப் படவுள்ளதாகவும் அமைப்பின் பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (அ)



யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் 2010 ஆம், 2011 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட சைவசமய எழுத்துப் பரீட்சையில் கிளிநொச்சி மகா வித்தியாலய தரம் 12, தரம் 13 வகுப்பு மாணவிகள் பதக்கங்களைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுடன் பொறுப்பாசிரியர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## பிரபல சிங்கள நடிகர் அன்டன் ஜூட் காலமானார்



(கொழும்பு)

பிரபல சிங்கள நடிகரும் பாடகருமான அன்டன் ஜூட் நேற்று முன்தினம் இரவு மாரடைப்பினால் காலமானார். சிங்கள சின்னத்திரை, வெள்ளித்திரைகளிலும் மேடை நிகழ்வுகளிலும் தன்னுடைய திறமையினால் மக்களை பெரிதும் கவர்ந்திருந்த அன்டர் ஜூட் இறக்கும் போது அவருக்கு வயது 51.

ஏராளமான சிங்கள திரைப்படங்களிலும் தொலைக்காட்சி நாடகங்களிலும் மேடை நாடகங்களிலும் பல்வேறுபட்ட பாத்திரங்களை ஏற்று நடித்துவந்த அன்டன் ஜூட் சிறந்ததொரு பாடகருமா்வார். (அ-7-2)

## தமிழர்களுக்கு சம உரிமை வழங்க இலங்கையை நிர்ப்பந்திக்க வேண்டும்

### இலங்கைத் தமிழ் அமைப்புக்கள் வலியுறுத்து

தமிழர்களுக்கு சம உரிமை வழங்க இலங்கை அரசை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை மாநாடு நிர்ப்பந்திக்க வேண்டும் என்று இலங்கை தமிழ் அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.

இறுதிக்கட்ட போரின் போது நடந்த மனித உரிமை மீறல்கள் பற்றி விசாரணை நடத்தவும். இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் சமரச ஆணையத்தின் பரிந்துரைகள் மோசடியானது என்றும் சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் நோக்கு கொண்டது என்றும் அவை விமர்சித்துள்ளன. இதன்மூலம் தனது பொறுப்பை தட்டிக் கழிக்கவும் காலதாமப்படுத்தவுமே இலங்கை அரசு முன்னின்று வருவதாக அந்த அமைப்புகள் கூறியுள்ளன.

மேலும் இலங்கையின் இறுதிக்கட்ட போர் குறித்த ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கை யில் உள்ள பரிந்துரைகளை அமுல்படுத்த ஜெனீவா மாநாடு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவ்அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.

கடந்த 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற போரின் போது சர்வதேச சமூகம் அமைதி காத்ததைப் போன்று தற்போதும் இருக்குமானால், அது இலங்கையில் எஞ்சியிருக்கும் தமிழ் மக்களையும் அழித்தொழிப்பதில் தான் முடியும் என்று இலங்கை தமிழ் அமைப்புக்கள் வருத்தத்துடன் தெரிவித்துள்ளன. இந் நிலையில் ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைக்குழுவின் இறுதிக்கட்ட அமர்வு தொடங்கியுள்ளது. இதில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் மீதான வாக்குப்பதிவு நடைபெற இன்னும் சில நாட்களே உள்ளன என்பதால் அமெரிக்க தீர்மானத்திற்கு ஆதரவளிக்கும் நாடுகளின் எண்ணிக்கை பெரும்பான்மையானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-2)


நெஞ்சை நெருடும் 31 ஆம் நாள் நினைவலைகள்

அமரர் செல்வி அருள்நிதி இராமலிங்கம்(பொன்னப்பா)



தாயின் மடியில் தவப் புதல்வியாக 29.06.1979

ஆண்டவன் அடியில் அமரராக 20.08.2012

நேற்றுவரை எம்முடன் வீற்றிருந்தீர்
ஈற்றுவரை வருவீர் என இருந்தோம்
முப்பத்தொரு நாட்கள் ஆனதம்மா
ஆறவில்லை எம் துயரம்
அன்பு மொழி பேசி அரவணைத்து
பண்புடனே பாரினில் நிலைக்க வைத்து
பாதி வழியில் எமை பரிதவிக்க விட்டு
பரமசிவன் பாதம் சென்றதேனோ
கேதீச்சரம் செல்ல வாகனமாய்
வந்த கூற்றன் உன்னை அழைத்து
சென்றதேனோ இதையும் தாங்க
எமக்கேது இதயம் உயிருடன் வாழும் வரை...

செங்குந்தர் வீதி,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

(சி-6115)


## ஜெனீவா அமர்வில் த.தே.கூட்டமைப்பு?

### சிங்கள நாளேடு தகவல்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அமர்வுகளில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட நாடர்ளுமன்ற உறுப்பினர் ஒருவர் இவ்வாறு ஜெனீவா சென்றுள்ளார் என சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை ஆணையாளர் நவநீதம்பிள்ளையை குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

மனித உரிமை பேரவை அமர்வுகளில் கலந்து கொண்டுள்ள உருகுவே நாட்டு பிரதிநிதியுடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக சிங்கள பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (அ-7-2)

# வடக்கு மாகாணத்தில் வசதிகளற்ற சிறுவர் இல்லங்களை மூட நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் உரிய வசதிகளை உள்ளடக்காத நிலையில் செயற் பட்டுக் கொண்டிருக்கும் சிறுவர் இல் லங்கள் மூடப்படவுள்ளன. இந்த வகை யில் 26 சிறுவர் இல்லங்கள் மூடப்பட லாம் என வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு திணைக்களம் அறிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் 70 சிறுவர் இல்லங்கள் செயற்படுகின்றன். இதில் 40 சிறுவர் இல்லங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன. 30 சிறுவர் இல்லங்கள் பதிவு செய்யப்படாமல் செயற்படுகின்றன. இவற்றின் செயற்பாடுகள் திணைக்களத்தினால் கண்காணிக்கப் பட்டு வருகின்றன. பதிவு செய்யப்படா மல் செயற்படும் சிறுவர் இல்லங்க ளில் அதிகளவானவை வவுனியா மாவட்டத் தில் 15 இல்லங்களும் யாழ். மாவட்டத் தில் 9 சிறுவர் இல்லங்களும் கிளி நொச்சி மாவட்டத்தில் 3 சிறுவர் இல் லங்களும் முல்லைத்தீவு மாவட்டத் தில் 2 சிறுவர் இல்லங்களும் மன்னா ரில் ஒன்றும் இந்த வகையில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

பதிவு செய்யப்படாத சிறுவர் இல் லங்களின் செயற்பாடுகள் நன்னட த்தை திணைக்கள அதிகாரிகளின் தீவிர கண்காணிப்புக்கு உள்ளாக்கப் பட்டுள்ளன.

பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லங்கள் சிறுவர்களுக்கான உரிய வசதிகள் மற் றும் வள நிலைகள் உள்ளடக்கப்படா தவிடத்து உரிய நடவடிக்கைக்கு உள் ளாக்கப்பட்டு அவை மூடப்படுவதுடன் அங்கு தங்கியிருக்கும் சிறுவர்களுக்கு பொருத்தமான வசதிகளை திணைக் களம் மேற் கொள்ளும்.

மேலும் பொருத்தமான வசதிகள் மற்றும் வள நிலையில் செயற்படாத சிறுவர் இல்லங்களில் 26 சிறுவர் இல் லங்கள் உரிய நிலையில் வசதிகள் இல்லை என்ற வகையில் மூடப்பட லாம். இந்த வகையில் 7 சிறுவர் இல் லங்கள் மூடப்பட்டுள்ளன.

வசதிகள் வள நிலைகள் பொருத் தமான முறையில் இல்லை என்ற வகை யில் கண்காணிப்புக்கு உள்ளாக் கப்பட்டு வந்த 33 சிறுவர் இல்லங்க ளில் 26 இல்லங்கள் கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட்டு அவற்றை மேல் நிலைப்படுத்துவதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அவை உரிய நிலைக்கு மேல் நிலைப்படுத்தப்படாதவிடத்து அவற்றை மூடுவதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்.

இவ்வாறு மூடப்படவேண்டிய நிலையில் வவுனியா மாவட்டத்தில் 12 இல்லங்களும் யாழ்ப்பாண மாவட்டத் தில் 11 இல்லங்களும் மன்னார் மாவட் டத்தில் 4 இல்லங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 3 இல்லங்களும் முல் லைத்தீவில் ஒரு இல்லமும் உள்ளன. இச் சிறுவர் இல்லங்களில் பெற்றோரை இழந்த மற்றும் யுத்த நடவடிக்கை களினால் பாதிக்கப் பட்ட சிறுவர்களே தங்கியுள்ளனர்.

இவர்கள் பாதிப்புக்குள்ளாகாத வகையில் இயல்பு நிலையிலும் மேல திக வசதிகளுடனும் வளர்க்கப்பட வேண் டியவர்கள் அவர்களுக்கு உரிய வசதி கள் வழங்கப்பட வேண்டும் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது. (அ-2-7)

# வடக்கின் பொருளாதார நெருக்கடி காசநோய் வீதத்தை அதிகரிக்கும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் காசநோய்த்தாக் கம் இருமடங்காக அதிகரிப்பதற்கான சந்தர்ப்பம் உள்ளதாக காசநோய் வைத் திய கட்டுப்பாட்டு அதிகாரி ஜமுனா னந்தா தெரிவித்தார்.

எதிர்வரும் 24 ஆம் திகதி உலக காசநோய் தினம் அனுஷ்டிக்கப்பட வுள்ள நிலையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது வடமாகாணத்தில் காணப் படும் காசநோய் நோயாளர்களின் அளவினை விட எதிர்வரும் காலங்க ளில் இத்தொகை இருமடங்காக அதி கரிப்பதற்கான சந்தர்ப்பங்கள் நிறை யவே உள்ளன.

சென்ற வருடம் இந்நோயினால் 345 பேர் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றி ருந்தனர்.

இதில் 91 வீதமானனோர் சிகிச்சை யில் பெற்றுச் சென்றுள்ளனர்.

எனினும் வடமாகாணத்தில் தற் போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக் கடி காரணமாக இவ் நோயாளிகளின் எண்ணிக்கை துரிதமாக அதிகரிக்கக் கூடிய நிலைமைகள் ஏற்படுத்தப்பட் டுள்ளன.

இவ்நோயாளர்களை பாதுகாப்பதற் கும் அவர்களினை விடுவிப்பதற்கும் வைத்தியசாலை அரச ஊழியர்கள் அனைவரும் முன்வரவேண்டும்.

வடமாகாண சபைக்கு கீழ் இயங் கும் வைத்தியசாலைகளில் உள்ள சில உத்தியோகத்தர்கள் ஆய்வுகூட தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் சளிப் பரி சோதனையில் பின்னடிப்புச் செய்கின் றமை வருத்தத்திற்குரியதாகும்.

இச்சிகிச்சை சிறப்பாக நடத்திச் செல் வதற்கு சில இடங்களில் உள்ள வைத் திய சாலைகளில் அடிப்படை வசதிகள் குறைவாக காணப்படுகின்றன.

குறிப்பாக மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழில் சில பிர தேசங்களிலும் இவ் அடிப்படை வசதி கள் குறைவாகவே காணப்படுகின்றன.

உலகில் காசநோயால் கடந்த வரு டம் மட்டும் 1.4 மில்லியன் மக்கள் இறந்துள்ளனர். காசநோய் தினத் தினை முன்னிட்டு ஐக்கிய நாடுகளின் செயலாளர் விடுத்துள்ள அறிக் கையில்,

இந்நோய்க்கான அறிகுறிகள் தென்படும்போது சிகிச்சை பெற்றுக் கொள்ளவேண்டும் என குறிப்பிட் டுள்ளார்.

இவ்வருடத்திற்கான நோய் வாசக மாக "என் வாழ்நாளில் காச நோயினை இல்லாது செய்வோம்" என்பதாகும்.

அதற்கிணங்க ஒவ்வொருவரும் காசநோய் அறிகுறி ஏற்படும் பட்சத்தில் சிகிச்சை பெற்றுக்கொள்ளல் அவசிய மாகும் என அவர் தெரிவித்தார். (அ-4)

## 2012 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டங்கள்


(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையால் நெல்சிப் திட்டத்தின் கீழும் சபைநிதி மூலமும் இவ் ஆண்டுக்கான வேலைத்திட்டங்கள் 3.99 மில்லியன் ரூபாய் செலவில் மக்கள் பங்களிப்பு டன் புனரமைப்புச் செயற்படவுள்ளன.

இதன் போது சபை நிதி மூலம் கட்டைவேலி உப அலுவலகத்திற்கு எல்லைச்சுவர் அமைத்தல், நெல்லி யடி பொது நூலகம் திருத்தம், கோவிற் சந்தை இறைச்சிக்கடை திருத்தம், உடுப்பிட்டி உப அலுவலக கட்டட திருத் தமும் நீர் விநியோகமும், கொல்களம் அமைத்தல் போன்ற வேலைத்திட்டங் களும் நெல்சிப் திட்டத்தின் கீழ் மத் தொனி பொதுச்சந்தை வீதியும் புனர மைப்புச் செய்யப்படவுள்ளதாக வடம ராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். (அ-7)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### நமக்குத் தேவையான மூன்று



உன் உடலில் ஏற்பட்டுள்ள கறையைப் பற்றிக் கவலைப்படாதே. இறைவன் என்னும் கருணைக் கடலில் மூழ்கி எழுந்தால் அது இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும்.

உங்களிடம் அன்பு இருந்தால் ஆகாத செயல் என்று எதுவுமில்லை. நீங்கள் தன்னலத்தை துறந்துவிட்டால் உங்களை எதிர்க்கும் சக்தி ஏதுமில்லை.

நீங்கள் கடவுளின் குழந்தைகள். அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள். அதனால் புனிதமும் பூரணத்துவமும் உங்களிடம் நிறைந்திருக்கிறது.

அன்பு ஒரு முதலீடு. எவ்வளவு போட்டாலும் அது மீண்டும் நம்மை வந்தடைந்துவிடும்.

ஒட்டகம் முள் செடியைச் சாப்பிடும் போது வாயிலிருந்து இரத்தம் சொட்டும். இருந்தாலும் தின்பதை நிறுத்துவதில்லை. அது போல உலகத்தார் எத்தனையோ துன்பங்களுக்கு ஆளானாலும் உலகப்பற்றை அவர்கள் விடுவதில்லை.

அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறொன்றும் நமக்கும் தேவையில்லை. அன்பு தான் வாழ்க்கையின் அடிப்படை ஆதாரம்.

புரிந்து கொள்ளாதபோதும்; பொறாமைப்படும் போதும் மனிதன் மற்றவனை முட்டாளாகக் கருதி விடுகிறான். – *சோக்கிரட்டிஸ்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வதா? தேவலோகத்தில் அவசர மாநாடு!

வன்னியில் நடந்த போரின்போது, தேவ லோகம் அமைதியாக இருந்தமை மிகவும் வேதனைக்குரியது. வன்னிப் போரின்போது பூலோகத்தில் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் மௌனம் காத்தது போல தேவலோக மும் அமைதி காத்தது. இதனால் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் அநியாயமாகப் படு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

காத்தல் கடவுளாகிய கண்ணபரமாத்மா இது தொடர்பில் அசமந்தமாக இருந்ததற்கு எனது வன்மையான கண்டனத்தை தெரிவித் துக் கொள்கிறேன்.

ஈழத்தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைப் பதாக இருந்தால் அது ஜெனிவாத் தீர்மானத் தின் மூலமாகவே சாத்தியப்படும் என்பதால், அந்தத் தீர்மானம் நிறைவேற உங்கள் அருட் கடாட்சத்தை நீங்கள் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

விநாயகரின் அறிக்கையால் மாநாட்டில் அமைதி. அந்த நிசப்தத்தை கலைக்கும் வகை யில் புத்தபிரான் எழுந்தார்.

இந்த மாநாட்டில் நான் இருப்பதாக நினைத்து நீங்கள் நீதி வழங்க மறுத்துவிடா தீர்கள். நேற்று முன்தினம் கூட மல்வத்த அஸ்கிரிய பீடங்கள் பிரித் ஓதி தீர்மானத்தை தோற்கடிக்குமாறு என்னை வேண்டிக் கொண்டனர். நான் அதனை முற்றாக நிராகரித்து விட்டேன் என்றார்.

தொடர்ந்து யேசுபிரான் எழுந்தார். வன்னி யில் நடந்த போரில் நாங்கள் பாராமுகமாக இருந்ததாக விநாயகர் கூறியதை ஏற்றுத்தான் ஆகவேண்டும். இலங்கையில் தமிழ் மக்கள் படும் துன்பங்களுக்கு முடிவு கட்டப்பட வேண்டும்.

மக்களின் வாழ்விடங்களில் புத்தர் சிலை களை நிறுவுகின்றார்கள். இது மதங்களி டையே மோதலை ஏற்படுத்துவதை நோக்க மாகக் கொண்டது என்றார்.

இதன்போது எழுந்த கௌதம புத்தபிரான், அரச மரத்தைக் கண்டவுடன் அதில் என்னை இருத் தலாம் என்று இலங்கையின் தென்பகுதி மக்கள் நினைத்து அதனைச் செய்து வருகின்றனர்.

ஆனால் நான் அதனை ஏற்றுக் கொள் வில்லை என்றார்.

மாநாட்டிற்கு தலைமை வகித்த சிவன், ஜெனி வாத் தீர்மானம் பற்றி ஆராயலாம் என்று கூற,

வேகமாக எழுந்த விநாயகர் முறிகண்டியில் எனக்கு நடந்த அநீதியை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். புனித பிரதேசமாக இருந்த முறி கண்டி இன்று வர்த்தக மயமாக்கப்பட்டுள்ளது.

முன்பெல்லாம் ஏ-9 பாதையால் பயணிப்ப வர்கள் எனது ஆலயத்தில் இறங்கி வழிபாடு செய்துவிட்டுத்தான் செல்வார்கள்.

ஆனால், இன்று அப்படியல்ல. எல்லாம் தாம் நினைத்த பாட்டில் நடக்கிறது.

ஆட்சி- அரசு என்றால் முதலில் அதன் பொருள் தெரியவேண்டும். எனவே ஜெனிவாத் தீர்மானம் தோற்கடிக்கப்படவேண்டும் என நடத் தப்படுகின்ற பிரார்த்தனையை தேவலோகக் கட வுளர் சபை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்றார்.

விநாயகரின் தீர்மானத்தில் ஏதேனும் திருத் தம் உண்டா என்றார் கண்ணபரமாத்மா.

"திருத்தம்" என்பது இந்திய மத்திய அரசுக் குரியது என்று சக்தி கூற மாநாட்டில் சிரிப்பு ஒலி. தமிழ்க் கடவுளர் முருகன் எழுந்தார். விநாயகரின் தீர்மானத்தை பிரேரிப்ப தாகக் கூறினார். அதனை கௌதம புத்த பிரான் வழிமொழிய தேவலோகத்து மாநாடு நிறைவுற் றது. அனைத்து சமயங்களினதும் முழுமுதற் கடவுளர்கள் எழுந்து நின்று தங்கள் கைகளை உயர்த்தி ஆசீர்வதிக்கின்றனர். அவர்கள் ஆசீர் வதிக்கும் இடம் ஜெனிவாவில் நடக்கும் கூட்டத் தொடர்போல் இருக்கிறது.

# பாகிஸ்தானில் மனித உரிமைகள் மிக மோசமான நிலையிலுள்ளது

## மனித உரிமைக்குழு கவலை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் மனித உரிமைகள் மிக மோசமான நிலையில் இருப்பது குறித்து கவலை தெரிவித்துள்ள அந்நாட்டின் மனித உரிமைகள் குழு சிறுபான்மையினரை கொடுமைப்படுத்தல், இனக்கலவரம் போன்ற பிரச்சினைகள் உடனடியாக கவனிப்பட வேண்டும் எனஎச்சரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தானில் சமீப காலமாக • இந்துப்பெண்கள் கடத்தப்பட்டு கட்டாயமாக மதம் மாற்றப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இதற்கு பல தரப்பிலும் எதிர்ப்புகள் எழுந்துள்ள நிலையில் பாகிஸ்தான் மனித உரிமைகள் குழு இது குறித்து நேற்று முன்தினம் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் இது குறித்து கூறப்பட்டிருப்பதாவது,

மதக் கலவரங்களிலிருந்து சிறுபான்மையினரைக் காப்பதாக அரசு அளித்த உறுதிமொழிகளைக் காப்பாற்ற வேண்டும்.

சிறுபான்மையினர் கொடுமைப்படுத்தப்படும் பிரச்சினைகளை குடிமை மற்றும் இராணுவ அதிகாரிகள் மூலம் தீர்ப்பதற்கு அரசு விரைந்து முயல வேண்டும். பலுசிஸ்தான் மாகாணம் மற்றும் கராச்சி நகரில் மதம் மற்றும் இனக்கலவரங்கள் சிறுபான்மையினரைத் துன்புறுத்தல், சட்டம்- ஒழுங்கு சீர்குலைதல் போன்றவை அதிகரித்துள்ளன.

பலுசிஸ்தானில் கடந்தாண்டில் காணாமல் போனதாகக் கூறப்பட்டோரில் 173 பேரின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# ஐ.நா.- அரபு லீக்கின் சிறப்பு பிரதிநிதி அமைதிக்குழு சிரியாவிற்கு விரைவு

(டமாஸ்கஸ்)

சிரியாவில் இதுவரை இல்லாத அளவுக்கு நேற்று முன்தினம் நாட்டின் பல பகுதிகளில் கடும் சண்டை நடந்தது.

இதில் எத்தனை பேர் பலியானார்கள் என்பது தெரியவில்லை. இந்நிலையில் ஐக்கிய நாடுகள் அரபு லீகின் சிறப்பு பிரதிநிதி கோபி அனான் அனுப்பிய அமைதிக்குழு நேற்று முன்தினம் சிரியா வந்தடைந்தது.

தலைநகர் டமாஸ்கசின் அருகில் சிறை, விமான நிலையம், பிரான்ஸ் இராணுவத்தளம் ஆகியவையும் ஜனாதிபதி மாளிகையும் அமைந்துள்ள அல்மெஸ்ஸா பகுதியில் நேற்று முன்தினம் ஜனாதிபதி, இராணுவத்திற்கும் சிரிய விடுதலை இராணுவத்திற்கும் கடும் மோதல் நிகழ்ந்தது.

இதில் கிரேனேடுகள், ரொக்கெட்டுக்கள் ஏவப்பட்டன. இந்த மோதலில் மூன்று பயங்கரவாதிகளும் ஒரு பாதுகாப்பு வீரரும் பலியானதாக சிரிய அரசு தெரிவித்தது.

அதே போல் ஹமா மாகாணத்திலும் கடும் மோதல் நடந்தது.

இதற்கிடையில் ஐக்கிய நாடுகள் அரபு லீக்கின் சிறப்பு பிரதிநிதி கோபி அனான் அனுப்பி வைத்த 5 பேர் அடங்கிய அமைதிக்குழு டமாஸ்கஸ் வந்தது. சிரியாவில் உடனடியாக சண்டையை நிறுத்தி மனிதாபிமான உதவிகள் வழங்குவதற்கான சூழலை பேச்சுவார்த்தை மூலம் இக்குழு செய்யும் என கோபி அனானின் செய்தித் தொடர்பாளர் கூறினார்.

இந்நிலையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஜேக்கப் கெலன்பெர்கர், ரஷ்ய தலைநகர் மொஸ்கோவிற்குச் சென்றுள்ளார்.

அங்கு ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்கெய்லாவ்ரோவை சந்தித்து மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காகவாவது உடனடி சண்டை நிறுத்தத்தை வலியுறுத்தும்படி கோரியுள்ளார். (அ-2)

# மர்ம நபர்களின் துப்பாக்கிச்சூட்டில் குழந்தைகள் உள்ளிட்ட நால்வர் பலி

(பாரிஸ்)

பிரான்சின் தென்பகுதி நகரில் மர்ம நபர் ஒருவர் யூத பாடசாலை ஒன்றில் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் மூன்று குழந்தைகள் உட்பட நான்கு பேர் பலியாகினர். ஒருவர் காயமடைந்தார்.



பிரான்சில் உள்ள ஒஜார் ஹட்டோரா என்ற யூத பாடசாலையில் பெற்றோர் தங்கள் குழந்தைகளை விடச் சென்றிருந்தனர். அப்போது அங்கு கறுப்பு நிற இருசக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர் ஒருவர் அதிலிருந்து இறங்கி தன் கையில் இருந்த துப்பாக்கியால் கண்டுமூடித்தனமாக சுட்டார்.

துப்பாக்கிச் சத்தத்தை கேட்ட அங்கிருந்த குழந்தைகள் அலறியடித்துக் கொண்டு பாடசாலைக்குள் சென்றனர்.

இதில் பாடசாலை வாசலில் நின்று கொண்டிருந்த ஓர் ஆசிரியை மற்றும் மூன்று குழந்தைகள் பரிதாபமாக பலியாகினர். 17 வயது இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

துப்பாக்கிச்சூட்டை நடத்திய மர்ம நபர் தான் வந்த அதே இரு சக்கர வாகனத்தில் ஏறி கண்மூடித்திறப்பதற்குள் மறைந்து விட்டார்.

சம்பவ இடத்திற்கு நேரில் வந்த பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசி இது தேசிய சோக நிகழ்வு. குற்றத்தை செய்தவர் எங்கிருந்தாலும் பிடிக்கப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்படுவார் என உறுதியளித்துள்ளார்.

பிரான்ஸ் பிரதமர் பிரான் காயிஸ் பில்லான்,

நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகள் மற்றும் மதத்தலங்களில் விரைவில் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் என அறிவித்துள்ளார். (அ-2)

# திபெத்தில் விசாரணை செய்ய அனுமதி தாருங்கள்

## சீனாவை கோருகிறது அவுஸ்.

திபெத்தில் நடந்து வரும் தீக்குளிப்புகள் பற்றி விசாரிக்க உயர் அதிகாரி மற்றும் எம்.பி.க்களை அப்பகுதிக்கு அனுப்பி வைக்க அனுமதி அளிக்கும்படி சீனாவிடம் அவுஸ்திரேலியா கேட்டுள்ளது.

இவ்விவகாரம் குறித்து ஆஸி.வெளியுறவு அமைச்சர் பாப் கார் நேற்று கூறியதாவது,


திபெத்தில் நடந்த தீக்குளிப்பு விவகாரங்கள் குறித்து விசாரிக்க சீனாவுக்கான ஆஸி. தூதர் பிரான்சஜ் ஆடம்சன் சீன அரசிடம் அனுமதி கோரியுள்ளார். அதேபோல் ஆஸி.பாராளுமன்ற எம்.பி.க்கள் குழு ஒன்று திபெத்திற்கு வந்து பார்வையிடவும் அவர் அனுமதி அளிக்கும்படி கேட்டுள்ளார்.

சிச்சுவான் மாகாணத்தில் உள்ள திபெத் மடாலயங்களைப் பார்வையிட துணைத்தூதரும் அனுமதிக் கேட்டுள்ளார் என அவர் தெரிவித்தள்ளார்.

வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை இதுவரை திபெத்திற்குள் அனுமதிக்காத சீனா வெளிநாட்டுப் பிரதிநிதிகள் குழுவை எவ்வாறு அனுமதிக்கும் என சந்தேகம் எழுந்துள்ளது. (அ-2)

# இலங்கைக்கு எதிராக தீர்மானத்தால் தமிழர்களுக்கு தீர்வு கிடைக்காது

## வைகோ தெரிவிப்பு



இலங்கைக்குஎதிராக அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்தால் இலங்கைத் தமிழர்களுக்கு எவ்விதப் பயனும் கிடைக்கப்போவதில்லை. உள்நாட்டுப்போர் குறித்து அந்நாடு அமைத்த விசாரணை ஆணையத்தின் எல்.எல்.ஆர்.சி பரிந்துரைகளை அமுல் படுத்துவது தீர்மானத்தின் பிரதானமாக இருக்கின்றது என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

அவர் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

தமிழர்களின் மீது இலங்கை இராணுவம் நடத்திய இனவெறிப்படுகொலை, பாலியல்பலாத்காரம் குறித்து ஆணையத்தின் அறிக்கையில் இடம்பெறவில்லை. உலக நாடுகளின் எதிர்ப்பில் இருந்து தப்பிக்க அமைக்கப்பட்ட அந்த ஆணையத்தின் அறிக்கை போலியானது.

அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரிக்கப்போவதாக பிரதமர் அறிவித்துள்ளார். இலங்கைத் தமிழர்களுக்கு இழைத்த துரோகத்தில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம் என நினைத்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானம் தமிழர்களுக்கு நிவாரணியாக இருக்காது. தமிழர்கள் வசிக்கும் பகுதியில் இருந்து இலங்கை இராணுவத்தையும் பொலிஸாரையும் வெளியேற்றி விட்டு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.


இலங்கையின் வடக்குக் கிழக்கு பகுதிகளை பூர்வீகமாகக் கொண்டு பல நாடுகளிலும் புலம் பெயர்ந்துள்ள தமிழர்கள் அந்தந்த நாடுகளில் வாக்களிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பொது வாக்கெடுப்பின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுப்பதே சரியானதாக இருக்கும். இலங்கை அரசின் இனப்படுகொலை குறித்து ஒரு சுதந்திரமான விசாரணை அமைப்பைக் கொண்டு விசாரிக்க வேண்டும் என்றார். (அ-2)

# அருங்காட்சியகத்தில் திருடியவருக்கு 13 ஆண்டுகள் சிறைத்தண்டனை

சீனாவில் உள்ள ஷான்டோங் நகரில் அந்நாட்டை ஆண்ட கடைசி மன்னனின் அரண்மனை ஒன்று அருங்காட்சியமாக செயற்பாட்டில் உள்ளது. அருங்காட்சியகத்தில் அரசர் பயன்படுத்திய வாள்கள், பாத்திரங்கள், நாணயங்கள் என்று ஏராளமான விலை உயர்ந்த கலைப்பொருட்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த புகழ்பெற்ற அருங்காட்சியகத்துக்குள் ஷி பைக்குயி (வயது 27) என்ற விவசாயி நுழைந்து தங்கத்தில் செய்யப்பட்ட 9 வகையான கலைப்பொருட்கள், நகைகள் ஆகியவற்றை திருடிச் சென்றார். தப்பி ஓடும் போது 5 பொருட்களை அருங்காட்சியக வளாகத்திலேயே தவற விட்டார். மற்ற பொருட்களை அவர் விற்க முயன்றபோது பொலிஸில் சிக்கிக் கொண்டார். இந்த திருட்டு வழக்கில் ஈடுபட்ட ஷி பைக்குயிக்கு 13 ஆண்டுகள் சிறைதண்டனை விதித்து சீன நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (அ-2)

# டோங்கா நாட்டு கடைசி மன்னருக்கு மக்கள் அஞ்சலி



(நுகு அலோபா)

பசுபிக் தீவு நாடுகளில் ஒன்றான டோங்கா நாட்டின் கடைசி மன்னர் ஜார்ஜ் டுபோவூ தனது 63 ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானார்.

பசுபிக் பெருங்கடலில் உள்ள தீவு நாடுகளில் நியூசிலாந்து அருகில் உள்ளது டோங்கா நாடு. இது மொத்தம் 169 தீவுக் கூட்டங்கள் சேர்ந்த ஒரு நாடு.

கிறிஸ்தவ நாடான இதில் மன்னராட்சிதான் இதுவரை நடந்து வந்தது. மிகச்சிறிய நாடாகும்.

1970 இல் பிரிட்டனிடம் இருந்து விடுதலை பெற்று கடந்த 2006 இல் அப்போதைய மன்னர் இறந்தவுடன் அவரது மகன் ஜார்ஜ் டுபோவூ அடுத்த மன்னராக முடிசூடிக் கொண்டார்.

எனினும் அதைத் தொடர்ந்து அரசியல் சீர்திருத்தம் வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பி 2008 ஆம் ஆண்டு வரை ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. இதனால் 2010 இல் இங்கு பொதுத் தேர்தல் நடத்தப்பட்டு பார்லிமென்ட் மூலம் அமைச்சர்வை அமைக்கப்பட்டது.

பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு நாடு மாறிவிட்டாலும் மக்கள் இன்றும் மன்னராட்சியை மதிக்கின்றனர். செய்தி பரவிய பின் மக்கள் மன்னருக்கு கனத்த இதயத்துடன் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். (அ-2)

# பங்களாதேஷ் வென்றது ; இறுதிப்போட்டிக்கு சென்றது
# இலங்கை தோற்றது ; இந்தியா வெளியே சென்றது

## நாளை இறுதிப்போட்டியில் பங்களாதேஷுடன் மோதும் பாகிஸ்தான்



ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற போட்டியில் இலங்கை அணியை பங்களாதேஷ் அணி 3 விக்கெட்டுக்களால் தோற்கடித்தது. இதன்மூலம் இத் தொடரின் இறுதிப்போட்டிக்கு பங்களாதேஷ் அணி தகுதி பெற்றுள்ளது.

இத் தொடரின் கடைசி லீக் ஆட்டம் நேற்று நடைபெற்றது. இப் போட்டியில் பங்களாதேஷ் - இலங்கை அணிகள் மோதின. இலங்கை அணி வெற்றி பெற்றாலும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறாது என்பதால் இலங்கைக்கு இப் போட்டி சம்பிரதாயபூர்வமாகவே அமைந்தது.

ஆனால் பங்களாதேஷ் அணி இப் போட்டியில் வெற்றி பெற்றால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும் என்பதால் வெற்றிபெற கடுமையாக போராட வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது.

நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதனால் இலங்கை அணி முதலில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்தது.

டில்சானும், ஜெயவர்த்தனவும் ஆரம்ப வீரர்களாக களமிறங்கினர். ஜெயவர்த்தன 5 ஓட்டங்களில் நஸ்முல் ஹூசைனின் பந்தில் போல்டானார்.

அவரைத் தொடர்ந்து டில்சானுடன் சங்கக்கார ஜோடி சேர்ந்தார். இந்த இருவரையும் நஸ்முல் ஹூசைன் ஆட்டமிழக்கச் செய்தார். இதனால் இலங்கை அணி தொடக்கத்தில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

இதனை அடுத்து கபுகெதரவும் திரிமன்னேயும் இணைந்து அணியை மீட்கப் போராடினர். சிறப்பாக ஆடிய கபுகெதர அரைச்சதம் அடித்தார். அவர் 62 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். திரிமன்னே மற்றும் உபுல் தரங்க ஆகியோர் தலா 48 ஓட்டங்களில் ஆட்டமிழக்க மற்றவர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இதனால் இலங்கை அணி 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 232 ஓட்டங்களை எடுத்தது.

இதனை அடுத்து 233 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பங்களாதேஷ் அணி துடுப்பெடுத்தாட இருந்தது.

ஆனால் திடீரென மழை பெய்ததால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. இதனால் ஆட்டத்தின் ஓவர்கள் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 40 ஆக குறைக்கப்பட்டது.

40 ஓவர்களில் 212 ஓட்டங்கள் எடுத்தால் பங்களாதேஷ் அணி வெற்றி என்றும் அறிவிக்கப்பட்டது. தனது ஆட்டத்தை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி ஆட்டத்தின் இரண்டாவது ஓவரிலேயே நஸீமுதீன் விக்கெட்டை இழந்தது.

ஒரு கட்டத்தில் 6 ஓவர்கள் முடிவில் பங்களாதேஷ் அணி ஒரு விக்கெட் இழப்பிற்கு 39 ஓட்டங்களை எடுத்திருந்தது.

ஆனால் அடுத்தடுத்து இஸ்லாம், முஷ்பிகுர் ரஹீம் ஆகியோர் விக்கெட்டுக்களை இழந்து பங்களாதேஷ் தடுமாறினாலும் தமீம் இக்பால் நிலைத்து நின்று ஆடி அவ் அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்க உதவினர்.

இதேபோல சகீப் அல் ஹசனும் அதிரடி காட்டி அணியை வெற்றி பாதைக்கு அழைத்துச் சென்றனர். தமீம் இக்பால் 59, சகீப் அல் ஹசன் 56, நஷீர் ஹுசைன் 36 மற்றும் மமடுல்லா 32 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

37.1 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது பங்களாதேஷ் அணி


1984 ஆம் ஆண்டு முதல் நடைபெறும் ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் அணி இறுதிப்போட்டிக்கு தெரிவாகியமை இதுவே முதல் தடவையாகும்.

பாகிஸ்தான் அணி 9 புள்ளிகளைப் பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. பங்களாதேஷ், இந்திய அணிகள் 8 புள்ளிகளைப் பெற்ற போதிலும் இந்தியாவுடனான போட்டியில் பங்களாதேஷ் வென்றதால் அவ் அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

இத்தொடரில் இலங்கை அணி எந்த ஒரு போட்டியிலும் வெற்றி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் - பங்களாதேஷ் அணிகள் மோதும் இறுதிப்போட்டி நாளை 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## சல்மான் பட் நம்ப வைத்து அமீரை ஏமாற்றி விட்டாராம்



சூதாட்ட புகாரில் சிக்கி சிறைத் தண்டனை அனுபவித்த பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் மௌஹமட் அமீர் உடனிருந்த சல்மான் பட் போன்றவர்களே நம்பவைத்து ஏமாற்றி சூதாட்டத்தில் சிக்க வைத்ததாக தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இரண்டு நோபோல்களை வேண்டும் என்று வீசியதற்காக தடையையும், சிறைத்தண்டனையையும் அனுபவித்த இளம் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் மௌஹமட் அமீர் தன்னை தந்திரமாக சூதாட்டத்தில் சிக்க வைத்தார் மஷார் மஜித் என்று கூறியுள்ளார்.

சல்மான் பட் இதிலிருந்து தன்னை விடுவிக்க வேண்டியவர். ஆனால், பொறியில் சிக்க வைத்து உதவி புரிந்துள்ளார் என்பதை நினைக்கும் போது பட் மீது ஏகப்பட்ட கோபம் வருகின்றது என்று மேலும் கூறியுள்ளார்.

அலி என்பவருக்கு வங்கிக் கணக்கு விபரங்களை குறுந்தகவல் (SMS) செய்ததாகவும், ஆனால் வங்கிக் கணக்கு விபரங்கள் எதற்கு என்று அவருக்கு பல செய்திகளை அனுப்பியும் எந்த பதிலும் வரவில்லை என்றும் பணம் எதுவும் பெறவில்லை எனவும் கூறியுள்ளார்.

ஆனால் இந்த குறுஞ்செய்திகளை அனுப்பியதால் அமீர் வசமாக மாட்டிக் கொண்டார் என்று சூதாட்ட தரகர் மஷர் மஜீத் அமீரை அச்சுறுத்தியுள்ளார்.

அதாவது அலியுடன் அமீர் நடத்திய உரையாடல் குறுஞ்செய்திப் பரிமாற்றங்கள் ஐ.சி.சி சூதாட்டப் தடுப்புப் பிரிவினர் பார்வைக்குச் சென்றதாக மஷர் மஜீத் அமீரை அச்சுறுத்தியுள்ளார்.

இந்த நெருக்கடியில் இருந்து தன்னால் அமீரை காப்பாற்ற முடியும் என்றும் அதற்காக அமீர் இரண்டு நோபோல்களை வீச வேண்டும் என்றும் மஜித் கூறியதாக தெரிவித்துள்ளார்.

மேலும் அமீர் கூறுகையில், நான் எவ்வளவு முட்டாளாக இருந்திருக்கின்றேன். ஐ.சி.சி. உளவு பற்றி கூறிய மஜீத் என்னை இரண்டு நோபோல்களை வீசக் கோருகிறார் இந்த முரண்பாட்டைக் கூட நான் யோசிக்காத முட்டாளாக இருந்தேன். ஏனெனில் நான் பதற்றத்தில் இருந்தேன் என்றார்.

இதனால் இரண்டு நோபோல்களை வீசவில்லை என்றால் நாம் காப்பாற்றப்படமாட்டோம். அவர்கள் உண்மையில் எனக்கு உதவி புரிகின்றார்கள் என்று முட்டாள் தனமாக நம்பினேன்.

அதைத்தான் நான் அப்போது யோசித்துக் கொண்டிருந்தேன், கடைசியில் நோபோல்களை வீசிவிட்டேன். நான் பணத்திற்காக இதைச் செய்ததாகவே அனைவரும் கருதுகின்றனர்.

சல்மான் பட் தனக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார் என்றும் அவர் எனக்கு பெரிய சகோதரர் போல் தான் இருந்தார். ஆனாலும் அவர் எனது அப்பாவித்தனத்தை பயன்படுத்திக் கொண்டார்.

காரில் மஷர் மஜீத் என்னிடம் இதையெல்லாம் பேசிய போது பின் இருக்கையில் தான் சல்மான் பட் அமர்ந்திருந்தார் என்றும் அமீர் கூறினார்.

## டேவிட் பெக்காமை பின்தள்ளிய மெஸ்சி



கால்பந்து உலகில் அதிகம் சம்பாதிக்கும் வீரர்கள் பட்டியலில் டேவிட் பெக்காமை பின்னுக்கு தள்ளி லியனல் மெஸ்சி முதலிடம் பிடித்தார்.

கடந்த 2011 ஆம் ஆண்டில் கால்பந்து மூலம் அதிகம் சம்பாதித்த வீரர்களின் பட்டியலை பிரான்ஸ் கால்பந்து நாளிதழ் வெளியிட்டுள்ளது.

இதில் பார்சிலோனாவின் ஆர்ஜென்ரீன நட்சத்திர வீரர் லியனல் மெஸ்சி 33 மில்லியன் யூரோ வருமானத்துடன் முதலிடம் பிடித்துள்ளார்.

நீண்ட காலமாக இந்த பட்டியலில் முதலிடத்தில் இருந்து வந்த இங்கிலாந்து அணியின் முன்னாள் அணித்தலைவர் டேவிட் பெக்காம் 2-வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.

தற்போது லொஸ் ஏஞ்சல்ஸ் கலக்சிக்காக விளையாடி வரும் பெக்காமின் கடந்த ஆண்டு வருமானம் 31.5 மில்லியன் யூரோ ஆகும்.

ரியல் மட்ரிட் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோ 29.2 மில்லியன் யூரோ வருமானத்துடன் 3-வது இடத்தில் உள்ளார்.

பார்சிலோனாவில் இருந்து ரஷ்யாவின் ஆன்ஷ்கி மக்கச்சாலே அணியில் இணைந்த சாமுவேல் ஈடோ 23.3 மில்லியன் ரூபாய் வருமானத்துடன் 4-வது இடத்தில் உள்ளார்.

பயிற்சியாளர்கள் பட்டியலில் ரியல் மட்ரிட்டின் ஜோஸ் மோரின்ஹோ 14.8 மில்லியன் யூரோ வருமானத்துடன் முதலிடம் பெற்றுள்ளார்.

சமீபத்தில் பாரிஸ் செயின்ட் ஜேர்மன் அணியில் இணைந்த கார்லோ அன்சலாட்டி 13.5 மில்லியன் யூரோவுடன் 2-வது இடத்திலும், பார்சிலோனாவின் பயிற்சியாளர் பெப் கார்டியாலா 9.5 மில்லியன் யூரோ வருமானத்துடன் 3-வது இடத்திலும் உள்ளனர்.

## கிரிக்கெட் சூதாட்ட தரகர் சுட்டுக்கொலை

பாகிஸ்தானைச் சேர்ந்த கிரிக்கெட் சூதாட்ட தரகர் முகமது சவூகர் (வயது 35) லாகூரில் உள்ள அடுக்கு மாடிகுடியிருப்பில் வசித்து வந்த இவர் நேற்றுமுன்தினம் அதிகாலை மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் 18ஆம் திகதி நடந்த இந்திய-பாகிஸ்தான் லீக் போட்டியில் இந்தியா பாகிஸ்தானை வீழ்த்தியது. இப்போட்டி நடந்து முடிந்த சில மணித்தியாலத்தில் அவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

எனவே இந்தப் போட்டியின்போது நடந்த சூதாட்டக்காரணமே அவர் கொல்லப்பட்டிருக்க லாம் என்று கருதப்படுகிறது. அவ்வரை கொன்றது யார்? என்று தீவிரமாக விசாரிக்கப்பட்டு வருகிறது.

# கொழும்பில் பிக்குகள் இருவர் படுகொலை

(கொழும்பு)

கோட்டே ரஜமஹா விகாரையில் தங்கியிருந்த பௌத்த பிக்குகள் இருவர் இனந் தெரியாத நபர்களால் நேற்றிரவு கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வண.பொரலஸ்கமவ குணரட்ன தேரர் (வயது 65), வண.பிட்டிகல தினசிறி தேரர் (வயது 75) ஆகியோரே பலியானவர்களாவர். இவ்வரு பிக்குகளும் நீண்ட காலமாக இவ் விகாரையில் வசித்து வந்தவர்களாவர்.

இப்பிக்குகளில் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார். மற்றொருவர் காயமடைந்த நிலையில் களுபோவில வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது உயிரிழந்தார். இதனால் அப் பகுதியில் பரபரப்பு நிலவியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-11)

## மீண்டும் ...

செய்துள்ளதுடன் தொடர்ந்தும் செய்து கொண்டு வருகிறது. இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் எதிர்காலத்தில் மேற்கொள்ளாது என இந்தியா எதிர்பார்க்கிறது.

ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தின் விபரங்கள் முழுமையாகத் தெரியவில்லை. ஆயினும் இத்தீர்மனத்திற்கு முழுமையான ஆதரவை வழங்குவோம் என்பதை இந்தச் சபைக்கு உறுதியளிக்கிறேன் என பிரதமர் மன்மோகன் சிங் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## சுயாதீன ...

ஆணைக்குழுவுக்கான அமெரிக்கத் தூதுவர் இலீன் சம்பர்லைன் டொனாஹோ கூறியுள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது,

இவ்விடயம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் நம்பகரமான விசாரணைகளை மேற்கொள்ளத் தவறிவிடுமோ என நாம் அச்சம் கொண்டுள்ளோம்.

இந்நிலையில் இத் தீர்மானமானது நம்பகரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை அரசாங்கத்தை ஊக்குவிக்கும் ஒரு நகர்வாக அமையுமெனநாம்எதிர்பார்க்கின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் எந்த ஒரு கொள்கை விடயத்திலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை அது கட்டுப்படுத்தாது. ஆனால் இலங்கையில் இடம்பெற்ற போரின்போது 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாக ஐ.நா குழுவினால் தெரிவிக்கப்பட்ட படைத்தரப்பின் போர் மீறல்களை அரசாங்கம் மறைக்க முடியாது என்பதை வலியுறுத்துவதற்கான ஒரு வழியாக அமெரிக்கா இத்தீர்மானத்தை பார்க்கிறது.

'மூன்றாண்டுகளுக்கு முன்னர் இடம் பெற்ற இத்தகைய மனித உரிமை மீறல்கள் குறித்த தீர்மானத்துக்கு இராஜதந்திர இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு கடுமையாகப் போராட வேண்டியிருந்தது என்றும் மேலும் கூறியுள்ளதாக அமெரிக்க ஊடகம் தெரிவித்துள்ளது. (எ-11)




# விபத்தில் இருவர் படுகாயம்

(கரவெட்டி)

மோட்டார் சைக்கிள் – துவிச்சக்கர வண்டி விபத்தில் இருவர் பலத்த காயங்களுடன் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 3 மணிக்கு வல்லை வெளி ஆலை விழுந்தான் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளும் போலங்கன் பகுதியில் இருந்து குஞ்சர் கடைப்பகுதி நோக்கி சென்ற துவிச்சக்கர வண்டியும் ஒன்றுடன் ஒன்று மோதியதிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கற்கோவளம் முனியப்பர் கோவில் பகுதியைச் சேர்ந்த ப.திவாகர் (வயது 17) என்பவரும் துவிச்சக்கரவண்டியில் பயணித்த கரணவாய் குஞ்சர் கடைப் பகுதியைச் சேர்ந்த சி.விபுலானந்தன் (வயது 55) என்பவரும் படுகாயமடைந்தனர். இதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த குடும்பஸ்தர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (எ-3,24)

## இலங்கைக்கு எதிரா ...

வடக்கில் தொடர்ந்து அதிக அளவிலான இராணுவத்தினர் இருப்பதால் சுதந்திரமாக நடமாட முடியவில்லை தம்மால் சுதந்திரமாக ஏதும் கருத்துக் கூற முடியவில்லை என்றும் வேறு சிலர் கூறினர்.

வவுனியாவைச் சேர்ந்த சிங்களவரான ஒருவர் கருத்து தெரிவிக்கையில், கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்ற அதே வேளை, யுதத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு மட்டுமே நீதி வழங்கப்படவேண்டும் என்ற தோரணையில் இந்த பிரேரணை அமைந்திருப்பது வருத்தத்திற்குரியது என்றார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் என்று தமிழ் மக்களைப் பற்றி மட்டுமே பேசப்படுகின்றது. ஆனால் சிங்கள மக்களும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களைப் பற்றி பேசுவதற்கு எவருமில்லை. அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்காக நீதி வழங்குமாறு கேட்பதற்கு எவருமில்லை. யுத்த காலத்தில் பௌத்த குருமார்கள் கொல்லப்பட்டார்கள். அவர்களது கொலைக்குக் காரணமானவர்கள் இன்று பாராளுமன்றத்தில் இருக்கின்றார்கள். ஆனால் சிங்கள மக்களுக்கு நீதி வழங்கு வதற்குதான் எவருமில்லை என்றார் அவர் என பி.பி.சி.கூறியது. (எ-11)

## இந்தியாவின் ...

இந்நிலையில் இந்தியாவின் இம் முடிபால் ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரின் புதிய சூழ்நிலைகள் குறித்து வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஸ்ணாவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதன்போது ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து பீரிஸ் இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு விரிவாக விளக்கி கூறியுள்ளார்.

ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் முன்வைக்கப்பட்டுள்ள இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்காது என முன்னர் எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

ஆனால் தமிழக அரசியல் கட்சிகளின் தீவிரமான அழுத்தங்களை அடுத்து இத் தீர்மானத்தை சில திருத்தங்களுடன் ஆதரிக்க இந்தியா முடிபு செய்துள்ளது.

அத்துடன் இவ்விவகாரத்தில் தெளிவான நிலை எடுக்காமல் காலம் தாழ்த்தினால், அது தமிழ்நாட்டில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடமும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களிடமும் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் விளங்கப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில், இத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படும் நாள் நெருங்கி வருவதாலும், இந்தியாவின் நிலைப்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாகவும் அந்நாட்டின் ஆதரவை பெற்றுக் கொள்ளும் நோக்குடன் பீரிஸ் ஜெனிவாவில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அதேவேளை இலங்கைக்கு எதிரான தீர்மானம் நாளை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளமை தெரிந்ததே. (எ-11)

# ஊரெழு பர்வதவர்தனி ஆலயத்தில் பெறுமதியான தேர் சிற்பங்கள் திருட்டு

ஊரெழு கிளானைப்பதி பர்வதவர்தனி ஆலயத்தில் கடந்த 3-ம் திகதி இரவு தேர் முட்டிக் கதவினை உடைத்து தேரில் இருந்த சிற்பங்கள் திருடப்பட்டுள்ளன.

தேரில் இருந்த 4 குதிரை வாகனங்கள், 13 யாளிக் கட்டைகள், 6 விக்கிரகம், 5 அன்னக் கட்டைகள், 6 பூதங்கள் என்பன திருடப்பட்டுள்ளன.

இவ்வாறு திருடப்பட்டுள்ள சிற்பங்களின் பெறுமதி சுமார் 5 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பெறுமதி மிக்கதும் அரிய பொக்கிஷமானதுமான இவற்றைக் கண்டுபிடித்து ஒப்படைப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும் என மேற்படி ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (ந-78)

# சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய இளைஞன் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

திருமணம் செய்வதாகக் கூறி சிறுமி ஒருவரை அழைத்துச் சென்று வன்புணர்வுக்குட்படுத்திய நபர் ஒருவர் தெல்லிப்பழை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் தெல்லிப்பழையில் இடம்பெற்றுள்ளது.

தெல்லிப்பழையைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவர் 13 வயது சிறுமியை மிகக் குறுகிய காலமாக காதல் செய்து வந்துள்ளார்.

இக் காதல் எல்லை மீறிப் போகவே குறித்த சிறுமியினை திருமணம் செய்வதாகக் கூறி அழைத்துச் சென்று அப்பிரதேசத்தில் உள்ள வீடென்றில் வைத்து சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்தியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக சிறுமியின் பெற்றோர்கள் தெல்லிப்பழை பொலிஸாரிடம் முறையிட்டதனை அடுத்து பொலிஸாரினால் பிரஸ்தாப இளைஞன் கைது செய்யப்பட்டார்.

சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-4)

## புலிகளின் ...

இலங்கை அரசாங்கத்தினால் மனித உரிமைகள் மீறப்பட்டதாக அமெரிக்காவின் மூலம் ஜெனிவா நகரில் மனித உரிமைகள் பட்டயம் என்ற போர்வையில் ஒரு பிரேரணை முன்வைக்கப்பட்டது.

இதேபோன்று சனல் 4 தொலைக் காட்சியில் மனித உரிமைகள் மீறப்பட்டதாக செய்திகள் வெளியிடப்பட்டன. அவ்வாறு என்றால் எமது ஜனாதிபதியின் வழிகாட்டலில் இராணுவத்தின் மூலம் தமிழ்ச் செல்வனின் குடும்பம், சூசையின் குடும்பம், பிரபாகரனின் தாயார் போன்றோரை காப்பாற்றியதைப் பற்றியெல்லாம் கூறாமல் எமது நாட்டுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முயல்கின்றார்கள்.

எமது நாட்டில் யுத்தத்தை முடிபுக்குக் கொண்டு வந்தது மட்டுமல்லாது இன்று நாட்டில் அனைத்துப் பிரதேசங்களிலும் அபிவிருத்திகள் நடைபெற்றுக் கொண்டிருப்பது இன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தினால்தான் என்றார்.

இந்நிகழ்வில் 22ஆம் 23ஆம் படையணியைச் சேர்ந்த இராணுவ உயர் அதிகாரிகள் கலந்து கொண்டதுடன் இராணுவத் தளபதிக்கு அளிக்கப்பட்ட இராணுவ மரியாதை அணிவகுப்பையும் ஏற்றுக்கொண்டார். (எ-11)

## புதுக்குடியிருப்பு ...

நேற்றுமுன்தினம் வழங்கப்பட்ட இடைக் காலத் தடை உத்தரவு காரணமாக பிற்போடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தேர்தல் கடமைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மறு அறிவித்தல் வரும்வரை தங்களுக்கான தேர்தல் கடமைகளில் இருந்து தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ளீர்கள்.

தங்களால் இதுவரை வழங்கப்பட்ட பெறுமதிமிக்க சேவைக்கும் சிறப்பான ஒத்துழைப்பிற்கும் தேர்தல்கள் திணைக்களத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தேர்தலுக்கான புதிய திகதி தேர்தல் செயலகத்தால் தெரியப்படுத்தப்பபட்ட பின் வழமை போன்று தேர்தல்கள் பணிகள் மற்றும் நடவடிக்கைகள் தொடரும் என்பதையும் தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன் என அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஏ)

## இலங்கைக்கு ...

விஜயம் செய்வதற்கு முன்னதாக தமது அலுவலக பிரதிநிதிகளை அனுப்பி வைக்கத் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி வைத்திலிங்கம் (சாமியார்)

நெடுந்தீவு மேற்கு 2ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் இல.907, கட்சன் வீதி, வட்டக்கச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட சாமியார் என்று செல்லமாக அழைக்கப்படும் சின்னத்தம்பி வைத்திலிங்கம் 20.03.2012 நேற்று செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும் செல்லம்மாவின் அன்புக் கணவரும், விக்னேஸ்வரன், யோகநாதன், சரஸ்வதி (ஆசிரியை கிளி/ இராமநாதபுரம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கதிரவேலு, கோவிந்தபிள்ளை, மற்றும் சரவணமுத்து (வட்டக்கச்சி), சுப்பையா (பாண்டியன்குளம்), தையல்நாயகி (நெடுந்தீவு), காலஞ்சென்ற தையல்முத்து மற்றும் தனுஷ்கோடி (வட்டக்கச்சி), சின்னம்மா (இராமநாதபுரம்), இலட்சுமி (பெரியகுளம்), காலஞ்சென்ற ரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சசிமாலா, புஸ்பராணி, காலஞ்சென்ற ஜெயக்குமார், ஆகியோரின் அன்பு மாமனாரும், குணேஸ்வரி, சீதேவிப்பிள்ளை, இந்திராணி, சரஸ்வதி, காலஞ்சென்ற தம்பையா மற்றும் சுந்தரம், பரமேஸ்வரி, சோமசுந்தரம், கோபாலபிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும், கீர்த்தனா, அனித்தா, அகர்சன், லோஜனன், லக்சன் (சுவிஸ்), ஜனனி, கஜானி, யாழினி (கிளி/ வட்டக்கச்சி மகா வித்தியாலய மாணவிகள்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (21.03.2012) புதன்கிழமை பி.ப. 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மம்பில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.907, கட்சன் வீதி, வட்டக்கச்சி. (C-6121) தகவல்: குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அச். கோ. ஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.